உ

# அருள் ஒளி




இணுவில் அருள்மிகு பரராசசேகரப் பிள்ளையார் கோவில்

வெளியீடு

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

தெல்லிப்பழை, இலங்கை

2016

114

# சேக்கிழார் சுவாமிகள் குருபூசை
## 08-06-2016



தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதம் போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி.




உ

# அருள் ஒளி

**(மாதாந்த சஞ்சிகை)**

ஆசிரியர்

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்

வைகாசி - ஆனி மலர்

2016

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

e-mail : thurkaiammantemple@gmail.com
Face book: tellidurga@gmail.com

பதிவு இல. : ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3


## வைரவிழாக்கண்ட அகில இலங்கை இந்துமாமன்றம்

1955ம் ஆண்டு தலைநகர் கொழும்பில் சான்றோர் ஒன்று கூடி ஆரம்பித்த அகில இலங்கை இந்துமாமன்றம் அறுபது ஆண்டுகள் கடந்து தன்பணி தொடர்வது பெருமைக்குரிய விடயம் ஆகும். இம் மாமன்றத்தை புகழ் பூத்த அறிஞர்கள் தலைமை தாங்கி தொடர்ந்து வழிநடத்தி வந்துள்ளனர். இலங்கையில் பிரபல சிவில் சேவை அதிகாரியாகவும் பின் உயர்ஸ்தானிகராகவும் விளங்கிய அமரர் சி. குமாரசுவாமி, இலங்கையில் சிவில் நிர்வாகத்தில் உயர் பதவிகளை வகித்தவரும் அமைச்சராகவும் விளங்கிய அமரர் சேர். கந்தையா வைத்தியநாதன், உயர் நீதிமன்ற நீதியரசராக விளங்கிய அமரர் பொன். ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள், புகழ்பூத்த சட்டத்தரணியும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத் தலைவராக விளங்கிய அமரர் S. சோமசுந்தரம் அவர்கள், உயர்நீதிமன்ற நீதியரசர் அமரர் சிவசுப்பிரமணியம் அவர்கள், இன்றும் எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் கணக்காளர் மனிதநேய மாமணி இறைசிரோரத்தினம் திரு ஏ. கைலாசபிள்ளை அவர்கள் மாமன்றத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று வழிநடத்தினார்கள். இப் பெரியார்கள் வரிசையில் இந்து மாமன்றத்தின் வைரவிழாக்காலத் தலைவராக பிரபல சட்டத்தரணி திரு.கந்தையா நீலகண்டன் அவர்கள் மாமன்றத்தை ஆற்றுப்படுத்தி வருகிறார்கள்.

அகில இலங்கை இந்து மாமன்றம் இலங்கை வாழ் இந்துக்களின் குரலாக எவ்வேளையும் குரல் கொடுத்து வருவது நாம் அனைவரும் அறிந்ததே. கடந்த 60 ஆண்டுகளாக இந்துக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கு துணிந்து குரல் கொடுத்து வாதாடிவரும் ஓர் உன்னத நிறுவனமாக இயங்கி வருகிறது. நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழலில் அகதிகளாக்கப்பட்டு மக்கள் அல்லற்பட்ட வேளையில் இந்துமாமன்றம் எமது சமயத்தின் பெயரால் ஆற்றிய தொண்டுகள் மறக்க முடியாதவை. வன்னியில்


பொது நூலகம்
யாழ்ப்பாணம்

நடைபெற்ற உக்கிரப் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாமன்றம் பேருதவிகளை செய்து வருகின்றது. போரில் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக தமிழ் மாணவர்களுக்கு பல மில்லியன் ரூபா இந்துமாமன்றம் வழங்கி அவர்கள் கல்வியைத் தொடர ஆவன செய்துள்ளது. இந்து மாமன்றத்தின் அறிவு சார்ந்த விருத்திப் பணிகள் பலரது வரவேற்பைப் பெற்றுள்ளது. காலத்திற்கு காலம் இந்து மாமன்றம் நடாத்திய ஆராய்ச்சி மாநாடுகளும் கருத்தரங்குகளும் மிகப் பயனைத் தந்துள்ளது. காலாண்டு மலரான இந்து ஒளி சஞ்சிகை முதல் பல பயன்தரு நூல்களை பல இலட்சம் ரூபா செலவில் மாமன்றம் வெளியிட்டமைமை மறக்க முடியாது. எங்கள் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அம்மா அவர்களின் சேவையைப் பாராட்டி 3 நூல்களை மாமன்றம் வெளியிட்டமை எமக்குப் பெருமை தரும் விடயமாகும். எமது துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற்கும் இந்துமாமன்றம் காலத்திற்கு காலம் செய்த உதவிகள் என்றும் நினைவில் கொள்ளத்தக்கவை.

இந்து மாமன்றம் நாடு முழுவதும் சிவப்பணி ஆற்றக்கூடிய இளைஞர்களை ஒன்று திரட்டி வருகிறது. பாடசாலைகள் ஊடாக சிவதொண்டர் அமைப்பை உருவாக்கி வருவது குறிப்பிடத்தக்கது. வடபகுதியில் மாமன்றப் பணிகளுக்காக நல்லூரில் பிராந்திய அலுவலகத்தை நிறுவி செயற்பட்டு வருகிறது. நல்லூரில் நிறுவப்பட்டுள்ள இந்து ஆராய்ச்சி நூல் நிலையம் பல பெறுமதிமிக்க இந்து ஆய்வு நூல்களை பேணி வருவது எமது சந்ததிக்கு பெரும் பயனாகும். இந்து மாமன்றத்தின் வைரவிழாக்குறித்து 1284 பக்கங்களைக் கொண்ட சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளது. அம் மலர் ஈழத்து இந்து மதத்தவரின் பெரும் பொக்கிசமாக திகழும் என்பதில் ஐயமில்லை. மிகச் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் அறிஞர்களின் உரைகள் அம் மலரில் அடங்கி இருப்பது சிறப்பம்சம் ஆகும். வைரவிழாக் கண்ட இந்துமாமன்றம் சூரிய, சந்திரன் உள்ளவரை நிலை பெற்று விளங்க துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்

## வாழ்த்துகிறோம்

**2016-05-28இல் அகவை ஐம்பத்தைந்தை நிறைவு செய்துள்ள**

**தலைவர்**

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின்**

**சமய, சமூகப் பணிகள் சிறப்புற துர்க்கை அம்பாளின் அருளுடன்**

**உடல், உள ஆரோக்கியத்துடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.**

**நிர்வாக சபை**

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், துர்க்காபுரம் மகளிர் இல்லம்**

# இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோவில்

**கரும்பும் இளநீரும் காரெள்ளும் தேனும்**
**விரும்பும் அவல்பலவும் மேன்மேல் - அருந்திக்**
**குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்**
**கணபதியே இக்கதைக்குக் காப்பு.**

**- விநாயகர் புராணம்**

**அனுவில் மதத்தை யடக்கியெந் நாளும்**
**இனுவில் இலகியெமை யாளும் குணமணி ஓம்**
**சீரார் பரராசசேகரப் பிள்ளையார்**
**பேரார் பெருமைகளைப் பேசு.**

**ஏரார் இனுவில்வாழ் எந்தை கணபதியின்**
**தாரார் திருவடியைத் தாள்பணிவோர் - ஆரா**
**அமிர்தம்போல் வாழ்வர் அருட்செல்வம் சூழ்வர்**
**தமிழுள் எவுந் தழைத்து.**

**- திருமுருக கிருபானந்த வாரியார்**

சிவபூமியாம் யாழ்ப்பாணம் காங்கேசன் துறை பெருந்தெருவின் வடக்கே நாலு கல் தொலைவில் அமைந்த திருவூராம் இனுவில் கோயில்வாசல் சந்தி எனப்படும் புனிதமான இடத்திலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் மானிப்பாய் வீதியில் 200மீற்றர் தொலைவில் தென்பால் இனுவில் கந்தசாமி கோயிலை அடுத்து வானுயர் கோபுரத்துடன் வனப்புமிக்க கோயிலாக அமைந்துள்ளது இனுவில் ஸ்ரீ பரராசசேகரப்பிள்ளையார் கோவில்.

இலங்கையின் வடபுலத்தில் கி.பி. 12–17ஆம் நூற்றாண்டு காலத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளாகிய தமிழ் மன்னர்கள் அரசாண்டனர். இப்பரம்பரையில் 11ஆவது மன்னனாக அரசாண்டவன் பரராசசேகர மன்னன். இவனுடன் தம்பி செகராச சேகரனும் பின் ஆட்சி புரிந்தான் எனப் பல சான்றுகள் கூறுகின்றன.

பரராசசேகர மன்னன் பல வளங்களும் மலிந்த வனப்புமிக்க நல்லூரைத் தலை நகராகக் கொண்டு அரசாண்டான். இவன் வீரமும், நிர்வாகத் திறமையும், மக்களிடம் அன்பும் கருணையும் ஆன்மீகச் சிந்தனை யும் மிக்கவனாக இருந்ததால் ஆங்காங்கே பல விநாயகர் ஆலயங்களை அமைத்தான். பக்தி மேலீட்டினால் வீதியுலாவரும்போது பல சீரும் சிறப்பும் இயற்கை வனப்பும் கூடிய இனுவில் பகுதியும் இவனைக் கவர்ந்தது. பரராசசேகரப்பிள்ளையார் கோயிலின் கீழ்த்திசையில் இரு குளங்கள் காணப்பட்டன. தென்திசையில் செந் நெல்லும் கரும்பும் வடபகுதியில் பருத்தியும் கூடுதலாகப் பயிரிடப்பட்டிருந்தன. இப்பயிர் வகைகளுடன் முக்கனி மரங்களும் நறுமணங்கமழும் மலர்ச்செடிகொடிகளும் கமுகு, தென்னை, மூங்கில், பனையாகி யனவும் செழித்து வளர்ந்திருந்தன. (இன்றும் குளக்கரை, பருத்தியடைப்பு என்ற பெயர்கள் எமது பேச்சு வழக்கில் பேசப்படுவது இதற்குச் சான்றாகும்)

திருவருள் கைகூடவும் விநாயகப் பெருமானின் அமைவிடம் அரசனால் பேருவகையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டது. தெரிவு செய்த இடத்தில் பரராசசேகரன் மன்னனின் ஆணையில் அவனது பணியாளர்களினால் கட்டுவிக்கப்பட்டதே இவ்வாலயம். பொதுமக்கள் தமது பக்தி

மேலீட்டினால் இறைவழிபாடு செய்யவும், இறைபணியாற்றவும் துதிபாடவும் தலைப் பட்டனர். ஆலயம் பூசகர்களால் ஆகம விதிப்படி பூசைகள் செய்து அருள் பொலி விக்கப்பட்டது. பரராசசேகரனால் கட்டப் பட்டதனால் இவ்வாலயம் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் என விளங்கப் பட்டுள்ளது.

பரராசசேகர மன்னன் கோவில் அமைந்த துடன் தனது மந்திரி, பிரதானி களுடன் அடிக்கடி வந்து வணங்கினா னெனச் சான்றுகள் கூறுகின்றன. மன்னன் பிரதானி களுடன் இங்கு வந்து வணங்கிய தால் பெருமையடைந்த மக்கள் அதனைக் குறிக்க கோயில் உள்வீதியில் ஓவியமாக வரைந் துள்ளமை இதற்குச்சான்றாகும். சிங்கைப் பரராசசேகரன் கி.பி. 1475ஆம் ஆண்டளவில் ஆட்சிக்கு வந்தவன் எனவும் இக்கோவிலைக் கட்டுவித்தான் எனவும் அறியமுடிகிறது. ஏறக்குறைய 525 ஆண்டுகள் தொன்மை வாய்ந்ததாகவும் வரலாற்றுச் சிறப்புமிக்கது மான இவ்வாலயம் பலராலும் பாராட்டப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்கோயில் அமைக்கப்பட்டதும் மூலமூர்த்தியாக அமைந்துள்ள விநாயகப் பெருமானின் திருவுருவச் சிலை தென்னிந்திய சிற்ப வல்லுநர்களால் வடிவமைக்கப்பட்டு இங்கு எடுத்துவந்து பிரதிஷ்டை செய்யப்பட்டதெனக் கூறுவர். சிறந்த அருட்பொலிவோடு அமைந்த திருமுகத்தைக் கொண்ட இத்திருவுருவம் இப்பதியில் அருட்பார்வை செலுத்துகிறது. அக்காலம் தொட்டு கர்ப்பக்கிரகத்தில் பிரதிஷ்டை செய்த மூலமூர்த்தியை பக்தியோடு மஞ்சனமாட்டி உள்ளன்போடு மக்கள் வழிபட்டனர். மக்களின் அளவற்ற பக்தியால் மகிழ்ந்த எம்பெருமான் அருள்மாரி பொழிகின்றார்.

இப்பெருந்தலத்தில் ஒரு பெரிய மடம் இருந்தது. கோயிலுக்கு வரும் அடியார்கள் இளைப்பாறவும், தமது நேர்த்திக்கான பொங்கல் போன்ற கடமைகளைச் செய்யவுமே மடம் அமைந்தது. பொது மக்களின் இறைவழிபாட்டிற்கு இந்த மடம் பெரிய பங்காற்றியது. 17ஆம் நூற்றாண்டின் மத்தியில் யாழ்ப்பாண மண் போர்த்துக் கேயரால் கைப்பற்றப்பட்டபோது இந்துசமய கோயில்கள் யாவும் இடித்துச் சேதமாக்கப் பட்டன. பரராசசேகரப் பிள்ளையார் கோயிலை இடிக்கவந்த அணியினருக்கு இவ்வூர் மக்கள் இது கோயிலன்று மடம் என்று கூறியதால் கோயில் காப்பாற்றப் பட்டது இப்போது மாலையில் உள்வீதியுலா வரும் சிறிய விநாயகர் உருவச்சிலையை மடத்தின் வாசலில் மறைத்துப் புதைத்து வைத்தனர். கோயிலும் முற்றாக இடிக்கப் படாது காப்பாற்றப்பட்டதென முன்னோர் கூறிவந்தனர்.

போர்த்துக்கேய, ஒல்லாந்த நாடுகளின் அரசாட்சியின் பின் யாழ்ப்பாணத்தை அரசாண்ட ஆங்கிலேயரின் காலத்தில் சமய அழிப்பு கடினமாகக் கையாளப்படாததால் இவ்வூரின் சமயவழிபாடு நெறிமுறையும் சுடர்விட்டு பிரகாசிக்கத் தொடங்கின.

பெரிய சந்நியாசிரியர் அவதரித்துச் சமய மரபு பேணியதால் இணுவில் கந்தசாமி கோவில், காரைக்கால் சிவன் கோவில் ஆகியன அந்நியராட்சியின் அநியாயத்தில் அழிவுற்றும் புத்துயிர் பெற்றுத் திருப்பணிகள் ஆரம்பித்தன. இப்பகுதியைச் சேர்ந்த பரராஜசேகரப்

பிள்ளையார் கோவிலை இடையறாது வணங்கிய அடியார்களும் தமது குல தெய்வத்தின் திருப்பணியைத் தொடர முற்பட்டனர்.

இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் ஆலயம் முன்னர் சுண்ணச்சாந்துக் கட்டட மாக இருந்ததனால் கோவில் விக்கிர கங்களை ஆகமவிதிப்படி சிறுகுடிசையில் பாலஸ்தாபனம் செய்தபின் இக்குடிசை யிலேயே இறைவனை வழிபட்டனர். கற்கோயிலாகவே கட்ட எண்ணினர். நிதிநிலையும் வலுவின்றியே இருந்தது. ஊரிலுள்ளோர் கோவில் வழிபாடு செய்வதற்காகச் சென்றால் கோயில் பூசைகள் ஒழுங்கீனமாகக் காணப்பட்டன. இவ்வாலயத்தைச் சூழவுள்ள நற்சிந்தனை யுடைய இருவர் அக்காலச் சிவாச்சாரி யாராகிய சிவஸ்ரீ. சி. சதாசிவக்குருக்களை அணுகி நேரக்கிரமப்படி விநாயகரின் பூசையை நடாத்தும்படி விநயமாகக் கேட்டனர். அப்போது குருக்கள் மக்கள் ஒரு ரூபா கொடுத்து ஒரு அருச்சனை செய்ய முன்வர எவருமில்லாத நிலையில் எப்படிப் பூசை செய்வது? நாங்களும் சீவிக்கமுடியாத வறிய நிலையிலேயே இருக்கிறோம். நீங்கள் பூசைக்குவேண்டிய ஒழுங்குகளைச் செய்து தந்தால் பூசை செய்யலாம் என்றார். இந்த அவல நிலையை உணர்ந்த அடியவர் இருவரும் அயலில் உள்ள வேறு சிலருடன் ஆலோசனை நடாத்தியதன் பயனாகக் கோயில் கிரமமாகப் பூசை செய்யவெனக் கூறி வீடுவீடாகச் சென்று பிடியரிசி எடுக்கத் தீர்மானித்தனர். இறைசிந்தனையுடன் சிவாச்சாரியரிடம் சென்றபோது அவரின் வாக்கை தேவவாக்காகக் கருதினர். வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் வள்ளல் பிரான் தனது ஆலயம் சிறப்படைவதற்குக் குருக்களின் மூலமாக தன் அடியார்களை துணிந்து செயற்பட வைக்க எண்ணினார் போலும், அடியார்கள் வீடு வீடாகச் சென்று அன்றாடம் சமையல் செய்யும் அசிரியில் ஒரு பிடி அரிசி சேமித்துத் தரும்படி கேட்டிருந்தனர். இயற்கையாகவே இறைபக்தி மிகுந்த இல்லத்தரசிகள் பரராசசேகரப்பிள்ளை யாரை உள்ளன்போடு வணங்கி தமது அன்றாட சமையலுக்காக உலையிலிடும் அரிசியில் ஒரு கைப்பிடி அரிசியை எடுத்து வைப்பர். இவ்வாறு நாளாந்தம் சேமிக்கப் படும் அசிரியைப் பிடி அரிசி சேகரிக்கும் அடியார்கள் முறைப்படி எடுத்து வந்தனர். ஒரு மாதத்தில் 40 கொத்து அரிசி கிடைத்தது. யாவருக்கும் மன நிறைவு. இந்த அரிசியில் ஆலயக் குருக்களிடம் பூசைக்கென 20 கொத்து அரிசியைப் பயபக்தியுடன் கொடுத்து ஆனந்த மடைந்தனர். சிவாச்சாரியாரும் அடியார் களின் செயற்றிறனை மெச்சி வாழ்த்தினார். மிகுதி 20 கொத்து அரிசியை நாலு பேரறிய விற்றுத் திருப்பணி நிதிக்காகப் பெருநிதி சேகரிப்பவரிடம் வழங்கவும் சிறுதுளி பெருவெள்ளமாவதைப் போல திருப்பணி நிதி பெருகியது. இறைவனின் பூசையும் கிரமமாக நடைபெற்றது. நித்திய பூசை நடைபெற நிதிநெருக்கடியை நீக்கும் வண்ணம் கோயில் வடக்கு வீதியில் அடியார்களின் பேருதவியால் ஒரு கடை அமைக்கப்பட்டு கூட்டுறவுப் பண்டக சாலைக்கு வாடகைக்குக் கொடுத்துவரும் பணம் பூசைச்செலவை நிறைவு செய்ய உதவியது.

முன்னொரு காலத்தில் எல்லாம் வல்லவன் நானே என்று கர்வமுற்ற


[stamp] ...நூலகம்

ஜனகமகாராசனின் செருக்கை அடக்கிய எண்ணிய விநாயகப் பெருமான் குஷ்ட ரோகியான யாரும் வெறுக்கக்கூடிய கோலத்தில் அரசனிடம் சென்று பசி தீர்க்கும்படி கேட்டபோது அவனும் ஏவலாளரிடம் அலட்சியமாகவே உணவு கொடுக்கும்படி கூறினான். ஏவலாளர் கொடுத்த அரண்மனையிலுள்ள சமைத்த, சமைக்காத சகலவற்றையும் சாப்பிட்டும் பசியெனக் கூறி அரசனைத் தடுமாற வைத்து மமதையடக்கிவிட்டுப் பசித்தவர் போல அந்நகர் வீதிவழியே சென்றார். நேரே திரிசுரன் ஏழைப் பிராமணர் வீடு சென்று தனது பசியைப் போக்கும்படி கூறினார். இதேசமயம் மனைவி விரோசனை என்பவர் பணிவிடை செய்யவும் மறையவர் விநாயகப் பெருமானுக்கு பூசை செய்துகொண்டிருந்தார். உணவு கோரிவந்த வேடதாரியிடம் சென்று அவரை வணங்கி உபசரித்தபின் தமது வறிய நிலையில் தானியங்கள் ஏதுமில்லையென்றும் விநாயகப் பெருமானுக்கு பூசைக்கு உதவிய அறுகம் புல்லில் எஞ்சிய ஒரு அறுகம்புல்லை மட்டும் தட்டில் வைத்துக் கொண்டு வந்து தமது நிலையில் இதுதான் கிடைத்தது என்று ஏற்றுக்கொள்ளுமாறு உள்ளத்தூய்மையுடன் பணிவாக வழங்கினார். வேதியர் கொடுத்த அறுகம் புல்லை வாயில் போட்டு மென்று விழுமியங்கியதும் இறைவனது பசியடங்கியது. தமது சொந்த உருவத்தில் விநாயகப் பெருமான் காட்சி கொடுத்து மறையவரின் பக்தியை மெச்சி இரு வருக்கும் நல்லாசி கொடுத்ததுடன், முக்திக்கும் வழிகாட்டி மறைந்தார்.

இறைவனைக் கண்ட களிப்பில் இருந்த தம்பதியரின் குடிசை மாடமாளிகையானது. பற்பல செல்வங்களும் எங்கும் பக்திப் பெருகின. உள்ளத்தூய்மையுடன் தமது வறிய நிலையிலும் ஒருபிடி அரிசியுடன் தமது கறைபடியாத தூய உள்ளத்தையும் கொடுத்த அடியார்களின் வீடுகள் யாவும் சிறப்படைந்தன. விவசாயிகளின் பயிர்கள் செழிப்புற்றன. விளைச்சல் பெருகியது. கைத்தொழில் விருத்தியடைந்தது. வர்த்தகம் ஓங்கியது. கலைமகளும் அலைமகளும் குடி கொண்டனர். கல்வி மேம்பட்டது. அரச, அரசசார்பற்ற தனியார் நிறுவனங்களில் உயர்பதவிகள் மக்களுக்குக் கிடைத்தன. ஆலைகளும் தொழிற்சாலைகளும் மலிந்தன. வேலையற்ற சோம்பேறியென எவருமில்லை. யாவரும் மிகச் சுறு சுறுப்புடனும் உற்சாகத்துடனும் செயற்பட்டனர். மக்களின் புனிதமான பக்திக்கும் பெருமுயற்சிக்கும் இறைவன் இவர்களை வாழவைக்க எண்ணினார். இவ்விடத்தில் இறைவனுக்கெனச் சிறிதாகக் கிள்ளிக் கொடுத்தவர்களுக்கெல்லாம் அள்ளிக் கொடுத்த வள்ளல் விநாயகப் பெருமான். கோயிலில் மட்டுமல்ல, எல்லா வீடுகளிலும் திருவிழாவினால் தெய்வப் பொலிவை ஏற்படுத்தியவர் எல்லாவற்றையும் கொடுத்துவிட்டுப் பணச் செருக்கை மட்டும் கொடுக்கவில்லை.

பரராசசேகரப் பிள்ளையாரது கருணையால் வீட்டில் பெண்கள் பிடியரசி கொடுத்தனர். தொழிலாளர் தமது நாளாந்தம் செய்யும் சுருட்டுக் கூலியில் பத்துச் சுருட்டுக்கொண்ட ஒரு கட்டின் கூலி அரைச்சதத்தை கோயில் திருப்பணிக்கென ஒதுக்கி வைத்தனர். இவ்வாறு சேரும் பல தொழிலாளரின் கூலிப்பணமாக மாதம் கூடிய தொகை சேருமிடத்து கட்டட வேலைகளுக்கென

உரியவரிடம் சேர்க்கப்படும். இதர தொழில் செய்வோர், வர்த்தகப் பிரமுகர்கள், அரச பணியாளரெனப் பேதமின்றி வழங்கிய பெருநிதி பலவாறு பெருகியது. ஏழையின் அரைச்சதம் முதல் தனவந்தரின் இலட்ச ரூபாவரை தத்தமது இயல்புக்கேற்றபடி உள்ளன்போடு வழங்கியதால் பாலஸ் தாபனஞ் செய்யப் பட்டு பத்து வருடங்களில் சிறந்த பொழி கல்லினால் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டப வேலைகள் யாவும் நிறைவு கண்டது. கும்பாபிஷேகம் செய்யவேண்டிய காலம் கிட்டியது. அடியார்கள் இருபகுதியாக இருந்து தாம் தாமே நிர்வாக அந்தஸ்தடைய விரும்பினர்.

விநாயப் பெருமான் தந்தையிட மிருந்த மாம்பழத்தைத் தானே வாங்க வேண்டிய விருப்பால் தந்தையும் தாயும் தான் முழு உலகமும் என்ற தத்துவப் பொருள் உணர்ந்து இருவரையும் வலம் வந்து மாம்பழத்தைப் பெற குறுக்குவழி கண்டார். இதேபோல யாவரையும் ஒரே அணியாகச் சேர்ப்பதன் பேரின் சமாதானம் அமைதி காணும் நோக்குடன் ஒரு சிலருக்கு யோசனை வரச்செய்து இரவோ டிரவாக மிக அமைதியாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. மறுநாட்காலை இதனை யறிந்த சமரசவாதிகள் தகுந்த நீதியான விளக்கங்களைக் கூறமுற்பட்டனர். ஆண்டவன் சந்நிதியில் எல்லோரும் சமம் என்றும் இக்கோயிலில் யாரும் சிறப்பான பணிகள் செய்யும்போது எல்லோரும் பூரண ஆதரவு வழங்குவது, நிர்வாக அமைப்போ, குழுநிலையோ, சபையோ தேவையில்லை யென்ற சமரச முடிவுக்கு யாவரும் சம்மதித்து இறைவனை வாயாரப் புகழ்ந்துபாடிப் பலவாறு வழிபட்டனர். யாவும் பரராசசேகரனின் செயலன்றோ.

முதலாவது கும்பாபிஷேகம் நடை பெற்று முடிந்த பின்னரும் தொடர்ந்து திருப்பணி நிதி சேர்ந்தது. சிறந்த ஒழுக்கமும் கறைபடியாத உள்ளமும் இச்சொத்து சிவச்சொத்து என விளங்கி, இச்சொத்திற்குத் தாமும் பங்களித்து முன்னேற்றப் பாதையில் செல்லும் ஒரு சில அடியார்களிடம் திருப்பணி நிதி சேர அவர்களும் அப்பணத்தைச் சேமிப்பாக வங்கியிலிட்டனர். அவரிடம் நம்பிக்கை மிகுந்தோர் தேவைக்கு மிஞ்சிய நிதியினை வாரிவழங்கினர். பலரின் ஆலோசனை யின் பேரில் கோயில் வசந்தமண்ட பத்தைப் புதுப்பித்தனர். மேலும் பல திருத்தங்கள் ஏற்படவும் புதுப்புது அமைப்புக்கள் தோன்றவும் எம்பெருமான் கருணைகூர்ந்தார். முதலாவது கும்பாபி ஷேகத்தின் பின் 1961, 1972, 1984, 1997ஆம் ஆண்டுகளில் கும்பாபிஷே கங்கள் சிறப்பாகப் பல அடியார்களின் பேருதவிகளுடன் நிறைவுகண்டன.

1997ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபி ஷேகத்திற்கு முன்பே பாலஸ்தாபனஞ் செய்யப்பட்டு ஆக்கவேலைகள் பெரும் பகுதி நிறைவுபெற்றிருந்தன. 1995ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 31.10.1995 அன்று வலிகாமம் பகுதியைச் சேர்ந்த அனைவரும் இரவோடிரவாக யுத்த நெருக்கடி காரண மாக இடம்பெயர நேரிட்டது. எம்மக்கள் வடமராட்சி, தென்மராட்சி, வன்னி போன்ற பல திசைகளுக்கும் சென்றடைய நேர்ந்தது. ஏறக்குறைய மூன்று மாதத்துக்குள் இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற இருந்தது. பிரதம சிவாச்சாரியார் இப்பிள்ளையார் மீது அளவற்ற பயபக்தி மிகுந்தவர். பூசைக்குரிய பணிகள்

அவ்வப்போது நடைபெறவில்லையே என மனம் வருந்தி எம்பெருமானைச் சிந்தையில் வைத்துப் பூசித்தார். தமது பக்தி மேலீட்டினால் முகச்சவரஞ் செய்யாது கட்டாந்தரையில் படுத்துறங்கிக் கடும் விரதம் அனுஷ்டித்தார். இறைவன் திரு வருளால் நாம் 1996ஆம் ஆண்டு சித்திரை மாதம் சொந்த இடங்களில் மீண்டும் குடியமரும் வாய்ப்புக் கிடைத்தது. விநாயகப் பெருமானின் அடியார்கள் யாவரும் தத்தமது பணிகளுடன் கோயில் திருப்பணிகளையும் சுறுசுறுப்புடன் நிறை வேற்றத் தொடங்கினர். கும்பாபிஷேகத் திற்கான நிதியை இவ்வூர்ப் பொது மக்களும் விநாயகரருளால் வெளிநாடு களில் வதியும் இவ்வூர் அன்பர்களும் தாராளமாக வழங்கினர். இக்கும்பாபி ஷேகத்தைச் சிறப்பிப்பதன் பேரில் ஆலயத்தில் உள்ளும் புறமும் பல புதிய சந்நிதிகளும், சலவைக் கற்களால் நில வேலையும் சிறப்பாக அமைக்கப்பட்டன. விநாயகப் பெருமானின் திருவிளையாடல் களை உள்வீதிச் சுவரில் வர்ண ஓவியங் களாக அமைத்தும் மனநிறைவு கண்டனர்.

1997ம் ஆண்டு தை மாதம் கும்பாபி ஷேகம் நடைபெற இருந்த அன்று யுத்த கால நெருக்கடி காரணமாக மக்கள் வெளியே நடமாட முடியாத நிலை ஏற்பட்டபோதும் ஏற்கெனவே 33 ஓம குண்டம் அமைத்து ஆகமவிதிப்படி கிரியைகள் யாவும் நிறைவேறியிருந்த தால் பிள்ளையார் துணையை நம்பி அடியார்கள் நிகழ்ச்சிகளை அமைதி யாகவும் மனச்சாந்தமாகவும் செய்யத் துணிந்தனர். வழமையாக இக்கும்பாபி ஷேகத்தையொட்டி இணுவில், மருதனார் மடம் பல்லப்பை வைரவர் ஆலயத்தி லிருந்து 108 காவடிகள் பக்தர்களினால் எடுத்துவரப்படுவது சிறப்புடையது. ஆனால் பீதி காரணமாக அயலில் உள்ள இணுவில் கந்தசுவாமி கோவிலில் இருந்து 108 காவடிகள் கும்பாபிஷேக நேர்த்தியாக எடுத்துவரப்பட்டன. ஏனைய கும்பாபிஷேக வேலைகள் யாவும் சிறப்பாக நடைபெற்றன. அன்றிரவு எம்பெருமான் வீதியுலாவும் இனிது நடைபெற்றது. விழாக்களைச் சிறப்பிக்க பிரபல தவில் நாதஸ்வர மேதைகள் தமது கலையை அர்ப்பணித்தனர். தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகங்களும் வெகு சிறப்பாக நடைபெற்று இறுதி நாள் அதியற்புதமாகியது. இத்தினம் 10008 சங்குகள் பூஜிக்கப்பட்டு அதிசிறந்த சங்காபிஷேகம் நடைபெற்றது. 1008 இளநீருடனும் 108 குடம் பாலுடனும் இதர கும்பாபிஷேகத் திரவியங்களுடனும் அபிஷேகத்தில் சிறப்பிடம்பெற்றன. பல மணிநேரம் எடுத்த கும்பாபிஷேகத்தை யொட்டிய அந்தணர்களின் வாழ்த்துக் களும் சிறந்த சொற்பொழிவுகளும் இசை நிகழ்வுகளும் விழாவைச் சிறப்பித்தன.

பரராஜசேகரப்பிள்ளையாரின் மீளா அடியவர்கள் பலரின் வேண்டுகோளுக் கமைய அடியார்களின் பொதுநிதியமும் அநேக அடியார்களினால் மனமுவந்தளிக் கப்பட்ட பஞ்சலோக வகைகளும் ஆலய வாசலில் இதற்கென உருவாக்கப்பட்ட உருக்கும் உலையில் இட்டு பக்திபூர்வ மாக ஸ்பதியால் ஒரு குறித்த நன்னாளில் பஞ்சமுக விநாயகர் சிலையும் வார்க்கப் பட்டுள்ளது. ஆகமவிதிப்படி உரிய காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பஞ்சமுக விநாயகப்பெருமான் அதி விசேட விழாக்களில் வெளிவீதியுலா

வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி யளிப்பார்.

## பூசை விழாக்கள்

சின்னையாக் குருக்கள் பரம்பரையில் அமைந்த அந்தண சிரேட்டர்கள் தொடர்ந்து பூசை வழிபாட்டுப் பணியை நிறைவேற்றினர். இவர்களின் வரிசையில் தற்போதைய பிரதம குருவாகிய சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்களும் உதவியாக இவரது புத்திரர்கள் சிவஸ்ரீ அரவிந்தக் குருக்களும், பிரசன்னா சர்மா ஆகியோரும் சிறப்பாகப் பணியாற்று கின்றனர். நித்திய பூசையாக காலை 6.30 மணிக்கு முதற்பூசை இறைவன் ஆலய மணி ஓம் என்று ஒலிக்கவும், பக்தர்கள் வந்து பூசையில் பங்குபற்றி பரவசமடையும்படி நிகழும். எக்காரியம் செய்யப்புகினும் காலை விநாயகர் வழிபாடு செய்தே தமது காலை உணவு, தொழில் யாவற்றையும் அடியார்கள் கைக்கொள்வர். காலைப் பூசைக்கு வருவோர் யாவரையும் இங்கு தெய்வீக ஒளிவீசி மெய்சிலிர்க்க வைக்கிறது.

காலை 7.30 மணியளவில் விநாயகப் பெருமானின் மகா மண்டபத்தில் ஓமக் கிடங்கில் நித்தியாக்கினி மூட்டி இதர சேவைகளையும் செய்து காலை 8.00 மணிக்கு காலைச்சந்திப் பூசை இடம்பெறும். மதியகாலப் பூசை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும். பிற்பகல் 5.30 மணியளவில் சாயரட்சைப் பூசை நடைபெறும். இப்பூசை யின்போது தினமும் மங்கல வாத்தியம் ஒலிக்கப் பூசைகள் நிறைவுபெற்றதும் பிள்ளையார் உள்வீதியுலா வந்து பக்தர்களுக்குக் காட்சி கொடுப்பார். இவ்வீதியுலாவரும் விநாயகர் சிலை 500 வருடங்களுக்கு முந்தியது. அந்நியர் ஆட்சியில் பாதுகாப்புக்கருதி மடத்து வாசலில் மண்ணுள் மறைத்துவைக்கப்பட்ட (ஐம்பொன்னால் ஆனது) இவ்விக்கிரகம் பழமையும் புதுமையும் கொண்டது. மாலை 6.30 மணிக்கு அர்த்தசாமப் பூசையுடன் நாளாந்தப் பணிகள் நிறைவுபெறும்.

## தேர் மற்றும் ஊர்திகள்

விநாயகப் பெருமானின் பக்தி மேலீட்ட தேர்த்திருவிழா உபயகாரரின் பெருமுயற்சியால் பஞ்சமுக விநாயகப் பெருமான் வீதியுலா வருவதற்கான ஒரு சித்திரத்தேர் உபயகாரரின் ஏனைய குடும்ப உறுப்பினரும் உதவி செய்து உருவாக்கப்பட்டு தேர்த்திருவிழாவில் வீதியுலாவந்து சிறப்பிக்கிறது. 1966ம் ஆண்டு இத்தேர் உருவானது. முருகப் பெருமானுக்கு ஒரு தேரும் (1975ம் ஆண்டு), சண்டேஸ்வரருக்கு ஒரு தேரும் (1976ம் ஆண்டு), விநாயகரடியார்களி னால் தனி உபயமாக வழங்கப்பட்டது. 3 தேரும் தேர்த்திருவிழாவின்போது பவனி வருவது சிறப்பாகும்.

இரண்டாம் திருவிழா உபயகாரரின் சொந்த உறவினரின் முயற்சியால் 1982ம் ஆண்டு சிறப்பான கைலாய வாகனம் உருவாக்கப்பட்டது. சிறந்த சித்திர வேலைப்பாட்டுடன் கவர்ச்சிகரமாகப் பவனிவருவது அடியார்களின் பெரும் பேறு எனலாம்.

6ம் திருவிழா உபயகாரர் தமது சொந்தத் திருப்பணியாக ஒரு சித்திரத் திருமஞ்சத்தை உருவாக்கி உதவினார். இத்திருமஞ்சம் தைப்பூசத் திருவிழாவிலும் பவனி வருவது சிறப்பானதாகும்.

9ம்திருவிழா உபயகாரரும் தமது சப்பறத் திருவிழாவின்போது ஒரு அழகிய திருச்சப்பறத்தை தமது குடும்ப உபயமாக அமைத்துள்ளனர். அது வருடா வருடம் அழகாகப் பவனி வருகிறது. இற்றைக்கு 200வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட எலி வாகனம் திருத்தஞ் செய்யப்பட்டு உரிய காலத்தில் வர்ணம் பூசப்பட்டு மிகக் கவர்ச்சியாகக் காணப் படுகிறது. மேலும் ஒரு வெள்ளியினா லான எலி வாகனம் உட்பட 23 வாகனங் களும் விநாயகர் பக்தர்களினால் உபயம் செய்யப்பட்டவை. இவை யாவும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. விநாயகர் கதை முடிவு தினத்தில் கஜமுகாசுரன் போர் நடைபெறுவதற்கான கஜமுகாசூரன் ஒன்றும் அடியார்களின் உபயமாகச் செய்விக்கப்பட்டு பராமரிக்கப் படுகின்றன.

**வருடாந்த மகோற்சவம்**

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் வைகாசி மாதத்தில் வரும் சதய நட்சத்திரத்தில் கொடியேற்றத் திருவிழாவும் 11ம் திருவிழாவன்று புனர்பூச நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவமும் நடைபெறும். வழமை யாகவே கோயில்களில் மகோற்சவம் தொடங்கும்போது சமயப் பற்றுக் காரணமாக ஒவ்வொரு கோயிலையும் சார்ந்த பாலகர் முதல் பாட்டன், பாட்டிகள் வரை மகோற்சவம் தொடங்கும் நாட்களை எண்ணித் தம்மை எவ்வாறு அர்ப்பணிக் கலாம் என்ற பேருவகையில் மிதப்பார்கள். அவர்கள் கோயிலின் உள்ளும் புறமும் கூட்டிப் பெருக்கி வேண்டிய இடங்களில் சிறந்த அலங்காரங்களும் செய்யத்தவறுவ தில்லை. தண்ணீர்ப் பந்தல்களும் வெளிவீதிகளின் நாட்புறமும் எல்லை மானப் பந்தல்களும், உற்சாகத்துடன் வைக்கப்பட்டு அயலில் உள்ள எல்லா வீடுகளிலும் உள்ள கிணறுகளும் கலக்கி யிறைத்துச் சுத்தப்படுத்தப்படும். முழுக் கிராமமுமே விழாக்கோலம் பூண்டிருக்கும் இயற்கையான அழகுடன் மேலதிகமான வாழை தோரணங்களாலும் அலங்கார மின்விளக்குகளாலும் ஆலயத்தை அலங் கரிப்பர். புனிதமும் தெய்வீகமும் நிறைந்த பிரதேசமாகக் காணப்படும் சகலவிதமான கைங்கரியங்களிலும் இக்கிராமத்திலுள்ள சகல அடியார்களின் சார்பில் இளைஞர்களே முன்வந்து பணியாற்றுவர். இவ்வால யத்தைச் சூழவுள்ளவர்களும் வெளியிடங் களில் வேலை செய்வோர்களும் மகோற்சவ காலத்தில் இங்குவந்து தொண்டாற்றி இறைவனின் திருப்பணிக்கும் அரும்பணி யாற்றுவது சிறப்பம்சமாகும். விசேட அபிஷேகங்களின் பின் கொடியேற்ற வைபவம் தொடரும் கொடியேற்றத்தில் ஆகமவிதிகளுக்கு அமைய அந்தணப் பெருமக்களின் மறையொலியும், கலை ஞர்களின் தவில் சாதஸ்வர ஓசையும் பக்தர்களின் பண்ணிசையொலியும் அடி யார்களின் ஆரவார ஒலியும் இறைவனின் தெய்வீக ஒலியும் மிகக் கோலாகலமாகக் காணப்படும். பகல் திருவிழாக்கள் நண்பகலுடன் நிறைவு பெறும். சிறுவர் முதல் முதியோர் வரை புனிதமாக விரதமிருந்து இறைவன் திருவடியை வணங்கி நடைபெறும் விழாக்களில் பங்குபற்றியே வீடு செல்வர். இரவு உற்சவம் மாலைவேளைப் பூசையினைத் தொடர்ந்து சுவாமி உள்வீதியுலாவந்து யாகபூசையும் நிறைவு கண்டதும் கணபதியும் கந்தனும் விசேட ஊர்திகளில் வெளிவீதியுலாவந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பர். இது

கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்வால யத்தின் சுவாமி காவுதல் போன்ற பல தொண்டுகளும் இளைஞர்களின் பங்களிப் பாகும். வெளிவீதியுலாவின்போது மங்கல வாத்தியங்கள் பிரபல கலைஞர்களால் நிகழ்த்தப்படும். விசேட விழாக்களில் பஜனைபாடும் அடியார்கள் சிறியோர் முதல் முதியோர் வரை மகோற்சவ காலத்தில் அனுபவமும் முதிர்ச்சியும் மிகுந்த பண்ணிசை பாடுவோரின் வழிகாட்டலில் யாவரையும் பரவசப்படுத்தும் அருட்பாக்கள் மகிழ்விப்பர். விழா நிறைவுற்றபின் விசேட சமயச் சொற்பொழிவு அனைவருக்கும் புத்துயிரூட்டுவதுடன் அவர்கள் சிவநெறியின் மெய்ப்பொருளையும் உணரவும் ஏதுவாகும்.

## இதர விழாக்கள்

வருடாந்த மகோற்சவங்களை விட ஏனைய விழாக்களாக பிரதோஷ பூசைகள், சித்திரா பூரணை, நடேசர் அபிஷேகம், சமய குரவர்களின் குருபூசைகள், ஆடிப்பூரம், சதுர்த்தி (ஆவணி), ஆவணி மூலம், நவராத்திரி விழாக்கள், விநாயக விரத காலம் 21 நாட்கள் இறுதி நாளில் கஜமுகாசூர சங்காரம், விநாயகர் சஷ்டி, திருவெம்பாவை, மகா சிவராத்திரி, பிரதி மாதமும் மாதப்பிறப்பன்று காலை சங்கிராந்தி அபிஷேகம், கார்த்திகை உற்சவம், சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி என்பனவும் நடைபெறும். இக்காலங்களில் அடியார்கள் மிக ஆசாரமாகவும் பக்தி பூர்வமாகவும் வழிபடுவர்.

## பஜனை பாடற்பணி

இக்கலிகாலத்தில் இறைவனைப் பாடிப்பணி செய்தே முத்தியடையலாம் என்ற மெய்யுணர்வை நோக்கிய பாலர் முதல் முதியோர் வரை ஆண் பெண் வேறுபாடு இன்றி வெள்ளிக்கிழமை தோறும் சிறந்த விழாக்காலம் போன்ற வற்றில் தமது ஆன்மீகச் சிந்தனை மேலீட்டினால் மாலை நேரங்களில் பஜனையும் கூட்டுப்பிரார்த்தனையும் செய்வர். வயது சென்ற பெரியோர் களுடன் இளைஞர் யுவதிகளும் திருநெறிய தமிழ்மறைக்கழக அறநெறிப் பாடசாலை மாணவர்களும் கழக உறுப்பினர்களுடன் சேர்ந்து சிறப்பிக்கின்றனர். இவர்களது மெச்சத்தக்கது.

## புராணபடனம்

இத்திருக்கோயிலில் நெடுங்காலம் தொட்டு கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாத வூரடிகள் புராணம், விநாயகர் புராணம் போன்ற ஆன்மீக நூல்கள் வாசித்துப் பயன் சொல்வதை யாவரும் அறிவர்.இத்திருக் கோயிலின் அருளாட்சிக்கு இப்புராண படனங்களும் மெருகூட்டுகின்றன.

*நன்றி :*

**இணுவில் சைவ திருநெறிக்கழக வெளியீடு.**

# பிறந்த மண்ணிற்கு பெருமை தந்த மருத்துவர்
# அமரர் இராசசிங்கம் தெய்வேந்திரம் அவர்கள்

– திரு.சு.ஏழூர்நாயகம் அவர்கள்

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும்
தத்தம் கருமமே கட்டளைக் கல்"
- திருக்குறள் (550) -

**கருத்துரை :-** பிறப்பு, குணம், அறிவு என்பவற்றால் மக்கள் எய்தும் பெருமைக்கும் மற்றைச் சிறுமைக்கும் உரை கல்லாவது தாம் தாம் செய்யும் கருமமேயன்றிப் பிறிதில்லை.

இத்திருக்குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்து அண்மையில் அமரத்துவம் அடைந்தவர். வைத்திய கலாநிதி தெய்வேந்திரம். அவர் மறைந்த பின்னர் அவரது பெருமை ஊடகங்கள் மூலமாகவும், நினைவஞ்சலி உரைகள் மூலமாகவும் பேசப்படுகின்றது. மேலும் அவருக்கு யாழ் மாநகராட்சி சிலை வைப்பதற்கான ஏற்பாட்டையும் மேற்–கொண்டுள்ளதை பத்திரிகை வாயிலாக அறிகின்றோம். இவ்வாறாக அமரர் தெய்வேந்திரம் அவர்கள் பெற்ற பெருமைக்கு காரணிகளாக அமைந்தவை எவை என்பதை நோக்குவோம்.

தொழில் சார் வைத்தியத்துறையை மேற்கொண்ட தெய்வேந்திரன் அவர்கள் சமூக வைத்திய நிபுணராக அர்ப்பணிப்புடன் சேவையாற்றினார். அவரது தின வாழ்க்கையில் பல உடல் உள நலக் குறைவானவர்களைக் காண்பார். அவர்களது முகக் குறிப்பை அவதானிப்பதன் மூலம் அவர்களின் குறைபாடுகளை இனங்காண்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். மருந்தை விட ஐயாவினுடைய கைராசி எங்களை சுகமாக்கியது எனப் பலர் கூறுவதுண்டு. பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியாக அவர் சுமார் 12 ஆண்டுகள் பணியாற்றிய காலப்பகுதியில் பிரசவத்தை எதிர்–நோக்கியிருந்த தாய்மாரின் பயத்தைப் போக்கும் வகையில் எவருமே பயப்படத் தேவையில்லை, அனைவருக்கும் சாதாரண பிரசவம், ஊரடக்கு வேளையில் அவசரமென்றால் படைத்தரப்போடு தொடர்பு கொண்டு ஆவன செய்வதாகவும் அம்புலன்ஸ் வசதிக்காக ஒரு இணைப்பாளரையும் ஏற்படுத்தி அனைவருக்கும் நிம்மதியையும், ஆறுதலையும் ஏற்படுத்தி அவர்கள் மனதில் தெய்வமாக விளங்கினார். போர்க்காலச் சூழலில் சுகாதாரப் பணியாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில் கிராமிய சுகாதார உதவியாளர்கள், குடும்ப நல உதவியாளர்கள், சுகாதார தரிசிப்பாளர்கள் என்ற பதவிகளை உருவாக்கி உரிய பயிற்சி கொடுத்து அவர்கள் மூலமாக வடபகுதி முழுமையிலும் சுகாதாரப் பணியை முன்னெடுத்தது மட்டுமன்றி இப்பதவிகளில் இணைந்தவர்கள் சுகாதார திணைக்களத்தில் நிரந்தரப் பதவிகளைப் பெறுவதற்கு வழி அமைத்து அவர்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுக் கொண்டார். வைத்திய கலாநிதி தெய்வேந்திரம் அவர்கள் ஆளுமைமிக்க நிர்வாதியாக விளங்கினார். அரச சேவையில் நிறுவனத்தலைவராக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளராக

பணியாற்றினார். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதும் யாழ் மாநகராட்சி சுகாதார வைத்திய அதிகாரியாகவும், பின்னர் திருநெல்வேலி சென்ரல் நேர்சிங்ஹோமை பொறுப்பேற்று நடாத்தி வந்தார். தனது இறுதிக்காலம் வரை மக்களுக்கு வைத்திய சேவையை நடாத்தி வந்தார். தனது மறைவிற்கு முதனாள் 40 நோயாளிகளுக்கு மருத்துவ சேவை வழங்கினர் என்றொரு தகவல். இறுதிவரை தனது மருத்துவப் பணியை மக்களுக்குவழங்கிய வைத்தியகலாநிதி தெய்வேந்திரன் அவர்களின் சேவையைப் பாராட்டி 2006ம் ஆண்டு, யாழ்ப்பாண மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழு யாழ் விருது என்னும் உயரிய விருது அவருக்கு வழங்கி கௌரவித்தது. தெய்வேந்திரன் அவர்கள் களைப்பில்லா அர்ப்பணிப்புடன் கூடிய ஒரு சிறந்த சேவையாளர் என இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் பாலகிருஷ்ணன் அவர்கள் கூறுகின்றார். அவரது சமூகப்பணிகள் குறித்து கூறுகையில் வீமன்காமம் தெல்லிப்பழையில் மாதிரி வீட்டுத்திட்டத்தை வறிய மக்களுக்கு நோர்வே நாட்டின் உதவியுடன் உருவாக்கினார். மேலும், கோப்பாய், வாதரவத்தை, தீவகம் என்பனவற்றில் வறட்சி காரணமாக தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்ட போது பவுசர் மூலம் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்தார். இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் உயிர்காக்கும் அம்புலன்ஸ் சேவையை தேவைப்பட்டோருக்கு வழங்கினர். போர்ச்சூழலின் போது யாழ் போதானா வைத்தியசாலையின் சேவைகள் முடங்கிய போது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் முழு ஒத்துழைப்போடு அவ்வைத்தியசாலையை மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்திய சாலையில் இயங்க வைத்தார். இது காலத்தின் தேவைகருதி பல உயிர்களைக் காப்பாற்ற அவர் மேற்கொண்ட பாரிய செயற்பாடாகும்.

தெய்வேந்திரம் அவர்கள் சிறுபிராயத்தில் வாழ்ந்த இல்லம் தெல்லிப்பளை காசி விநாயகர் ஆலயத்திற்கு அண்மித்து இருந்தது. அவ்வாலயத்தின் பாலர் ஞானோதய சபையில் இணைந்து சமய வகுப்புகளிலும் கூட்டுப் பிரார்த்தனையிலும் பங்குபற்றினர். இதுவே பின்னர் அவர் சமய நெறியிலும் ஆன்மீக வாழ்க்கையிலும் வாழ காரணியாக அமைந்திருந்தது எனலாம். தான் சமயம் கற்ற காசி விநாயகரின் மகோற்சவ எட்டாம் நாள் சப்பறத்திருவிழாவை தனது உபயமாக எற்று நடாத்தி வந்தார். யாழ்ப்பாண மாநகராட்சியில் கடமையாற்றும் போது சைவசமய விவகாரக்குழுவை நிறுவி நல்லூர் வருடாந்த மகோற்சவத்தின் போது நல்லைக் குமரன் மலரை வெளியிட ஏற்பாடு செய்தார். அக்கட்டுரையில் சமயம் சார்ந்த கட்டுரைகளை எழுதி தனது ஆற்றலை வெளிப்படுத்தினார். இவ்வாறாக மருத்துவர் தெய்வேந்திரன் அவர்கள் தான் சார்ந்த வைத்தியம் சமூகம், ஆன்மீகம் ஆகிய துறைகளில் ஐம்பது ஆண்டுகள்அவர் ஆற்றிய நற்கருமங்கள் அவரது பெருமைக்கு உரை கல்லாக அமைந்திருந்தது என்பது தெளிவாகின்றது. அவர் பெற்ற அப் பெருமையால் அவர் பிறந்த தெல்லிப்பளை மண்ணும் பெருமை பெறுகின்றது.

# தவில் வித்துவான் யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தி
# 1933 – 1975

– பி.எம்.சுந்தரம் அவர்கள்

தவில் வாத்திய உலகில் எத்தனையோ தலைசிறந்த மேதைகள் தோன்றிக் கலையைப் பெருமளவில் வளர்த்தும், புகழீட்டி மறைந்துமுள்ளனர். இறைவனது திருவருட்கொடையால் தகுதியிலும், புகழிலும் ஈடினை கூறமுடியாத மேதைகளின் வரிசையில் முன்னணியிடத்தைப் பெற்ற தவில் வித்துவான், யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தி ஆவார். பொன்னிப்புனல் பாயும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நாதஸ்வர, தவில் கலைக் குடும்பங்கள் பல இலங்கை – யாழ்ப்பாணத்தில் குடியேறி வாழ்ந்து, அந்நாட்டவராகவே இருந்து வந்துள்ளன. இவ்விதமாக காரைதீவு எனும் பகுதியில் குடியேறிய குடும்பமொன்றில் விஸ்வலிங்கத் தவில்காரர் என்பவர் இருந்து வந்தார். இவருடைய முதல் மனைவி அன்னம்மாள். இத்தம்பதியருக்கு ருத்ராபதி (நாதஸ்வரக் கலைஞர்), மாசிலாமணி (நாதஸ்வர மற்றும் நாடகக்கலைஞர்), கௌரி (மதுரையைச் சேர்ந்த நாதஸ்வரக் கலைஞர் ராஜீ என்பவரின் மனைவி), புவனேஸ்வரி (திருமெய்ஞ்ஞானம் தவில்கலைஞர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளையின் மனைவி) என்று இரு ஆண்மக்களும் இரு பெண் மக்களும் பிறந்தனர். அன்னம்மாள் காலமானதும், விஸ்வலிங்கம்பிள்ளை மறுமணம் செய்து கொண்டார். தஞ்சை மாவட்டம் திருவாரூருக்கு அருகிலுள்ள திருப்பயற்றங்குடி என்ற கிராமத்தைச் சேர்ந்த கந்தசாமி நாதஸ்வரக்காரர் என்பவர், யாழ்ப்பாணத்துக்குச் சென்று குடும்பத்துடன் வசித்து வந்தார். இவருடைய மகளான ரத்தினம் அம்மாள், விஸ்வலிங்கம்பிள்ளையின் இரண்டாவது மனைவியானார். இந்த அம்மையார் பெற்றெடுத்த ஒன்பது மக்களில், மூன்றாவதாகப் பிறந்தவர், நமது கதாநாயகர் தெட்சணாமூர்த்தி. இவருக்கு ராஜேஸ்வரி (அளவெட்டி தவில் கலைஞர் கணேசரத்தினம் பிள்ளையின் மனைவி) என்ற தமக்கையும் மகாலிங்கம் என்ற தமையனும் உண்டு. தெட்சணாமூர்த்திக்கு பவானி (வேதய்யா), பாலாம்பிகை (குமாரசாமி), சகுந்தலாம்பிகை (ஜகதீஸ்வரன்), சந்திரோதயம் (கதிர்காமநாதன்) என்று நான்கு தங்கையரும், ராஜரத்தினம், கருணாமூர்த்தி (தவில் கலைஞர்) என்று இரு தம்பியரும் பிறந்தனர். காரைநகரிலிருந்து, யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள இணுவில் என்ற ஊரில் குடியேறி விஸ்வலிங்கம்பிள்ளை. ரத்தினம் அம்மாள் தம்பதியர் வாழ்ந்திருந்தனர்.

தவில் வானில் விடிவெள்ளியாக, இணையில்லா ஜோதியாக விளங்கிய தெட்சணாமூர்த்தி 26.08.1933 அன்று பிறந்தார். தவில் வாசிப்பதில் புலமை மிகுந்திருந்தும், உரிய பேரும் புகழும் தனக்குக் கிடைக்கவில்லையென்ற குறை மிகுந்திருந்தது விஸ்வலிங்கம்பிள்ளைக்கு. இதைப் போக்கிக் கொள்ள ஒரேவழி, தன் மகனை – தெட்சணாமூர்த்தியை – மாபெரும் தவில் கலைஞனாக உருவாக்கிவிடுவது தான் என்றுணர்ந்த அவர், அவ்வித ஆசைத்தீயைத் தன்னுள்ளே பெருமளவில் வளர்த்துக்

கொண்டார். இந்தக் காரணத்தால், பள்ளியிலே முதல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த தன் மகனை வகுப்புகள் நடக்கும் போது கூட வீட்டுக்கு அழைத்து வந்து, தவிலைக் கொடுத்து ஏதேனும் பயிற்சியளிப்பார். இரண்டாம் வகுப்புக்கு வந்த தெட்சணாமூர்த்தியிடம் ஆசிரியர்கள், "நீ ஆற்றிலொருகாலும் சேற்றிலொருகாலுமாக இருக்க வேண்டாம்" என்று சொல்லிவிட்டார்கள். இவ்வாறு பள்ளிப்படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. எட்டாம் பிராயத்தைத் தெட்சணாமூர்த்தி எட்டியதும், அவரை, இணுவில் சின்னத்தம்பிப்பிள்ளையிடம் கொண்டு போய்த் தவில் பயிற்சிக்கு விட்டார். விஸ்வலிங்கம்பிள்ளை. காலை ஐந்து மணிக்குக் குருவின் வீட்டுக்குச் சென்று, சுமார் எட்டு மணி நேரம் வாசித்து விட்டுப் பிற்பகல் இரண்டு மணிக்குத் திரும்பும் அச்சிறுவன், வந்ததும் வராததுமாகத் தவிலைக் கொடுத்து வாசிக்கச் செய்வார் தந்தை. இவ்வாறு நாளொன்றுக்குச் சுமார் பதினாறு மணி நேரம் தவில் வாத்தியச் சாதகம் இடைவிடாது நடந்தது. இரண்டு வருடங்களுக்குப் பின், அந்தக் காலத்தில் இலங்கையில் புகழ்பெற்று விளங்கிய காமாட்சி சுந்தரம்பிள்ளையிடம் தெட்சணாமூர்த்தியின் பயிற்சி தொடர்ந்தது. தன் ஊருக்கோ அல்லது சுற்றுப்புறத்து ஊர்களுக்கோ திருவிழாக்களில் வாசிக்க வருகின்ற பிரபல கலைஞர்கள் லயவின்யாசம் செய்கின்ற நேரத்தில், அங்கு சென்று, மகனைத் தோளில் தூக்கிக் கொண்டு, மணிக்கணக்கில் நின்று, அவர்களுடைய வாசிப்பைக் கேட்கச் செய்வதோடு, வீடு திரும்பியதும் உடனே மகனை அழைத்து, அன்று தான் கேட்ட தவில் வாசிப்பிலிருந்த நுட்பங்களையும், சிறப்பு அம்சங்களையும் வாசிக்குமாறு பணிப்பார் விஸ்வலிங்கம்பிள்ளை. இவ்விதமாகச் சில காலம் கழிந்தது. என்னதான் இலங்கையிலே பயிற்சி பெற்றாலும், இதற்கு மூலதனமாக அமைந்த தஞ்சை மண்ணில் தங்கித் தகுந்தவொரு விற்பன்னரிடம் மேற்பயிற்சி பெறுவது அவசியமென்று கருதிய விஸ்வலிங்கம்பிள்ளை, மகனோடு இந்தியாவுக்கு வந்து, நாச்சியார்கோவில் ராகவப்பிள்ளையின் பொறுப்பிலே சிறுவனை ஒப்படைத்துச் சென்றார். ஒன்றரை ஆண்டுகள் ஓடின. "உனக்குச் சொல்லிக்கொடுக்க இனி எதுவும் பாக்கியில்லை. ஒரு அபிப்பிராயம் காதிலே விழுவதற்குள்ளாகவே உன் கைகளில் அது ஒலித்து விடும்படியான அளவுக்குக் கடவுளின் வரப்பிரசாதம் பெற்றுள்ள நீ, இனி ஊருக்குத் திரும்பலாம். மகோன்னதமான பேரும்புகழும் உன்னை வந்தடைய அதிக காலம் இல்லை" என்று ராகவப்பிள்ளை உளமார ஆசீர்வதிக்க, இலங்கைக்குத் திரும்பினார், தெட்சணாமூர்த்தி அந்நாட்டிலிருந்த பல்லவி வல்லுனரான பற்பல நாதஸ்வரக் கலைஞர்களுக்குத் தவில்காரராகத் தன் இசை வாழ்க்கையை அவர் தொடங்கினார்.

காமாட்சிசுந்தரம்பிள்ளை, பி.எஸ் (விசர்) ராஜகோபால்பிள்ளை, திருமுல்லை வாயில் "லயப்பிண்டம்" முத்துவீரபிள்ளை, நாச்சியார்கோவில் ராகவப்பிள்ளை, திருவிழந்தூர் ராமதாஸ்பிள்ளை, வலங்கைமான் ஷண்முகசுந்தரம்பிள்ளை, வடபாதிமங்கலம் தெட்சணாமூர்த்திப் பிள்ளை, நீடாமங்கலம் ஷண்முகவடிவேல்பிள்ளை போன்ற ஏராளமான தவில் மேதைகளுடன் பலமுறை தவில் வாசித்துப் புகழேணியின் உச்சியினை விரைவில் எட்டினார், தெட்சணாமூர்த்தி. "பலரிடம் நான் தவில் பயின்றேன்; பல மேதைகளின் வாசிப்பைக் கேட்டேன். ஆனால், லய சம்பந்தமான விவகாரம் என்ற அம்சத்தில், என் கண்களைத் திறந்த மானஸீகக் குருநாதர் திருமுல்லைவாயில் முத்துவீரப்பிள்ளை தான்" என்று தெட்சணாமூர்த்தி

என்னிடம் அடிக்கடி கூறிப்பெருமை கொள்வதுண்டு. இப்படிப்பட்ட அருமைமிக்க, விலை மதிப்பற்ற தவில் பொக்கிஷத்தைத் தமிழகத்துக்கு அறிமுகம் செய்வித்த பெருமை நீடாமங்கலம் ஷண்முகவடிவேல் அவர்களையே சாரும். சென்னையில் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் தமிழிசைச் சங்கத்தின் இசை விழாவில், காருகுறிச்சி அருணாசலம் அவர்களின் நாகஸ்வரக் கச்சேரியில், நீடாமங்கலம் ஷண்முகவடிவேலுவும், தெட்சணாமூர்த்தியும் தவில் வாசித்ததை, வானொலி நிலையம் இரவு 12 மணி வரை, நேரடியாக ஒலிபரப்பி, இசை ரஸிகர்களுக்கு நல்லதொரு வாய்ப்பினை அளித்தது. தொடர்ந்து தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம் முதலிய மாநிலங்களிலிருந்து தெட்சணாமூர்த்திக்கு அழைப்புகள் நிறையத் தொடங்கின.

அளவெட்டியிலிருந்த தவில் கலைஞர் செல்லத்துரைப்பிள்ளையின் மகளான மனோன்மணிக்கும், தெட்சணாமூர்த்திக்கும் திருமணம் நடைபெற்றது பின்பு, தெட்சணாமூர்த்தி அளவெட்டியில் குடியேறினார். அவ்வூரில், “கலாபவனம்” என்ற பெயரில் மாளிகையொன்றினையெழுப்பி அதிலே மனைவி மக்களோடு அமைதியாக வாழ்ந்து வந்த தெட்சணாமூர்த்தி, சரித்திரப் புகழ்பெறுமாறு உயர்வதைக் கண்டு பொறாமை கொண்ட சக கலைஞர்கள் பலரால், மறைமுகமான தொல்லைகளுக்கு ஆட்பட நேர்ந்தது. இலங்கையைவிட்டே அவர் வெளியேறிவிடும் அளவுக்கு, அவர் மனதிலே வெறுப்பையும் வேகத்தையும் அக்கலைஞர்கள் வளர்த்தார்கள். இந்தக் காலக்கட்டத்தில் குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே தவில் வாசிப்பதென்ற கொள்கையைக்கொண்டார், தெட்சணாமூர்த்தி இருந்தும் அவருடைய மனதில் நிம்மதி பிறக்கவில்லை. உற்றார் உறவினரைப் பார்க்கக் கூட அவருக்குப் பிடிக்காமற் போயிற்று. கடைசியில், மனைவி மக்களோடு புறப்பட்டு இந்தியாவுக்கு வந்து, தஞ்சையிலே வசிக்கலானார் அவர்.

தவில் வித்துவான்களின் திறமை பலவகைப்பட்டது. சிலருக்கு லய சம்பந்தமான “கணக்கு” களில் நிறைந்த புத்திசாலித்தனமிருக்கும். ஆனால், கரத்திலே “வேகம்” அல்லது “பேச்சு” அதிகம்; ஆனால், “விவகார” புலமை குறைந்து காணப்படும். சிலர் உருப்படிகளுக்குப் பொருத்தமாக வாசிப்பதில் தேர்ந்திருப்பார்கள். இதர நுட்பங்களில் போதிய திறமையிருக்காது. இந்த எல்லா அம்சங்களையும் முழுமையாகப் பெற்ற தவில் கலைஞர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அவ்வகைப்பட்ட மிகச்சிலரில், நீடாமங்கலம் மீனாட்சி சுந்தரம்பிள்ளைக்கு அடுத்துச் சொல்லக்கூடிய ஒரே வித்துவானாகத் திகழ்ந்தார் தெட்சணாமூர்த்தி கடுமையான “அசுர” சாதகமும், பலவகைப்பட்ட திறமை செறிந்த நாதஸ்வரக் கலைஞர்கள் பலருக்கு வாசித்து வாசித்துப் பெற்ற அனுபவமும், இவற்றக்கெல்லாம் மேலாக, இறைவனின் “அருட்கொடை” யும் தெட்சணாமூர்த்திக்கு ஈடிணையற்ற பெரும் ஸ்தானத்தைத் தேடித் தந்தன. வயதிலோ அனுபவத்திலோ தன்னையே மூத்தவர்களுக்கு மிகுந்த மரியாதை கொடுக்கும் பண்பாளராக விளங்கிய தெட்சணாமூர்த்தி எப்பேர்பட்ட லய விசேடங்களையும் எந்தத் தாளத்திலும், எத்தனை வேகத்தில் வேண்டுமானாலும் மணிக்கணக்கில் வாசிக்கும் வல்லமை பெற்றிருந்தவர். தனக்கு விருப்பமான தாளத்தில் தனக்குச் சௌகரியமன காலப்பிரமாணத்தில் “தனி”வாசிப்பவரல்ல

அவர் நாகஸ்வரக்காரர் ராக ஆலாபனையின் போதோ கீர்த்தனையிலோ அல்லது பல்லவியிலோ எப்போது "லயவின்யாச" த்துக்கு இடமளிக்கிறாரோ, அப்போது அதே காலப்பிரமாணம் சிறிதும் சிதையாமல் "நாணய"த்துடன் தெட்சணாமூர்த்தி லயவின்யாசம் செய்வதே வழக்கம். "என்ன பல்லவி" என்று நாதஸ்வரக் கலைஞரிடம் முன்னதாகவே கேட்டுக்கொள்வது, "இன்ன" கீர்த்தனையில் லயவின்யாசம் கொடுக்குமாறு, முன்பே தெரிவித்துக் கொள்வது இவையெல்லாம் தெட்சணாமூர்த்தியிடம் என்றுமே காணப்பட்டதில்லை. சாதாரணமாக தெட்சணாமூர்த்தி பங்குபெறுகின்ற லயவின்யாச நிகழ்ச்சிகள் குறைந்தது இரண்டு மணி நேரத்துக்காவது அமையும். ஒரு சமயம் புதுக்கோட்டையில், திரு மெய்ஞ்ஞானம் நாடராஜசுந்தரம்பிள்ளையின் நாதஸ்வரக் கச்சேரியில், ரஸிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க தெட்சணாமூர்த்தி ஐந்து முறை லயவின்யாசம் நிகழ்த்தினார். அன்றைய தினம், முதல் லயவின்யாசம்"இந்த பராகா" (நாதநாமக்கிரியா என்ற கீர்த்தனையின், "அதிதுரித" கால ஸ்வரப்பிரஸ்தாரத்துக்குப் பின் நடைபெற்ற சிறப்பினைக் கேட்டுய்த்தவர்களுக்கு, அதுவொரு மறக்க முடியாத லயவின்யாச நிகழ்ச்சியாகும். வடபாதிமங்கலம் தெட்சணாமூர்த்திப்பிள்ளையும், யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தியும் அன்று தவில் வாசித்தனர்.

கண்டமோ, சங்கீர்ணமோ, எந்தக் கதியை அமர்த்திக் கொண்டாலும், கடைசிவரை, மோ'ரா, கோர்வையுள்பட அந்தக்கதிக்கான சொற்களைக் கொண்டே தெட்சணாமூர்த்தி வாசித்து முடிப்பார் சங்கீர்ணகதி, அவருக்கு மிகவும் விருப்பமானவொன்று கடுமையான சந்தத் தாளங்களில் லயவின்யாசம் செய்வது அவருக்குத் தேனில் தோய்த்த பலாச்சுளை.

"சங்கீர்ணம்" என்ற தாளஜாதியை மகேந்திரவர்ம பல்லவன் என்ற மன்னன் தோற்றுவித்ததாகவும், அதன் காரணமாக "சங்கீர்ண ஜாதிபுலி" என்ற சிறப்புப் பெயர் பெற்றதாயும் கூறப்படும். தெட்சணாமூர்த்தி மற்றொரு மகேந்திரவர்மனாகப் பதினொரு அட்சரமுடைய தாளஜதியை உருவாக்கிப் பலமுறை அதில் "தனி" வாசித்திருக்கிறார். அரித்து வாரமங்கலத்தில் நடைபெற்றவொரு கச்சேரியில், இந்த "ருத்ரகதி"யில், சுமார் மூன்று மணி நேரம் தெட்சணாமூர்த்தி தவில் வாசித்ததைக் கேட்ட நாகஸ்வர, தவில் வித்துவான்களும், ரசிகர்களும், இந்தப் புதுமையான சிறப்பையும், தெட்சணாமூர்த்தியின் மேதாவிலாசத்தையும், இன்றளவிலும் புகழ்ந்து கூறுகின்றனர். இதைப்போன்றே. பதின்மூன்று மற்றும் பதினேழு அட்சரங்களைக் கொண்ட கதிகளையும் உருவாக்கி, அவற்றில் மிகச் சரளமாகத் தவில் வின்யாசம் செய்வார் தெட்சணாமூர்த்தி.

அவருடைய வாசிப்புத் திறமையைப் பரீட்சைக்குள்ளாக்க எண்ணி, எத்தனையோ பல்லவி மேதைகள், எந்தக் கலைஞரும் எளிதில் புரிந்துகொள்ள முடியாத அளவுக்குக் கடினமான பல்லவிகளைத் தயார் செய்து கொண்டு வந்தபோதெல்லாம், தெட்சணாமூர்த்தி, ஒரு முறை அப்பல்லவியைக் காதில் வாங்குவார், மறுகணமே, அது அவரால் தயாரிக்கப்பட்ட பல்லவி போலாகிவிடும். திருமெய்ஞ்ஞானம் நடராஜசுந்தரம்பிள்ளை, தருமபுரம் கோவிந்தராஜபிள்ளை போன்ற பல்லவி

வல்லுனர்கள், "தெட்சணாமூர்த்திக்கு கற்பூர மூளை" என்று போற்றியிருக்கின்றார்கள். "இரண்டுங்கெட்டான் காலப்பிரமாணத்திலும் "தண்ணீர் பட்டபாடு" என்பது போல தெட்சணாமூர்த்தி வாசிப்பதை எண்ணுகையில், அந்தப் பையனின் லயக்கணிசம், மூளை வேகம், கரவேகம் எல்லாம் பிரமிப்பைத்தான் உண்டுபண்ணுகின்றன' என்று மூத்த நாதஸ்வரக் கலைஞர் சிதம்பரம் ராதாகிருஷ்ணபிள்ளை வியந்து பாராட்டியதுண்டு.

சேலத்தில், ஒரு இசைக்கலைஞர் வீட்டுத் திருமணம். மாப்பிள்ளை அழைப்பு நடைபெற்ற போது, தெட்சணாமூர்த்தியின் தவில் வாசிப்பைக் கேட்பதற்காகவே, மங்களூர், ஐதராபாத் போன்ற நெடுந் தொலைவிலுள்ள ஊர்களிலுள்ள அழைப்பில்லாமலேயே சுமார் ஆறாயிரம் பேர் வந்துகூடிவிட்டனர். தவிலிசை விருந்தோடு, திருமணக்கூடத்து விருந்தையும் இவர்கள் சுவைத்ததன் விளைவாக, காலை உணவு முதல் மற்ற நாட்களுக்கான அரிசி, மளிகை முதலியவற்றையெல்லாம் விடியற்காலையில் அவசரமாகக் கடையைத் திறக்கச்செய்து, வாங்கிவரவேண்டிய நிலையேற்பட்டதும் ஒரு விந்தையான சம்பவம்.

தெட்சணாமூர்த்திக்கு தவில் வாத்தியம் யாருடையதாயினும், அல்லது எப்படிப்பட்டதாயினும் பரவாயில்லை. அதை வைத்துக் கொண்டே சிறப்பாக வாசித்துவிடுவார். இந்தியாவிலேயே வந்து தங்கியதற்கு முன்னர், அவர் கச்சேரிகளை முன்னிட்டு இலங்கையிலிருந்து வந்து போவது வழக்கம். அப்போதெல்லாம், பெரும்பாலும் விமானத்தில் தன் தவிலை எடுத்துக்கொண்டு வருவதில்லை. ஒருசமயம் கேரளமாநிலம் தலைச்சேரிக்கு அருகிலுள்ள ஜகந்நாதர் கோவிலில் வாசிப்பதற்காக இலங்கையிலிருந்து தெட்சணாமூர்த்தி வந்திருந்தார். அவருக்காகத் தவிலொன்றைத் தயாராக வைத்திருப்பதாகச் சொல்லியிருந்த கலைஞர்கள் சிலர், தம் வாத்தியம் திருப்தியாகவில்லை என்பதால் கொண்டு வரவில்லை. சீவேலியின் போது, கோவிலைச் சேர்ந்த தவில் கலைஞர் வாசித்துக் கொண்டிருந்த தவிலைக் கேட்டு வாங்கிக் கொண்டார், தெட்சணாமூர்த்தி. "இந்தத் தவிலில் மூட்டுக்கள் பிடி குறைவாக உள்ளன. கோவிலில் தினந்தோறும் வழிபாடுகளின் போது "தட்டுவதற்கு" மட்டுமே ஏற்றதான இந்த வாத்தியத்தை நீங்கள் வாசிப்பதா? என்று அந்தக் கோவில் கலைஞர் சொன்ன போது, தெட்சணாமூர்த்தி "பரவாயில்லை, எனக்கு இது போதும்" என்று விட்டார். மன்னார்குடி பரமசிவம்பிள்ளை என்ற நாதஸ்வரக் கலைஞர், மல்லாரியை வாசிக்கத் தொடங்கினார். எதிரிலிருந்த கலைஞர்களின் தவில் வாத்தியங்கள் அதிகமான "பிடி"யுடன் "கணகண" வென்ற ஒலியெழுப்பின. தெட்சண மூர்த்தியின் தவிலோ மந்தமாக "சொத்" தென்ற ஓசையைக் கொண்டிருந்தது. சுமார் அரைமணி நேரம் கழிந்த பின், தெட்சணாமூர்த்தியில் தவில் "கண கண"வென்றும், எதிரிலிருந்த கலைஞர்களின் வாத்தியங்களைவிடப் பெருமளவிலும் ஒலிக்கத் தொடங்கியது. கோவில் கலைஞருக்கு இது தாம் கொடுத்த தவில்தானாவென்ற ஆச்சரியம்.

குன்னியூர் பண்ணையார் வீட்டுத் திருமணம். மன்னார் குடியில் திருமெய்ஞ்ஞானம் நடராஜசுந்தரம்பிள்ளையின் மேளக் கச்சேரி அவ்வூருக்குச் சென்ற பின் ஒரு நண்பரிடம் தனக்குத் தவில் வேண்டுமெனக் கேட்டார், தெட்சணாமூர்த்தி. அந்த

நண்பருக்கோ தவிலைத் தர வேண்டுமென்ற ஆவல். ஆனால், வாத்தியம் அவருக்கே திருப்தியாக இல்லாத போது, தெட்சணாமூர்த்திக்கு எவ்வாறு தருவது? "பரவாயில்லை, எனக்கு இது போதும்" என்ற தெட்சணாமூர்த்தியின் வழக்கமான வார்த்தைக்குப்பின், அந்தத் தவில் கொண்டு வரப்பட்டது. ஆஹா! தெட்சணாமூர்த்திக்கு எதிரே அமர்ந்துள்ள இளைஞரின் தவில் எப்படிக் கேட்கின்றது? இப்படிப்பட்ட பெருங்கூட்டத்தில், இந்தத் தவிலை வைத்துக் கொண்டா இவர் வாசிப்பது, – இது தெட்சணா மூர்த்தியின் ரஸிகர்கள் மனதிலிருந்த எண்ணம். கச்சேரி "விரிபோணி"(பைரவி) வர்ணத்துடன் தொடங்கப்பெற்று சுமார் ஒரு மணிநேரம் ஓடிவிட்டது. இதென்ன! தெட்சணாமூர்த்தி, இத்தனை நேரம் வாசித்துக்கொண்டிருந்த அதே தவிலா, இப்படிப் பெருமளவில் ஒலிக்கிறது! மற்றக் கலைஞரின் தவில் மந்தமாகவும், இது "பளிச்" சென்றும் இருக்கின்றதே! கேட்டுக்கொண்டிருந்த ரஸிகர்களுக்கு மட்டுமல்ல, அங்கே கூடியிருந்த அத்தனை கலைஞர்களின் முகத்திலும், வியப்பின் அறிகுறி. ஆம்! தன் கையின் தன்மையென்ன, தவிலில் பொருத்தப்பெற்றுள்ள தோலின் தன்மையென்ன, தவிற்கட்டையின் நாதம் எத்தகையது என்றெல்லாம் அறிந்திருப்பது, தவிற்காரனுக்குரிய இலக்கணம் என்று நூல்கள் விரித்துரைப்பதற்கொப்ப, அண்மைக் காலத்தில் இவ்விலக்கணத்தை நன்கறிந்திருந்த கலைஞனாகத் தெட்சணாமூர்த்தி இருந்த காரணத்தினால் தான், அவர் "இரவலாக"ப் பெற்று முழக்கிய தவில் வாத்தியங்கள் கூடச் சிறப்பாக ஒலித்தன.

புகழ்மிக்க பாடகர்கள் சிலர், தம் கச்சேரியில் தவில் வாசிக்க வேண்டுமென்று தெட்சணாமூர்த்தியிடம் பலமுறை கேட்டுக்கொண்டனர். தவில் என்பது நாதஸ்வரம் ஒன்றுக்கு மட்டுமே பக்கவாத்தியமாக அமைந்து, தென்மைக்காலந்தொட்டே பெரியோர்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டதென்பதால், இந்த மரபைப் பாழாக்கத் தனக்கு விருப்பமில்லையென்று கூறிவிட்ட தெட்சணாமூர்த்தி, தன் இறுதி மூச்சு வரை இந்தக் கொள்கைப்பிடிப்பிலிருந்து தளராதிருந்தார். அக்காரணத்தினால் தான், நாதஸ்வத்தைத் தவிர வேறெந்த வாத்தியத்துக்கோ அல்லது வாய்ப்பாட்டுக்கோ, அவர் தவில் வாசித்ததில்லை.

யாருடனும்அதிகமாகப் பேசமாட்டார் தெட்சணாமூர்த்தி. பிற கலைஞர்களின் வாசிப்பைப் பற்றித்தன் கருத்தை வாய்விட்டுக் கூறவும் மாட்டார். நல்ல எதிர்காலத்துக்குரிய சிறப்பு அம்சங்கள் கொண்ட வராயும், அடக்கமும் பண்பும் நிறைந்தவராயுமிருக்கும் இளைஞர்களைத் தன்னுடன் வாசிக்கச் செய்து ஊக்குவிப்பதோடு, அவர்களுக்கெழும் ஐயப்பாடுகளை நீக்கவும் செய்வது அவரது வழக்கம். தாம் புதியதாகக் கற்பனை செய்கின்ற "கோர்வை", "நடை" முதலியவைகளை அவர்களுக்குக்கூறுவதிலும் தெட்சணாமூர்த்தி, விசாலமான உள்ளங்கொண்டவர். அதேசமயம் அவரை முன்கோபக்காரர் என்றும் சிலர் கருதுவதுண்டு. ஒரு கலைஞன் தகுதியின் அடிப்படையில் அல்லாது, அவன் எவ்வாறோ வெறும் புகழுக்காக, போற்றுவோரைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது. லயத்தின் நுட்பங்கள் அறியாமல், ரஸிகர் என்ற பெயரைப் பெற்று விடும் எவரேனும், எந்தக் கலைஞரைப் பற்றியாவது சிறப்பாகவோ தாழ்வாகவோ விமரிசனம் செய்தால், அவருக்குக் கோபம் பீறிட்டெழும்.

ஒருசமயம், சென்னையிலிருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரியின் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர், தெட்சணாமூர்த்தியைச் சந்திக்க வந்தார். பேச்சுவாக்கில், "பழனி சுப்பிரமணியப்பிள்ளை பெரிய வித்துவான் தான்; ஆனால், பாலக்காடு மணி அய்யர் வாசிப்பு மிகவும் உயர்வானது. இதுபற்றி உங்கள் கருத்தென்ன? என்று கேட்டுவிட்டார். தெட்சணாமூர்த்தியின் கணகளோ சிவந்து விட்டன. "லயமென்றால் என்னவென்று உனக்குத் தெரியுமா? மிருதங்கத்தைப் பற்றித்தான் உனக்கென்ன தெரியும்? இசையின் இலக்கணமோ நுட்பமோ அறியாமல், "ரஸிகன்" என்ற பெயரை எவ்வாறோ பெற்றுவிடும் உன்னைப்போன்ற பேயர்கள், அந்த இரு மேதைகளின் பெயர்களை உச்சரிக்கக் கூடத் தகுதியில்லாதிருக்கையில், அவர்களுடைய தாரதம்மியத்தை எடைபோட்டுப் பார்க்கிறாயா?... முதலில் இந்த இடத்தை விட்டு எழுந்திரு" என்று ஒற்றை மொழியில் கூச்சலிட்டு, அந்தப் பிரமுகரை விரட்டியடித்துவிட்டார், தெட்சணாமூர்த்தி..

எந்த விஷயத்திலுமே, அவர் மிகவும் கண்டிப்பானவர். தன் கௌரவத்துக்குச் சிறிதளவேனும் குறைவேற்படுமென்ற கட்டம் உருவாகுமானால், அவர் அசுரனாக மாறிவிடுவார். கச்சேரி மேடைகளில் அனுசரிக்கப்பட வேண்டியதும், அங்கே அமர்ந்துள்ள பிற கலைஞர்களிடம் ஒருவருக்கிருக்க வேண்டியதுமான மரியாதை கொடுக்காமல், தனக்கு எவரும் நிகரில்லையென்ற அகந்தையுடனும், ஆர்ப்பாட்டத்துடனும் மேடையில் உட்கார்ந்து, மற்றொர் மீது அலட்சியப்பார்வை விடுபவர்களின் பெயரைக் கேட்கவும் தெட்சணாமூர்த்தி கூசுவார். அவ்விதக் கயவரோடு, தானும் சமமாக மேடையிலமர்வதென்பது, தன் கலைக்குத் தானே இழைக்கும் அநீதியென்றே அவர் கருதுவார். "தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையு ளெல்லாந் தலை" என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் தெட்சணாமூர்த்தி. தரக்குறைவான முறையில் சொற்களைத் தவிலில் வாசிக்கும் சிலரைக்காணும் போது, அவரது உள்ளம் அளவில்லாத் துயருறும். பிடிவாத குணம் நிறைந்தவராக அவர் இருந்தாலும், அவருடைய அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாயிருப்பவர்கள் "கிழிக்கும் கோட்டினை" தாண்டியவரல்ல. அவருடைய வாழ்நாளில் அவ்விதப் பாத்திரங்களாயிருந்தவர் மூவர் மட்டுமே. தவில் வித்துவான் நீடாமங்கலம் ஷண்முகவடிவேல், கொழும்பில் காவல் துறையில் உயர் அதிகாரியாகப் பணிபுரிந்த சிவபாதம் எனும் தேர்ந்த இசை ரசிகர், மூன்றாவமவர் இந்நூலாசிரியர் ஆவார்.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே, மூன்று அல்லது நான்கு மணி நேரக் கச்சேரிக்குத் தவில் வாசிப்பதற்குக் குறைந்தபட்சம் ஆயிரத்து ஐநூறு ரூபாய் சன்மானம் பெற்ற முதல் தவில் கலைஞர் யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தியே ஆவார். அவரைப் பின்பற்றி, இன்று பல தவில் கலைஞர்கள் பெருந்தொகை பெறுவதற்கு வித்திட்ட பெருமை அவரையே சாரும்.

நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம்பிள்ளையினால் தவில் வாத்தியத்துக்கு இடப்பட்ட பாட்டையை மேலும் விரிவாக்கி, அழகுபடுத்தியதன் மூலம் தவில் கலைக்கு, உலகில் உன்னதமான ஸ்தானத்தையும், தவில் கலைஞர்களுக்கான மதிப்பையும் கௌரவத்தையும்

வளர்த்ததோடு, முன்னேற்றப் பாதையில் நடைபோடும் கலைஞர்கள் பலரும், வழிகாட்டியாகத் தன்னைக் கொள்ளுமளவுக்கு மாபெரும் நிலையையும் புகழையும் பெற்றிருந்தார். தெட்சணாமூர்த்தி அவரோடு தவில் வாசிக்க வேண்டிய கட்டங்களில், மற்ற தவில் கலைஞர்கள் யாவருமே மனதில் பெருங்கலக்கமுறுவது சகஜம். ஆனால், தன்னுடன் வாசிக்கும் கலைஞரை ரஸிகர்கள் குறைத்துக் கருதுமளவில், தனக்குத் தெரிந்ததையெல்லாம் வாசித்துவிடும் குணம் தெட்சணாமூர்த்தியிடம் இருந்ததேயில்லை. மாறாக, தன்னுடன் வாசிக்க நேரும் மிகச் சாதாரண கலைஞரையும், தனக்கு ஈடானவர் போலக் காட்டுவதே அவரது வழக்கம். இது போன்ற நன்மனத்தை மற்றக் கலைஞர்களிடம் காண்பதரிது.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் எல்லாம் தவில் வாசித்துப் பெரும் புகழும், விருதுகள் பலவும் பெற்றார், தெட்சணாமூர்த்தி. "கற்பனைச்சுரங்கம்", "கரவேககேசரி", "தவில்வாத்திய ஏகச்சக்கி ராதிபதி", "லய ஞான குபேர பூபதி" போன்ற அவர் பெற்றுள்ள பட்டங்களை வரிசைப்படுத்துவோமானால், அப்பட்டியல் நீண்டுகொண்டே போகும். தனியாகத் தவில் கச்சேரி செய்ய வேண்டுமென்றும் கேட்கின்ற தொகை தருவதாயும், பலர் அவரை வற்புறுத்தினர். "நாதஸ்வரம் ஒன்றை ஏற்பாடு செய்யுங்கள், அந்த வாத்தியத்தில் ஏதேனும் வாசித்த பின்பே, நான் "தனி" வாசிப்பேன். ஏனென்றால், தவில் ஒரு பக்கவாத்தியந்தானே" என்று அவர் கூறுவார். இவ்விதமாகவும் பல லயவின்யாசங்களைத் தெட்சணாமூர்த்தி நிகழ்த்தியிருக்கிறார்.

யாழ்ப்பாணம் நல்லூர் முருகையாப்பிள்ளை, சீர்காழி திருநாவுக்கரசுப்பிள்ளை, திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை, காருகுறிச்சி அருணாசலம், திருவிடைமருதூர் வீருஸ்வாமிப்பிள்ளை, குழிக்கரை பிச்சையாப்பிள்ளை, திருவெண்காடு சுப்பிரமணியப் பிள்ளை, குழிக்கரை பிச்சையப்பாப்பிள்ளை, திருவெண்காடு சுப்பிரமணியபிள்ளை, சிதம்பரம் ராதாகிருஷ்ணபிள்ளை, திருவீழிமிழலை கோவிந்தராஜபிள்ளை சகோதரர்கள், செம்பொன்னார் கோவில் முத்துக்குமாரஸ்வாமி சகோதரர்கள், திருமெய்ஞ்ஞானம் நடராஜசுந்தரம்பிள்ளை, தருமபுரம் கோவிந்தராஜபிள்ளை, கோட்டூர் ராஜரத்தினம்பிள்ளை, மதுரை சேதுராமன் சகோதரர்கள், அளவெட்டி பத்மநாதன், ஷேக் சின்ன மௌலானா, நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், அளவெட்டி பாலகிருஷ்ணன் போன்ற பல நாதஸ்வரக் கலைஞர்களுக்குத் தெட்சணாமூர்த்தி தவில் வாசித்துள்ளார்.

லய வாத்தியமான மிருதங்கத்தில், ஒப்பற்ற ஸ்தானம் வகித்தவர்கள், பாலக்காடு மணி அய்யரும், பழனி சுப்பிரமணியப்பிள்ளையும், தெட்சணாமூர்த்தியின் தவில் வாசிப்பைக் கேட்டுவிட்டு, "தெட்சணா மூர்த்தி உலகத்தின் எட்டாவது அதிசயம்" என்று மணி அய்யரும், "ஒருமுறை மனதால் நினைத்தாலே" நம்மை வியப்பில் ஆழ்த்தும் மேதை" யென்று சுப்பிரமணியபிள்ளையும் புகழாரம் சூட்டியுள்ளனர்.

ஒரு சமயம், சில கலைஞர்கள் ஒரு வீட்டின் திண்ணையில் அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்த போது, பேச்சு தெட்சணாமூர்த்தியைப்பற்றித் திரும்பியது.

'நம்மை அவருடைய வாசிப்பு பிரமிக்கச் செய்கின்றது. ஆனால், சட்டென்று புரிவதில்லை" என்று ஒருவர் சொன்னார். அப்போது, அவ்வீட்டின் உட்புறத்திலிருந்துவெளியே வந்த, திருத்துறைப்பூண்டி சொக்கலிங்க நாதஸ்வரக்காரர் என்ற வயதுமுதிர்ந்த கலைஞர், "அவன் வாசிப்பு தெய்வீகமானது; அவனே கடவுளின் அவதாரம், தெரியுமா?" என்றார். அவரைப் பின்தொடர்ந்து அவ்வீட்டினுள்ளிருந்து வெளிப்பட்ட, "லயப்பிண்டம்" தவில் வித்துவான் திருமுல்லைவாயில் முத்துவீர்பிள்ளை, "தெட்சணாமூர்த்தி வாசிப்பதைப் புரிந்து கொள்ளும்படியான தவிற்காரன் இப்போதைக்கு எவரும் இருப்பதாக எனக்கே தெரியவில்லை. அவர் வாசிப்பு உனக்குப் புரியாமலிருப்பதில் அதிசயம் என்ன" என்று சொன்னார். இவற்றைவிட மேலான, உண்மையான பாராட்டு இருக்க முடியுமா?

கள்ளங்கபடமற்ற உள்ளமும், உண்மையை எந்தவிடத்திலும் தயங்காமல் கூறுகின்ற தீரமும், அபரிமிதமான மேதாவிலாசமும் நிறையப் பெற்றுத் தவில் உலகின் முடிசூடாச் சக்கரவர்த்தியெனத் திகழ்ந்த இந்த "லயஞான குபேர பூபதி", சிறிது காலம் உடல்நலமில்லாமலிருந்து, யாழ்ப்பாணத்துக்குச் சென்று, மூளாய் என்றவூரில் 13.5.1975 அன்று இறையோடு இரண்டறக் கலந்து விட்டார். தவில் வாத்தியச் சரித்திரத்தில் பொன்னேடுகளைக் கொண்டவொரு அத்தியாயம் முடிவுற்றது. அவரது துணைவி, மனோன்மணி அம்மாள், கணவரையிழந்த துயரத்திலே மூழ்கித் தெட்சணாமூர்த்தி மறைந்த முப்பதாம் நாளில் (14.06.1975) கணவரைப் பின் தொடர்ந்தார்.

கலைச்செல்வி, உதயசங்கர், ரவிசங்கர், உதயச்செல்வி, ஞானசங்கர் எனும் தெட்சணாமூர்த்தியின் மக்களில் உதயசங்கர், நல்லதொரு தவில் கலைஞனாக உருவாகிக் கொண்டிருக்கிறார்.

சக்கரவர்த்தி அக்பரின் அவையிலிருந்த இசைமேதையான தான் ஸேனைப் (Tansen) பற்றி எழுதும் போது, அபுல் பஸல் (Abul Fazall), "ஆயிரம் ஆண்டுகட்கு முன்பும் தான்ஸேனைப் போன்ற கலை மேதை இருந்ததில்லை. இனி வரவிருக்கும் ஆயிரம் ஆண்டுகளிலும் ஒருவர் இருக்கப் போவதில்லை" என்று குறிப்பிட்டுள்ளார். வட இந்திய இசையில் தான் ஸேனுக்கிருந்த இத்தகு சிறப்பைத் தவிலிசையில் பெற்றவர் யாழ்ப்பாணம் தெட்சணாமூர்த்தி என்பது மறுக்க முடியாத உண்மை. உண்மையென்பது பலருக்குக் கசப்பாயிருக்கக் கூடுமெனினும், அது ஆதவனுக்கொப்பானது. திரை போட்டு அதை மறைத்து விட எவராலும் ஆகாது. தவில் என்ற சொல் இப்பூவுலகில் நிலவும் வரையிலும், தெட்சணாமூர்த்தியின் பெயரும் விளங்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

*நன்றி*

**– மங்கள இசை மன்னர்கள் –**

# இரவீந்திரநாதர் கூரின் கீதாஞ்சலி

**மொழிபெயர்ப்பு**
**திரு. பூ.சோதிநாதன் அவர்கள்**
ஓய்வுநிலை விரிவுரையாளர்

## அவன் அருகில் நீ நிற்பாய்

01. ஓதுதல் பாடல் அக்கை
உருட்டிமந் திரத்தைச் செப்பல்
போதுமே! கதவைப் பூட்டிப்
பூசனை அறையி ருட்டில்
ஏதுநீ தொழுவ தப்பா?
எதிரிலே கடவுள் என்றே
யாதுமே இல்லைக் கண்ணை
அகலநீ திறந்து பாராய்

02. கடுவலில் நிலத்தை நன்றாய்க்
கலப்பையால் உழுவார் கல்லை
எடுத்துடைத் தரிய வீத
எடுப்பவர் இடத்திற் சேர்ந்தே
உடுத்திடும் உடையும் தூசி
உகுத்திடும் மழையில் வெய்யில்
அடுத்துநிற் பானைக் காணில்
ஆங்குநீ யும்பார் வந்தே

03. முத்தியா? அதனைக் காண
முடியுமா எங்கும்? எங்கள்
உத்தமத் தலைவன் தானும்
உவகையாய்ப் படைப்பில் தன்னை
அத்துணைப் பந்தம் ஆக்கி
அகப்படு கின்றான் காலம்
அத்தனை யுமெம்மோ டொன்றாய்
அகப்பட நிற்கின் றானே.

04. உன்னது தியானம் கையில்
உளமலர் தீபம் எல்லாம்
இன்னமும் வேண்டாம் என்ன
இழுக்கினை ஆடை கீறல்
மன்னிய அழுக்குச் செய்யும்?
மருவிய நெற்றி வேர்வை
அன்னதோர் வேலை யோடும்
அவனரு கில் நீ நிற்பாய்

## ஆதியில் வந்த சோதி அருங்கதிர் ஒன்றில் வந்தேன்

01. சேதியைக் காணா அந்தச்
செல்வழி நீண்ட தூரம்
போதியோ என்னப் போகும்
பொன்னென வாய்த்த நேரம்
ஆதியில் வந்த சோதி
அருங்கதிர் ஒன்றில் வந்தேன்
ஆதியைத் தேடி எங்கும்
அலைகிறேன் யாத்தி ரைக்காய்

02. வனமெனச் சொல்லத்தக்க
வனப்புள உலகம் எல்லாம்
தினம் ஒளி பரப்பும் மாயத்
திருமிகு நட்சத் ரத்தின்
இனமெனும் மண்டலங்கள்
இவைகளில் தடயம் வைத்தே
முனதெனும் ஒளியின் தேரில்
முன்னுற வெளியே வந்தேன்

03. என்னது பாதை நீண்டே
எப்படிப் போன போதும்
அன்னதோ உனக்கே மிக்க
அருகிலே உள்ள தாகும்.
சொன்னஅப் பயிற்சி எல்லாம்
சுருதிபோல் வளைந்து செல்லும்
பன்னிய கீதம் என்றே
பவ்விய மாகச் செல்லும்.

04. பயணிகள் பக்க வீடு
பலதையும் தட்டிப் பார்த்த
செயலினைத் தொடர்ந்து பின்னர்
சேருவார் தங்கள் வீட்டை
முயன்றுதான் இதயத்துள்ளே
மூழ்கியே போவ தற்கும்
உயர்ந்த இவ் உலகம் யாவும்
உழன்றுநாம் அலைதல் வேண்டும்

05. கண்களால் உன்னைக்காணக்
கருதியே திசைகள் தோறும்
எண்ணிநான் நோக்கி நோக்கி
எத்திசை தன்னி லேயும்
கண்களால் காணேன் ஆகிக்
கண்களை மூடிக் கொள்ள
திண்ணமாய் இருக்க இங்கே
சிக்கெனப் பிடித்துக் கொண்டேன்

06. எங்கு நீ உள்ளாய் என்றே
ஏங்கிநான் விட்ட கண்ணீர்
எங்குமாய்ப் பெருகி ஓடை
எனப்பல நூறு நூறாய்
பொங்கிட நானே உண்மைப்
பொருளெனும் பெரிய வெள்ளம்
சங்கம மாகிப் பூமி
தானும்பி ரளயம் ஆகும்.

## சந்தோசம் எங்கே?

குரு ஒருவரிடம் செல்வந்தர் ஒருவர் "சுவாமி என் மனம் மிகவும் குழப்பத்தில் இருக்கிறது. என் பணியாட்கள் கூட எனக்கு உண்மையாக இல்லை, என் மனைவி, பிள்ளைகள் உட்பட உலகமே சுயநலக்கூட்டமாக உள்ளது. யாருமே சரியில்லை!" என்றார்.

புன்னகைத்த குரு கதையொன்றைச் சொன்னார்.

"ஓர் ஊரில் ஆயிரம் கண்ணாடிகள் இருக்கிற அறை ஒன்று இருந்தது. அதற்குள் சென்று ஒரு சிறுமி விளையாடினாள். தன்னைச் சுற்றி ஆயிரம் குழந்தைகளின் மலர்ந்த முகத்தைக் கண்டு மகிழ்ந்தாள். அவள் கைதட்டியவுடன் ஆயிரம் விம்பங்களும் கைதட்டின. உலகிலேயே மகிழ்ச்சியான இடம் இதுதானென்றெண்ணி அடிக்கடி அங்கே சென்று விளையாடினாள். அதே இடத்திற்கு ஒரு நாள் மனநிலை சரியில்லாத ஒருவன் வந்தான். தன்னைச்சுற்றி ஆயிரம் கோபமான மனிதர்களைக் கண்டான். அச்சங்கொண்ட அவன். அந்தமனிதர்களை அடிக்கக் கையோங்கியவுடன் ஆயிரம் விம்பங்களும் அவனை அடிக்கக் கையோங்கின. உலகிலேயே மோசமான இடம் இதுதானெனக்கூறி அங்கிருந்து வெளியேறினான்.

இந்த சமூகம்தான் ஆயிரம் கண்ணாடிகள் இருக்கிற அறை. நாம் எதை வெளிப்படுத்துகிறோமோ அதையே சமூகம் பிரதிபலிக்கிறது. உன் மனதைக் குழந்தையைப் போல் வைத்திரு. உலகம் உனக்கு சொர்க்கமாகும் என்றார் குரு.

– நன்றி : குமுதம் பக்தி

# ரமண நெறிச் சிந்தனைகள் I

## பிரார்த்தனை எதற்கு?

எல்லாச் சிக்கல்களுக்கும் வேராக இருப்பது மனம்தான். மனத்தின் இயல்பைப் புரிந்து கொள்ளாதவரை சிக்கல்கள் தீர்வதில்லை.

மரத்தின் கிளையை வெட்டினால் மீண்டும் தழைக்கிறது. வேரை வெட்டினால் மரம் தழைப்பதில்லை. வேர் எப்போதும் மண்ணில் மறைந்திருப்பது போல் மனமும் வெளிப்பட்டுத் தோன்றுவதில்லை. மனம் இருக்கும் வரை அமைதியில்லை. மனமற்ற (எண்ணங்களற்ற) நிலையில் சாந்தி கிடைக்கிறது. மனத்தைப் பற்றி ஆராய்ந்து கொண்டே சென்றால் மனம் என்று ஒன்று இல்லை என்பது புரியும்.

**மனத்தின் உருவை மறவாது உசாவ**
**மனம் என ஒன்றில்லை உந்தீ பற**
**மார்க்கம் நேரார்க்கும் இது உந்தீபற**

என்கிறார் ரமணர்.

எண்ணங்கள் நம் வீட்டிற்கு வந்து போகும் விருந்தினர்களைப் போன்றவை. எண்ணங்களை வீட்டிற்குரியவர்களாக விருந்தினரை எண்ணுவது போல நினைப்பது தவறு. எண்ணங்களிலிருந்து விலகி நின்று பார்க்க வேண்டுமேயொழிய அவற்றை நம்முடையவை என்று எண்ணலாகாது. ஏனெனில் எண்ணங்கள் வெளியிலிருந்து வருபவை.

எண்ணங்களே பொருள்கள்; பொருள்களே எண்ணங்கள். இது ஆழ்ந்து பழகினால் புரியும். எண்ணங்களும் பொருள்களும் நிறைந்தது தானே உலகம். எண்ணம் சூட்சமமானது; பொருள் தூலமானது. எண்ணங்களையும் பொருள்களையும் பற்றிச் சிந்தித்து நாம் அவையாக மாறிவிடுவது தான் சிக்கல்களுக்குக் காரணம்.

எண்ணங்களற்ற நிலைதான் இயல்பானது. நம் சுபாவமும் அதுவே. எண்ணங்களின் வலிமையை அகற்றப் பிரார்த்தனையே வழியாகும். அதனால் நிலைத்த இன்பம் கிட்டும். அந்த இன்பம் எல்லோரும் பெற வேண்டும் என்று பிரார்த்தனை செய்வோமே!


**"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே**
**யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"**

# கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி


## அவர்களின்


## 91வது பிறந்தநாள் அறக்கொடை விழா - 07.01.2016














ஆவது பிறந்தநாள்
07-01-2016


J.P.
ஆவது


கலாநிதி
J.P.
ஆவது பிறந்தநாள்
விழா
07-01-2016


கலாநிதி
சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.
91 ஆவது பிறந்தநாள்
அருட்கொடை விழா
07-01-2016


அருட்கொடை விழா

## தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல 34வது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் - 2016






























2016.04.17


34 ஆண்டுகள் நிறைவும்
பரிசளிப்பு விழாவும்
2016.04.17



# ஆன்மாவின் இயல்புகள்

டாக்டர்.எம். முத்துராமன்

‘அளவிடற்கரியவாய், மல இருளில் அழுந்தியிருப்பவாய், சார்ந்ததன் வண்ணமாய், சுதந்திரமின்றியும், அதிருப்தி கொண்டதாயும், அறிவித்தால் அறியவும், சிற்றறிவும், சிறுதொழிலும் உடையனவாய் இருப்பவை.

அளவிடற்கரியது என்றதனாலே ஆன்மாக்கள் பல என்பதும் சைவ சித்தாந்திகள் ஒப்புக்கொண்டுள்ள உண்மையாகும். எனினும், பல நிறமணிகள் கோத்த வெண்மையான சரட்டில், அவ்வம்மணிகளின் நிறம் வேறுபட்டுத் தோன்றினும், சரடு ஒன்றேயாயிருத்தல் போல, ஆன்மா ஒன்றாயிருந்து தேகங்கள் பலவாகும் என்று ஏன் ஒப்புக்கொள்ளலாகாது? கண்கூடாகக் காணப்படும் பல தேகங்களுள்ளும் ஒரே ஆன்மா இருப்பது உண்மையாயின், ஒருவன் எண்ணின எண்ணமே ஏனையோரும் கொள்ள வேண்டும்; அவ்விதம் நிகழ்வதை நாம் காண்பதில்லை. மேலும், மணிகள் கோத்தச் சரட்டின் ஓர் பாகத்தைப் பிடித்து ஆட்டினால், மற்றெல்லா மணிகளும் அசைதல் போல, ஓர் தேகத்தில் ஆன்மா நோயினால் துடிக்கும் போது, ஏனைய தேகங்களும் துடிக்க வேண்டும் அவ்விதமும் நிகழ்வதில்லை. அவற்றிற்கு மாறாக ஒவ்வொரு சீவனும் எண்ணங்கள் வெவ்வேறாய், அறிவுநிலையும் வெவ்வேறாய் இருத்தலினாலே, சரீரந்தோறும் ஆன்மா வெவ்வேறாயிருத்தல் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும் உண்மையாகும். எவ்விதம் தேகங்கள் அளவிடற்கரியனவோ அதைப்போலவே ஆன்மாக்களும் அளவிடற்கரியனவாம்.

மலவிருளில் அழுந்தியிருப்பவை என்றால், குற்றமும் குறையும் வாய்ந்தன என்பது பொருளாகும்; அதனால்தான், உயிர் என்றும், பசு என்றும் அழைக்கப்படுகின்றன. காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாச்சரியம், விருப்பு, வெறுப்பு, பொய்யை மெய்யென்றும், மெய்யைப் பொய்யென்றும் கொள்ளுதல், பிறரை நிந்தித்தல் ஆகிய குறைகள் மலவிருளில் அழுந்தியிருக்கும் ஆன்மாக்களிடம் ஏற்படும் குறைகளாகும். இக்குறைகள் சடப்பொருளாகிய தேகத்தைப் பற்றினவாகும். முன்வினை காரணமாக, அத்தேகத்தைப் பற்றிய ஆன்மாவும், மேற்குறிப்பிட்ட குற்றங்களுக்கு இலக்காகி விடுகிறது. இதுதான் சார்ந்ததன் வண்ணமாதல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கருத்தினை மிகவும் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார் திருவள்ளுவர்.

**நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு**
**இனத்தியல்ப தாகும் அறிவு (452)**

சேர்ந்த நிலத்தின் இயல்பால், நீர் வேறுபட்டு அந்நிலத்தின் தன்மையைப் பெறுவதாகும். அதைப்போன்றே, மக்களுடைய அறிவு அவர்கள் பிறந்து வளர்ந்த சூழ்நிலைகளின் இயல்பினை உடையதாம் என்பர்.

பொதுவாகக் கூறுவோமாகில், நாம் நினைத்த காரியங்களெல்லாம் நினைத்தவாறே செய்ய முடிவதில்லை என்பது அன்றாட வாழ்க்கையில் நாம் காணும் அனுபவங்களாகும். இதற்குச் சரியான விளக்கம் சுதந்திரமின்மை என்பதேயாகும். அதைப் போலவே, எவ்வளவு செல்வங்களைப் பெற்றிருந்த போதிலும், இன்னும் அதிகம் வேண்டும் என்ற அதிருப்தி மனப்பான்மையே மக்களிடையே பல நிலைகளிலும் மேலோங்கி நிற்பதைக் காணலாம். தானே அறியும் திறனில்லாமல் மற்றொருவர் அறிவித்த போது தான் அறிவதால், ஆன்மாவிற்கு இயற்கையுணர்வு இல்லை என்பதாம். இவ்விதமாக எல்லாவற்றையும் அறியும் திறனில்லாமையினால் சிற்றறிவும், யாவற்றையும் செய்யும் வல்லமையில்லாமையினால் சிறுதொழிலும் உடையதாம் ஆன்மா. இந்நிலையில், தானாக அறியும் திறனில்லாத சிற்றறிவும் – ஆன்மாவும் – அறிவே இல்லாத சடப்பொருளும் – தேகம்– எவ்விதம் இணைந்தன என்ற முக்கியமான வினா எழுகின்றது. அதற்குப் பொருத்தமான விடைதரும் வகையில் தான் சித்தாந்திகள் இறைவனை ஒப்புக் கொள்கின்றனர்; சிவம் என்றும் ஈசுவரன் என்றும், பதி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்கற்பாலது. இதனைப் பற்றி விளக்குவோமாக.

உலகம் சித்துப் பொருளென்றும், சடப்பொருளென்றும் இருவகைத்து என்பதை முன்பே குறிப்பிட்டோம். அவற்றில் சடம் அறிவற்ற பொருளாதலால் அவற்றின் ஐம்பூதங்களாகிய மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பவையே தேகமாய்க் காரியப்பட்டுச் சித்துப் பொருளைப் பொருந்துதல் இயலாது. சித்துப் பொருளோ அறிவித்தால் அறியும், அசைவித்தால் அசையும் இயல்புகளையுடையதாம். இந்நிலையில் தானே அறிந்தும், ஐம்பூதங்களைக் காரியப்படத்தியும் அதனால் உண்டாய தேகத்தில் வந்து புகுதல் என்பது நிச்சயமாக இயலாதது. எனவே, சடமாகிய தேகத்தோடு சிற்றறிவும் – சிறு தொழிலுமுடைய ஆன்மாவைக் கூட்டிவைத்து இயக்குவதற்குச் சர்வ வல்லமை பெற்ற மற்றொரு பொருளும் அவசியம் என்பது தெளிவு. அப்பொருளினை, பரம்பொருள் என்றும், இறைவன் என்றும், கடவுள் என்றும் பொதுவாகக் கூறுவர்; சைவ சித்தாந்திகள் அதனைச் சிவம் என்று அழைப்பர்.

சிவஞானபோதத்தின் மூன்றாம் சூத்திரத்தில் ஆன்மாவின் உண்மையை நிரூபித்துக் காட்டிய மெய்கண்ட தேவர், நான்காம் சூத்திரத்தில், ஆன்மாவின் இயல்புகளை விளக்குகிறார்:

**அந்தக் கரண மவற்றினொன் றன்றவை,**
**சந்தித்த தான்மாச் சகச மலத்துணரா**
**தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே.**

மனம், புத்தி, சித்தம் ஆகிய அந்தக்கரணங்களோடு இயைபு கொண்டிருந்த போதிலும், அவற்றிலிருந்து வேறுபட்டது ஆன்மாவாகும். சித்துப் பொருளான ஆன்மாவின் அறிவு பிரகாசிக்காமலிருப்பதற்குக் காரணம், ஆன்மாவானது ஆணவ மலத்துடன் இணைந்திருப்பதே. அதனால்தான், தன் உண்மை நிலையை அறியாது, அந்தக் கரணங்களைத் தாமே என்று எண்ணி, அதனால் ஏற்படும் ஐவகை அவத்தைகளுக்குள்ளாகின்றன. அந்நிலையில், ஆன்மாவுக்கும்

அந்தக் கரணங்களுக்குமுள்ள தொடர்பு எப்படிப்பட்டதென்றால், ஓர் அரசனுக்கும் அவனுடைய மந்திரிகளுக்கும் இடையில் ஏற்படும் உறவைப் போன்றதாகும் என்பதாம். அரசனும் மந்திரிகளும் என்ற உவமானத்தைக் கொண்டு ஆன்மாவுக்கும் அந்தக் கரணங்களுக்குமுள்ள உறவை விளக்கும் முறை, மிகவும் பொருத்தமானதாகவும், பயனுடையதாகவும் அமைந்துள்ளது கவனிக்கற்பாலது. உவமானத்தின் வரையறைகளையும், அதன் பயனையும் மனத்திற் கொண்டு, மேற்கொண்ட கருத்தினை விளக்குவோமாக.

அந்தக் கரணங்கள் என்று குறிப்பிடுவது மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகியவற்றினிடையே வெளி உலகிலிருந்து ஐம்புலன்கள் விடயங்களைப் பெறுவது, கேட்டல், தொடுதல், பார்த்தல், சுவைத்தல், முகர்தல் முதலியவற்றின் மூலமாகத்தான். இவ்வாறு கிடைத்த விடயங்களைப் பகுத்துணர்தல் மனத்தின் செயலாகும். அவ்வாறு பகுத்துணர்ந்ததனை நிச்சயிப்பது புத்தியின் தொழிலாகும். உதாரணமாக, இதுதான் சத்தம்; இதுதான் தின்பண்டம் என்பன போன்றவை, பொருள்களின் தன்மைகளை நிச்சயப்படுத்துகின்றன; இது புத்தியின் தொழிலாகும். இந்நிலையில் மனம் என்ன செய்ததென்று புத்திக்குத் தெரியாது; அதைப்போலவே, புத்தியின் தொழில் மனத்திற்குத் தெரியாது. அவ்வாறு புத்தியினால் நிச்சயிக்கப்பட்ட பின்புதான் அந்த விடயமானது நிச்சயமும் உறுதியும் பெற்று ஒருமைப்பாடு எய்துகிறது. இதனைத்தான் அகங்காரம் என்று கூறுவர். உதாரணமாகக் கூறுவோமாகில், 'இதனை நான் தேர்ந்தெடுத்தேன்' என்ற கூற்றில் 'நான்' என்பது அகங்காரத்தைக் குறிப்பதாகும். இந்நிலையில் அந்த முழு விடயங்களையும் எண்ணிப்பார்க்கும் நிலைக்குத்தான் சித்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரைக்கும் தரப்பெற்றுள்ள விளக்கங்களிலிருந்து, ஒரு விடயத்தினை எவ்விதங்களில் பெற்று அறிந்து கொள்கிறோம் என்பதைத் தெரிந்து கொண்டோம். ஆனால், அவை யாவற்றையும் சேகரித்து ஒன்றுபடுத்தி, நிச்சயித்து உறுதிப்படுத்துவதும் அதன் விளைவாக உண்மை எது என்று உணரச் செய்வதும் ஆன்மாவின் தொழிலே, எனவே, அந்தக்கரணங்கள் ஒவ்வொன்றும் ஒரு செயலையே செய்ய முடிகிறதாம்; அவ்வாறு செயல்படும் யாவற்றையும் ஒன்று சேர்த்து, அவற்றின் உண்மைப்பொருளை உணர முடிவது ஆன்மாவின் செயலால்தான். இக்கருத்தினையே, மந்திரிகளிடமிருந்து எல்லாச் செய்திகளையும் கேட்ட பின்பு, அவற்றினை உறுதிப்படுத்துவதும், உண்மையாக்கப்படுவதும் அரசரால்தான் என்ற உவமானத்தால் விளக்கப்பட்டதும் கவனிக்கற்பாலது.

அந்தக்கரணங்களின் துணைகொண்டு விடயங்களை அறிவதாயிருந்த போதிலும், அவற்றிலிருந்து வேறுபட்டதே ஆன்மா என்பதை விளக்கினோம். இவ்வாறு சித்துப் பொருளாகிய ஆன்மா சடப்பொருள்களாலாகிய அந்தக் கரணங்களிலிருந்து வேறுபட்டது என்னும் கருத்தினை மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார் அருணந்தி சிவாச்சாரியர். அவருடைய விரிவான விளக்கத்தில் ஆன்மா தனித்து இயங்கும் சித்துப் பொருள் என்பது மிகவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், யோகப் பயிற்சிகளில் தேர்ச்சி பெற்ற சான்றோர்கள், அந்தக் கரணங்களின் துணையில்லாமலேயே ஆன்மாவின் சிற்சத்தியால் வெளிஉலக விடயங்களைத் தெரிந்து கொள்ள முடியும் என்பதையும் சுட்டிக்

காட்டப்பட்டுள்ளது கவனிக்கற்பாலது. இதனையொத்த கருத்துக்களை இன்னும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துக் கூறியுள்ள சைவப் பெரியோர்களுள் மறைஞானதேசிகரும், நிரம்ப வழகியரும் குறிப்பிடத்தக்கவர்.

ஐம்புலன்களின் வழியாக வெளிஉலக விடயத்துணுக்குகள் ஆன்மாவைச் சென்றடைந்த பின்புதான் அறிவுநிலை ஏற்படுகிறது. இவற்றிலும், முதன்முதலில் ஏற்படும் பொதுவான அறிவு நிலைக்கு 'வாயிற் காட்சி' என்றும், அதனை அடுத்து நிகழும் அறிவு நிலைக்கு 'மானதக் காட்சி' என்றும் பெயர். இந்நிலையில் தான் ஐம்புலன்களின் மூலமாகக் கிடைத்த விடயங்களோடு மனம் தொடர்புகொண்டு, அவற்றினை ஒழுங்குபடுத்துகிறது. இதனை அடுத்து ஏற்படும் நிலையைத் 'தன்வேதனைக் காட்சி' என்று குறிப்பிடுவர். இந்நிலையில் தான் புத்தியானது விடயங்களை நிச்சயித்து, அதன் பின்பு அவற்றினைச் சித்தம் உறுதிப்படுத்திய நிலையில் தான் ஆன்மாவால் உண்மை விளங்கி அறிவு நிலை உண்டாகிறதாம். இவ்வாறு அறிவு எவ்விதம் ஏற்படுகின்றது என்பதை ஆழ்ந்து கவனிக்கும் பொழுதே ஆன்மாவின் முக்கியத்துவம் நன்கு விளங்கும். ஆன்மாவின் சிறப்பை அவ்வாறு உணரும் போது வேறுசில முக்கியமான செய்திகளையும் வாசகர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும்.

சடப்பொருளாகிய ஐம்புலன்கள் எவ்விதம் வெளியுலகிலிருந்து விடயத்துணுக்குகளைப் பெறுகின்றனவோ அதைப் போலவே ஐம்பொறிகளும் சடப்பொருளாகவே அமைந்து விடயங்களை ஐம்புலன்களினின்று பெற்றுக் கொள்கின்றன. அந்நிலையில் எந்தவிதமான அறிவுச் செயல்களிலும் அவை ஈடுபடுவதில்லை என்பதும் கவனிக்கற்பாலது. இதன் மூலமாக, அறிவுச் செயலுக்குச் சித்துப் பொருளாகிய ஆன்மாவே தகுதியுடைத்தென்பது சொல்லாமலே விளங்கும் உண்மையாகும். எனவே, தேகத்தில் ஆன்மாவின் இருப்பில்லாமல் ஐம்புலன்களோ, ஐம்பொறிகளோ செயற்படுவதென்பதே இயலாது என்பதும் தெளிவு. அறிவுப்பொருளாகிய ஆன்மா, சடப்பொருள்களோடு தொடர்பு கொள்வதினாலேயே, சடப்பொருளைப் போலவே செயற்பட்டு, அறிவு நிலையை ஏற்படுத்தி நிற்கும் என்பதாம். எனவே, ஆன்மா அறிவுப்பொருளாக இருப்பதோடு மட்டுமல்லாமல், சடப்பொருளாகவும் செயற்படமுடியும் என்பதும் கவனிக்கற்பாலது. ஆகவே, அறிவு பெறுவதற்காக, ஆன்மா இருவித நிலைகளிலும் – அறிவு நிலை, சடப்பொருள் நிலை – செயல்பட முடிகிறது என்பதும் தெளிவு. இவ்வுண்மை தான், 'சார்ந்ததன் வண்ணமாதல்' என்று முன்பே குறிப்பிடப்பட்டது. சுருங்கக்கூறின், அறிவுநிலையெய்தி ஞானம் பெறுவதில், ஆன்மாவானது சித்தாகவும், அசித்தாகவும் செயல்படுகிறதென்பதாம்; அந்நிலையில் தான் ஆன்மா, அடிப்படை இயலில் (Metaphysics) அமையும் பொருளாகவும், அதன் காரணமாகவே, கருத்தளவை (Inference) மூலமாகத்தான் அறியத்தக்கது என்பதும் விளங்கும்.

சடப்பொருளாகிய தேகத்தில் சித்துப்பொருளாகிய ஆன்மா இருப்பதால் தான் தேகம் இயங்குகிறது; அதிலுள்ள எல்லா இந்திரியங்களும் செயல்படுகின்றன என்பது இதுகாறும் விளக்கப்பட்டன. கண்ணால் காணும் தேகத்தைத் தூலசரீரம் என்றும் கண்ணால் காணவியலாததும், கனவு உலகத்தில் சஞ்சரிப்பதுமான தேகத்தைச் சூக்கும

சரீரம் என்றும் கூறுவர். மலபந்தங்களால் சூழப்பெற்ற ஆன்மா, ஐந்து அவத்தைகளில் உழலும் என்றும் முன்பே கூறப்பட்டது. சைவசித்தாந்தத்தில் மலம் அல்லது பாசம் என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதும் அதன் தன்மை, பயன் முதலியனவும் பின்வரும் பகுதியில் விளக்கமாக விவரித்தக் கூறப்படும். மலங்களின் தொடர்பால் கட்டுண்ட ஆன்மா, உயிர் என்றும் சீவன் அல்லது பசு என்றும் பெயர்கொண்டு ஐந்து அவத்தைகளில் உழலும் நிலைகளைச் சிறிது ஆராய்வோம்.

முதல் நிலையை நனவு என்றும் சாக்கிரம் என்றும் கூறுவர். மக்களின் பொதுவான வாழ்க்கை இந்நிலையில் தான் இயங்குகிறது. எனவே, இந் நனவு வாழ்க்கையில் ஐம்புலன்களும், ஐம்பொறிகளும் ஆன்மாவின் தொடர்புடன் இயங்குகின்றன; அதன் காரணமாகவே வெளியுலக அனுபவங்களையும் நாம் பெறுகிறோம். இரண்டாவது நிலையைக் கனவு என்றும் சொப்பனம் என்றும் கூறுவர். இந்நிலையில் ஐம்புலன்கள் செயற்படுவதில்லை; சூக்கும சரீரம் தான் ஆன்மாவுடன் இணைந்து செயல்படுகிறது. மூன்றாவது நிலையைத் துயில் என்றும் சுழுத்தி என்றும் கூறுவர். அந்நிலையில், செயல்படுவது பிராணவாயுவும், சித்தமுமே. நான்காவது நிலையைத் துரியம் அல்லது பேருறக்கம் என்று கூறுவர். இந்நிலையில் செயல்படுவது பிராணவாயு – சுவாசம் ஒன்றே. ஐந்தாவது நிலையைத் துரியாதீதம் என்றும் உயிர்ப்படக்கம் என்றும் கூறுவர். இந்நிலையில் ஆன்மா மட்டும் செயல்படுகிற தென்பதாம். கட்டுண்ட நிலையிலிருப்பதால், ஆன்மாவுக்குப் புருடன் என்றும் பெயரிட்டுக் குறிப்பிடுவர். ஐந்தாவது நிலையில் இயங்கும் ஆன்மா உவமானத்துடன் விளக்கப்பட்டுள்ளது. படைசூழ ஊர்வலம் வந்த பின் அரசர் அரண்மனையில் நுழைந்து தன் அந்தப்புரத்தை அடையும் வரையில் படைக்காவலர்கள் முதற்கொண்டு மந்திரிமார்கள் யாவரும் ஒருவர் பின் ஒருவராகத் தத்தம் நிலையில் நின்று கொள்ள, கடைசியாக அரசர் மட்டும் தன்னுடைய அந்தரங்க அறையில் நுழைந்து தாம் மட்டும் இருப்பதே, ஐந்தாவது நிலையில் உள்ள ஆன்மாவின் நிலைமையாம். அந்நிலையிலும் அரசருடைய அறைக்குக் காவலன் இருப்பதைப் போலவே ஆன்மாவுடன் பிராணனும் (சுவாசமும்) இருத்தல் கவனிக்கற்பாலது. ஐந்தாவது நிலையாகிய உயிர்ப் படக்கத்திலும் கண்கூடாகக் காணப்படுவது தேகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சுவாசம் ஒன்றே. அதன் மூலமாகத்தான் தேகத்தில் ஆன்மா உண்டு என்பதும் அறியப்படுகின்றது. இதன் காரணமாகத்தான் அடிப்படை மெய்ப்பொருளாகிய ஆன்மா, அனுமானத்தின் மூலமாகத்தான் ஊகிக்கப்பட முடிகிறதென்பதும், முன்பே குறிப்பிடப்பட்டது. சித்துப் பொருளாகிய ஆன்மா, சடப்பொருளாகிய தேகத்துடன் தொடர்பு கொண்டதால், அதன் இயக்கநிலை மாறி, சடப்பொருளின் நிலைகளாகிய அவத்தைகளில் உழலுகின்றன; அதற்குத் துணை புரிபவையே பாசத்தளைகளாம்.

# ரமண நெறிச் சிந்தனை II

## என்றும் இன்பம்

நம் வாழ்க்கை இருமைகளால் நிரம்பியது. அவையும் ஒன்றுக்கொன்று எதிரானவை. அதாவது இன்பம், துன்பம், வெற்றி – தோல்வி என்பன போன்றவை. ஆற்றுக்குக் கரைகள் இரண்டு; பறவைக்குச் சிறகுகள் இரண்டு; அதுபோல் வாழ்க்கையிலும் இருமைகள். இறுதி உண்மையாகிய கடவுளை அடையும் வரை இருமைகள் உண்டு. இருமைகள் நீங்கிய நிலையில் நாமும் நம் நிலையிலிருந்து வேறொரு நிலைக்குச் செல்கிறோம். அதுவே தெய்வீகம், மோட்சம், நிர்வாணம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது.

நம் மூலத்தை (இயல்பை) அறியாத வரை, அறிந்து அடையாதவரை இருமைகள் இருக்கவே செய்யும். அதைக்கடக்க இரண்டு வழிகள் உண்டு. ஒன்று தூய்மை வழி: மற்றொன்று இணைப்பு வழி அல்லது அன்பு வழி. முதல்வழி தியானம் அல்லது ஞானமார்க்கம். இரண்டாவது பக்திமார்க்கம். மாசற்ற நிலையே துஸண்மை. ஒவ்வொன்றாக விலகிச் செல்லும் போது எஞ்சியிருப்பத தூய்மை. உபநிஷத்து "நெதி நெதி" என்று விலக்கிச் செல்கிறது. எஞ்சியிருப்பது வெளி: சுத்த வெளி. அப்போது எங்கும் அமைதி: எங்கும் மவுனம். வெளியைச் சூனியம், பாழ், ஆத்மா என்றெல்லாம் அழைப்பர். இருமை கடந்த ஒருமை அதுவே.

இந்நிலையில் காணபவன், காணப்படும் பொருள் என்னும் இரண்டும் ஒன்றாகிறது. காணப்படும் பொருள் மட்டுமே இருக்கிறது. அதாவது காண்போன் காணப்படும் பொருளாகவே ஆகிவிடுகிறான். மூலத்தில் ஒடுங்கி நிற்பது என்பதும் மையத்தில் ஊன்றி நிற்பது என்பதும் இதுதான். இதைக் கொஞ்சம் விளக்கலாம். 'நான்– நீ' என்பன ஒன்றைவிட்டொன்று பிரிந்திருக்க முடியாது. "நீ" என்பது மறைந்தால் 'நான்' என்பது மறையும். அதுவே தூய்மை. இருமைகள் கலந்து ஒன்றாகி மறைந்து போகும் இந்நிலையை 'விசுத்திமார்க்கம்' என்று புத்தர் குறிப்பிடுகிறார். ஞானமார்க்கம் 'நேதி நேதி' (இது இல்லை இது இல்லை) ன்று கூறி விலக்குகிறது. பக்தி மார்க்கமோ 'இதி இதி' என்று கூறிச் சேர்க்கிறது. இரண்டும் ஒன்றாவது தான் இலக்கு. அவ்வாறு ஒன்றானால் என்றுமே இன்பமே!

# எந்நாளும் ஏகனோடிரு

ஒருமுறை ஒரு சந்நியாசி ஒரு சாலை வழியாகச் சென்று கொண்டிருந்தார். விறாந்தையில் இருந்து திரிகல்லில் மாதிரித்துக் கொண்டிருந்தான் ஒருவன். அரிசித்துகள் எவ்வாறு திரிகல்லுக்குள் அகப்பட்டு நெரிந்து இடிந்து துகளாகித் தூளாகின்றதோ அதே போன்று தானும் இப்பூவுலகாகிய திரிகைக் கல்லில் அகப்பட்டுப் பெரும் சிரமத்துள் ஆகின்றேன் என்று சிந்திக்க ஆரம்பித்தான். இச்சிந்தனையின் வேகம் தலைப்பட அது காரணமாக அழ ஆரம்பித்து விட்டான். அப்போது தான் முன் கூறப்பட்ட சந்நிதியாசிரியார் அவன் அழுவதை அவதானித்தார். உடன் அவன் அருகில் சென்று "சகோதரரே எதற்காக அழுகின்றாய்?" என்று விசாரித்தார். இந்தத் திரிகல்லில் அகப்பட்டு நெரியும் அரிசிப் பொரி போன்று யானும் இவ்வுலகில் அகப்பட்டுக் கொண்டேன். அதனை நினைத்து அழுகின்றேன்" என்றான்.

சந்நியாசியார் அந்த மனிதனை நோக்கி, "திரிகல்லின் மேலே உள்ள சுழற்றும் கல்லை எடுத்துவிட்டு நடுவில் உள்ள கட்டைக்கருவில் உள்ள உரிசிகளைக் கவனி, கட்டைக்கருகில் உள்ள எத்தனை அரிசிகளும் நெரிபடாமல், முழு அரிசி தானாகவே இருக்கின்றன. இங்கே பார்! நீயும் இறைவனை ஏகப் பொருளை – ஏகனை சதா நேரமும் மனதில் தியானித்த வண்ணம் இருந்தாயானால் உலக வலைக்குள் சிக்கித் தவிக்கமாட்டாய். இறைவனுக்கே ஆழ்ப்பட்டு விடுவாய்! அவ்வாறு வாழ்ந்தால் திரிகல்லின் கட்டைக்கருகில் காணப்படும் அரிசிமாதிரி நீயும் காப்பாற்றப்படுவாய். உலகில் சம்பவிக்கும் துரதிஷ்டங்கள் வந்த உன்னைப் பற்றாது" என்றார்.

**பகை பாவம் அச்சம் பழி என நான்கும்**
**இகவாவாம் இல்லிறப்பான் கண்.**

பகை, பாவம், அச்சம், பழி என நான்கு தீமைகளும் பிறன் மனைவியை நாடிச் செல்லுபவனிடம் எப்போதும் நீங்காதனவாம்.

**ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றுந் துணையும் புகழ்.**

தீங்கு செய்தவர்களைத் தண்டித்தவர்களுக்கு அன்று ஒரு நாளைக்கே இன்பம். ஆனால், பொறுத்தவர்க்கோ உலகம் அழியும் வரை புகழ் உண்டு.

**அழுக்காறு என ஒரு பாவி திருச்செற்றுத்**
**தீயூழி உய்த்து விடும்.**

பொறாமை என்னும் ஒப்பற்ற கொடிய "பாவி" ஒருவனது செல்வத்தையும் கெடுத்து, அவனைத் தீய வழியிலும் செல்லும்படி செலுத்தவிடும்.

# உண்மையான செல்வமும் தருமமும்

குஜராத்தில் வசித்த மேல்தேவி என்பவர் கீர்த்தி வாய்நத ராஜ்மாதா. தாராள மனப்பான்மையுள்ளவர். சோமநாத்தில் உள்ள ஆண்டவனை வழிபடும் பொருட்டு ஒரு கோடி ரூபா பெறுமதியான பொன்னையும் கொண்டு சென்றார். தம்மைப் பொன்னால் நிறுத்து அப்பொன்னை ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்தார். இதனை கண்ணுற்ற ராஜ் மாதாவின் மகனான ராஜா சித்தராஜ் பெரிய குதூகலமடைந்து களிப்புற்று குடிமக்கள் இறுக்க வெண்டிய எத்தனையோ கோடிக்கணக்கான வரியை மக்களிடம் அறவிடாது விலக்கி விட்டார்.

மேல்தேவி தாம் ஆற்றிய அறச்செயல் போன்று உலகில் பிறிதொருவர் இதுவரை செய்திருக்க மாட்டார்கள் என்று தமக்குள்ளே சிந்தித்துச் சிறிது இறுமாப்புக் கொள்ளலானார். பகவான் சோமநாத் திருவிளையாடல் ஒன்றின் மூலம் தமது சீஷைக்கு ஒரு பாடம் கற்பித்துக் காப்பாற்ற வேண்டும் எனத் திருவுளம் கொண்டார். மேனல் தேவி அன்றிரவு ஒரு கனவு கண்டார். எனது ஆலயத்துக்கு ஏழைப்பெண் ஒருத்தி வருகை தந்துள்ளாள். அவள் இதுவரை வருந்தித் தேடிக் காப்பாற்றி வரும் தவத்தினை எவ்வாறாவது மன்றாடிப் பெற்றுக்கொள்" என்பதே கடவுள்.

தேவியார் தாம் கண்ட கனவைப்பற்றித் திடீரென விழித்துச் சிந்தையிலிருத்தினர். ஈற்றில் ஒரு முடிவுக்கு வந்தார். அதாவது, "இது ஒரு பெரிய விடயமன்று. எனது பணத்தைக் கொடுத்து அவளது தவத்தைப் பெற்றுக் கொள்வேன்" எனத் தீர்மானிக்கலானார். அவ்வாறு எண்ணியவராய் மேனல் தேவியாகிய அரசி பணியாளர்களைப் பணித்து ஆலயத்துள் நிற்கும் ஏழைப் பெண்ணை அழைத்து வருமாறு கட்டளை பிறப்பித்தார். உடனே பணியாளர்களும் ஆலயத்துக்குச் சென்று ஒரு வயது போன பிராமணப் பெண் நிற்பதைக் கண்டு அவ்வேழைப் பெண்ணை அரசி முன்பு விடுத்தனர். அப்பெண்ணை அரசி முன்பு விடுத்தனர். அப்பெண்ணை நோக்கி "நீ இதுவரை சம்பாதித்த தபசை, நீ விரும்பிய பொருளைப் பெற்றுக் கொண்டு, எனக்குத் தரவும் என்று பணிவாக வேண்டினர்.

ஏழைப் பிராமணப் பெண் ஒருவிதமான தடுமாற்றமும் இல்லாது, அவ்வாறு தமது தவத்தின் பலனைப் பணத்துக்குத் தரமுடியாது என்று மறுத்து விட்டார். அரசி அவளது மறுப்பினைக் கண்டு ஆச்சரியமும் விசனமும் அடைந்து, "இவ்வாறான தவத்தை எவ்வாறு பெற முடிந்தது என வினவினார்.

ஏழைப் பிராமணப் பெண் தன் விருத்தாந்தத்தை விரிவாக உரைக்கலானார். "எனது மனையை மறந்து, அதனை விட்டு அகன்றேன் அதன் பின்பு அங்குமிங்கும் அலைந்து திரிந்தேன் பல மாதங்கள் பல வருடங்களாக மாறின பல இடங்களுக்கும் ஆண்டியாக அலைந்தேன் திரிந்தேன்.

"பால் நினைந்தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கென பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே...

முன்னும் பின்னுமாக மூலமுதல்வன் வழி காட்டியாக நின்றான். உள்ளொளி பெருக்கும் வழி பிறந்தது. என்னே யான் பெற்ற சாந்தி! ஈற்றில் இந்தப் புண்ணிய ஸ்தலத்துக்கு வந்து அடைந்தேன். நேற்றைய தினம் எனது விரத நாள். இன்றைய தினம் ஒரு புண்ணியவான் ஒரு சிறு உணவை உப்பிடாது தந்தார்.

அதன் பாதியை எமது பரம பிதாவாகிய சோமநாத ஆண்டவருக்கு அன்புடன் இட்டேன். எஞ்சிய பாதியில் ஒரு பகுதியை அந்நேரம் இருந்த ஒரு விருந்தினருக்கிட்டு மிகுதியைக் கொண்டு எனது விரதத்தை முடித்தேன். இதனால் ஒரு பரம திருப்தியடைந்தேன். ஆனால் நாங்கள் எண்ணியவாறு என்ன தவத்தை நான் அடைந்து விட்டேன்.

யானோ ஒரு கவனிப்பாரற்ற அற்பஜீவன். அரசியாகிய தாங்களோ மிகவும் உயர்ந்த ஜீவன். நீங்கள் இதுவரை செய்த புண்ணியகருமங்கள் பெருமை தரக்கூடிய தவத்தினைத் தந்திருக்கும். உங்கள் தந்தை, கணவன், சகோதரர், மகன் யாவரும் அரச குடும்பம். தாங்கள் ஒரு சில தினங்களுக்கு முன்பே பெரிய ஒரு "சங்கார் ஜீ பூசை" என்று கூறப்படும் அரிய வழிபாட்டை எத்தனையோ கோடி பணம் செலவு செய்து ஆற்றி அதனால் எத்தனையோ கோடி தவத்தை அடைந்துள்ளீர்கள் என்று அறியலானேன். இந்தப் பெரிய செய்கையை மக்களிடையே பதிப்பதற்காக தங்களின் இளைய அரசு மக்களிடமிருந்து அறவிடப்படும் வரியான எத்தனையோ கோடிப் பணத்தையும் வசூலிக்காது சலுகை செய்துள்ளாரல்லவா? இவ்வளவு தபோபலன்களையும் ஆற்றிவிட்டு என்னிடமுள்ள அற்ப தவத்துக்கு இத்தனை ஆசை தங்களுக்கு எங்கிருந்து வந்தது? தாங்கள் என் மீது ஆத்திரமோ, வெறுப்போ கொள்ளாது இருப்பீராகில், மேலும் சில விடயங்கள் கூற விளைகின்றேன். தங்கள் உத்தரவு? என்று பிராமணப் பெண் கூறினாள்.

மேனல் தேவியார் அப்பிராமணப் பெண்ணைப் பார்த்து "மனதைத் திறந்து பேசுவதற்குச் சிறிதும் தயக்கமின்றிக் கூறலாம்." என்று கூறினார். "எதற்காகப் பணத்திற்குத் தனது பக்தி ததும்பும் தவத்தைத் தாரை வார்த்துத்தர இயலாது என்பதனைக் கூறுவேன் கேட்பீர்களாக! உலகத்தின் முன் ஒரு ஏழை எவ்வளவு வறியவளாக இருப்பினும் (அவள்) தாமரை மலர் போன்ற மென்மையான

திருவடிகளைத் தாங்கி நின்று பேரருள் பொழியும் இறைவன் மீது அன்பு செலுத்தும் சாந்தியையும் சமாதானத்தையும், உலகில் உள்ள அத்தனை கோடி பொருளும் தந்து விட முடியாது. பக்திக்குச் சமமாக உலகில் வேறு ஒன்றும் இல்லை. ஆகவேதான் அரசி! யான் பெற்ற இச்சிறு தவத்தை சாந்தியை தாங்கள் தர எண்ணும் பணத்திற்குப் பதிலாக பரித்தியாகம் செய்ய இயலவில்லை. **பணம் மாத்திரம் இருந்தும் பயனில்லை.** பணத்திலும் பன்மடங்கு உயர்ந்தது, உண்மையான நேர்மையும், இறைவனிடம் தன்னலமற்ற நேயமும் ஆகும் என்பதனைக் காண்பீராகுக! ஆகவே தர்மத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கடைப்பிடித்தல் அத்தியாவசியம். **அதிகாரத்தை வைத்திருந்தால் மாத்திரம் போதாது. அதனோடு பொறுமையும், எளிமையும் கலந்து விளங்க வேண்டும்.** இளமையிலிருந்தே விரதங்களிலீடுபடுதல், ஆன்மீகத்துறையில் கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும். தாங்காமுடியாத வறுமை வந்துற்றாலும், கையேந்தி வீட்டு வாசலுக்கு வந்தவனை "இல்லை" என்னாது ஏதாவது தந்து உபசரித்து உதவி, அனுப்புதல் இறைத் தொண்டாகும். வெளிப்படையாகப் பார்க்கும் போது இவ்வாறான செய்கைகளின் உண்மைகள், உணர்வுகள் அற்பமாகத் தோன்றலாம். ஆனால் இவைகளை உண்மையான தவசீலர்கள் தவறாது கடைப்பிடிக்க வேண்டியதாகும்" என்று கூறினார்.

பிராமணத் தபசியின் உள்ளத்திலிருந்து உதிர்ந்த சிந்தனை மணிகள் – மேனல் தேவியிடம் உள்ள சிறுமையைத் தரும் பெருமை இருந்த இடம் இல்லாத அகன்று விட்டது. தமது நன்றியைத் தபசிக்குத் தெரிவித்தார். சோமநாதத்தில் உள்ள சங்கார்ஜி தேவன், தனது அடிமையான தேவியை நல்லவளாக்க இவ்வாறு ஒரு பிராமணத் தபசியை அனுப்பி அருள் பாலித்தார்.

---

**ஏதிலார் குற்றம் போல் தங்குற்றம் காண்கிற் பின்**
**தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.**

அயலாரின் குற்றங்களைக் காண்பது போலவே தம் குற்றங்களையும் காண்பாரானால், நிலைபெற்ற உயிர்க்கு எத்தகைய தீமையும் உண்டாகுமோ.

**மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தோடு**
**தானஞ் செய்வாரின் தலை**

மனத்தோடு பொருந்திய வாய்மையையே ஒருவன் சொல்லி வருவானானால், அவன், தவத்தோடு தானமும் செய்பவரினும் மிகவும் சிறந்தவன் ஆவான்.

**தன்னைத் தான் காக்கின் சினங்காக்கா காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்.**

ஒருவன் தன்னைக் காக்க விரும்பினால் சினம் எழாமல் காத்துக்கொள்க. "காவாதிருந்தால் அச்சினமானது அவனையே முடிவில் கொன்றுவிடும்.

# சிவானுபூதிவாசகம் : திருவாசகம்

சைவாசிரியர் பண்டிதர். மு.கந்தையா அவர்கள்

ஆன்மீக இரகசியங்கள் மனித சாமானிய அறிவு சாதனங்களாகிய பொறி புலன் கரணங்களுக் கெட்டாதவை அவை பரம இரகசியங்கள். ஆன்மாவுக்குஞ் சிவனுக்குமிடையிலான அநாதி முறையான தொடர்பின் அந்தரங்க பாவத்தில் அமைந்து கிடப்பவை. தத்துவபரிபாஷையில் அநுபூதி என்ற சொல்லால் அது குறிக்கப்படும். இரகசியம், மறைபொருள் என்றிருக்கும் அளவுக்கு, 'mysticism' என்ற ஆங்கில பதமும் அதைக் குறிக்கும். ஆனால், அநுபூதி என்ற பதங்குறிக்கும் பொருள் அதை விட ஆழமானதும், அகலமானதும், உணர்வுப் பயனை உள்ளிட்டதுமாம்.

அநுபூதி, அநுபவம் என்ற சொற்கள் பதப்பொருள் விநியோகப்படி (Etymologicaliy) அணுகித் தொடர்ந்து ஆதல் எனப் பொருள்படும். இரண்டும் 'அநு' + 'பூ' என்ற வினையடியில் தோன்றிய குணப்பெயர்கள் 'அநு' என்றால் அணுகித் தொடர்ந்து எனவும், 'பூ' என்றால் ஆகு, 'பவம்' என்றால் ஆகல் எனவும் தமிழில் வினியோகஞ்செய்யப்படலாம். எனவே அநுபூதியானது ஆன்மா தன்னுடனான சிவனை அணுகித் தொடர்ந்து ஆதல் என்றாகும் இனி, இந்த ஆதல் என்பது யாது? என விசாரித்தற் கிடமுண்டு. பலனுறுதல், சிவன்வண்ணமாதல் என்ற இருவகைப் பொருள் இதற்குளதாகும். இந்த இரண்டும் இன்புறுதல் அல்லது ஆனந்தமுறுதல் என்றகருது நிலையைத் தருவனவாம். எங்ஙனமெனில், சிற்றின்ப அனுபவம் என்ற பேரில் துன்பக்கலப்பான அற்ப மகிழ்ச்சி யொன்றைப் பெற்றும் பெறாத மாதிரியாக வெறும் இளைப்புங் களைப்புமே கண்டமிச்சம் என்ற அளவில் இருந்த ஆன்மா இந்த நிலைக்கு முற்றிலும் நேரெதிரான வகையிலே செல்லுதல் என்பது பலனுறுதல் என்பதன் விளக்கமாம். இன்ப வடிவினன் என்ற காரணத்தால், சிவன் என்ற சிறப்புக்குரியனவனாய சிவனைச் சேர்ந்து அவன் வண்ணமாதலே சிவன் வண்ணமாதல் என்பதன் விளக்கமாதலின் அதுவும் இன்புறுதல் என்ற அதே கருது நிலைக்குரியதேயாம். தான் இன்பவடிவினனாய் இருப்பவன் தன்னைச் சேர்ந்த ஆன்மாவுக்கு இன்பத்தை யன்றி வேறெதனைக் கொடுப்பது? நிழல்மயமாயிருக்கும் மரம் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு நிழலேயன்றி வேறெதனைக் கொடுத்தல் சாலும்!

**"ஈறிலாப் பதங்கள் யாவையுங்கடந்த இன்பமே என்னுடை அன்பே"**
**"பேராப் பிரியா ஒழிவில்லா மறவா நினையா அளவில்லா மாளா இன்ப மாகடலே"**
**"பரமானந்தப் பழங்கடலதுவே"**
**"பாரின்ப வெள்ளக் கொளப்பரிமேற் கொண்ட பாண்டியனார்"**
**"ஓரின்ப வெள்ளத் துருக்கொண்டு தொண்டரை யுள்ளங் கொண்டார்"**
**"பேரின்ப வெள்ளத்துட் பெய்களலே சென்று சேர்மின்களே"**
**"ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாதிவ் வணிகலமே"**

என்ற இம் மணிவாசகத் தொடர்களைக் கண்டு மேற்சொல்லல் அமையும். திருவாசகம் தவிர்ந்த மற்றுந் திருமுறைகளன்றியும் தமிழில் ஏனைய நூலுரைகளிலுமே

சிவன் இன்பமழிப்பவனென்பதும், சிவனையடைந்த ஆன்மா இன்பாநுபவம் பெறும் என்பதும் பயில வந்திருந்தால் காணலாம்.

**“இணையடி பணிவார் தம்மை இன்பவீட்டைச் செய்யும் துணைவனே”**
**“நெறிநின்றான் வந்தானென் நுத்தீபற நித்தியானந்த னென்று நுந்தீபற”**
**“எல்லையில்லா இன்பத்தே என்னை இருந்திட்டா”**

என்பவாதி நற்சிந்தனை அனுபூதி வாக்கியங்களும் நாமறிவனவே.

“சிவானந்த லஹரீ”, “ஆனந்த லஹரீ” என்ற சமஸ்கிருத நூல்களும் இதுவே ஞாடகமாக எழுந்தவை. வேதவேதாந்தங்களிலும் இடம்பெற்ற உண்மை இது. வேதவேதாந்தசார சித்தாந்தமாயுள்ள பிரமசூத்திரத்தில் அத் 1. பாதம்1. பகுதி13. ஆனந்தமாயாதி கரணம் எனப் பெயர் பெற்றுள்ளது. அதன் முதற் சூத்திரம் “ஆனந்தமயோப்யாசாத்” சிவன் ஆநந்தமயர், அப்பியாசத்தினால் என்பது அச்சூத்திரம், தஸ்மாத்வா ஏதஸ்மாத் விஞ்ஞானமயாத் அன்ய: அந்தராத்மா ஆனந்தமய:- விஞ்ஞான மயத்துக்கு வேறாயுள்ள பிரமம் ஆனந்தமயர்- தைத்திரீயம் 25. என்ற மந்திரத்தாலும், ‘ஆனந்தோ பரஹம்’ – ஆனந்தம் பிரமம் – தைத் 3.6.1. என்ற மந்திரத்தாலும், ‘ஏஷஹிஏவ ஆனந்தயாதி’- இவர் நிச்சயமாக ஆனந்தம் விளைவிக்கின்றார் – தைத் 2.7. என்ற மந்திரத்தாலும் உதாரண விளக்கஞ் செய்யப்பட்டுள்ளது. இருந்தும், ‘ஆனந்தமயம்’ என்பதிலுள்ள மயம் என்பது விகாரப்பொருளில் வந்ததெனக் காட்டி, அது மிகுதிப் பொருளில் வந்ததென்று சூத்திரகாரர், குறித்த 1-1-13 இல், கூறியிருப்பதையும் மீறி அது சகுணப் பிரமத்துக்குரிய இலக்கணமேயன்றி நிர்க்குணப் ப்ரஹ்மமாகிய பரப்ரஹ்ம இலக்கணமாகாது என மறுப்பாருளர். பரப்ரஹ்மம் ஆனந்தமற்ற தென்பது அவர் கொள்கை. சகுணம் பிரமம் நிர்க்குணப் பிரமம் எனப் பிரமத்தை இரு கூறாக்கியதும் இவர்கள் தம் தேவைக்காகப் படைத்திட்டுக் கொண்டதேயன்றி உண்மையில் உள்ளதாகாது.

**“ஈறிலாப் பாதங்கள் யாவையுங் கடந்த இன்பமே**
**என்னுடைய யன்பே”**

என்ற மணிவாசகம், கீழக்கீழப் பதவிகள் எல்லாங் கடந்த பரம்பிரமம் இன்பவடிவினது எனத் தெரிவு செய்திருத்தல் கொண்டு அவர்கருத்தின் பொருந்தாமை தெரியவரும். மேலும், ‘சங்கரனார் தம்மைப் போலத் தம்மடியார்க்கும் இன்பமளிப்பவர்’ திருஞானசம்பந்தர் தேவாரம்: திரிசிரபுரம்2: என்ற திருமுறைவாசகமுங் கருதத்தகும்.

இவ்வகையில் எல்லாம், சர்வசாஸ்திர சம்மதமாயுள்ளது, சிவபெருமான் ஆனந்த மயமானவர்: தம்மையடைந்த ஆன்மாவுக்கு ஆனந்தமளிப்பவர் என்ற உண்மை. இவ்வுண்மையை சிவஞானபோதம் பதினொராஞ் சூத்திரம், ‘அயரா அன்பின் அரன்கழல்செலுமே’ என்பதன் மூலம் இலக்கணப்படுத்தியிருத்தல் கருதத்தகும் இதில் வரும் ‘செல்லுதல்’ என்பது ‘மேன்மேற் செறிதல்’ செறிதற்குக் காரணம் அறிவு. அந்த அன்பு நிகழ்தற்குக் காரணம் அயராமை இம்மூன்றும் தத்துவ ரீதியான ஆன்ம இலக்ணத்துக்

கொத்தனவாயிருத்தல் சுவாரஸ்யமானது. ஆன்ம இயல்பான அறிவிச்சை செயல்களில் அறிவு, அயராமை என்ற பண்பாகவும், இசை, அன்பு என்ற பண்பாகவும், செயல், செல்லுதல் என்ற பண்பாகவும் இங்கு இடம்பெறுகின்றன. பிரபஞ்சப்பற்று, முற்றாக அற்றுச் சுத்தநிலை பெற்ற ஆன்மாவுக்கு அறிவு என இரப்பது முழுவதும் சிவனை அயராமை, அன்பு என இருப்பது முழுவதும் சிவனையே நினைந்து நினைந்து உருகும் உருக்கமும், செயல் என்றிருப்பது முழுவதும் சிவன் கழலில் மேலும் மேலுஞ் செறிதல், சைவசித்தாந்தங் கூறும் அத்துவித முத்திநிலை இவற்றை இன்றியமையாதாகும். திருவாசகத்தில் வரும் 'புணர்ச்சிப்பத்து' முழுவதும் இவ்விலக்கணத்தை அச்சொட்டாகக் கொண்டுணர்த்தி நிற்கும் விதம் அறிந்து மகிழத்தகும்.

**"நெக்கு நெக்குள் உருகி உருகி நின்றும்**
**இருந்தும் கிடந்தும் எழுந்தும்**
**நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி நானா**
**விதத்தாற் கூத்து நவிற்றிச்**
**செக்கர் போலும் திருமேனி திகழ நோக்கிச்**
**சிலிர் சிலிர்த்துப்**
**புக்கு நிற்பது என்று கொல்லோ என்**
**பொல்லாமணியைப் புணர்ந்தே"**

**"ஊன்று மணல்போல் நெக்குநெக்கு உள்ளே**
**உருகி ஓலம் இட்டுப்**
**போற்றி நிற்பது என்று கொல்லோ என்பொல்**
**லாமணி யைப் புணர்ந்தே"**

என்பன வாதி புணர்ச்சிப் பத்துப் பகுதிகள் அயரா அன்பின் அரன்கழல் செல்லும் நிலையைத் துல்லியமாக விளக்குவனவாம்.

திருவாசகங் காட்டுஞ் சிவாநுபூதி விலாசத்தின் மையக் கருத்தாக அமைவது இப்புணர்ச்சிப் பத்தெனலாம். திருவாசகப் பதிக எண்ணிக்கை ஐம்பத்தொன்றில் இது இருபத்தேழாவதாயமைந்திருத்தலுங் கருதத்தகும். இதனை மத்தியகேந்திரமாகக் கொண்டு முன்னும் பின்னும் வருபவையெல்லாம் இவ்வனுபவத்தின் முன்னிலைக் காரணங்களாகவும் பின் விளைவுகளாகவும் கண்டு கொள்வதில் அர்த்தமுண்டு. அகத்தியச் சூத்திரங்கள் எனப்படும் திருவாசகப் பதிகப் பொதுக் குறிப்புக்கள். இதனை மட்டிடுதற்குப் பெருமளவில் உதவக் கூடியனவாயுள்ளன.

ஆரம்பத்தில் வரும் சிவபுராணம் சிவனது அனாதிமுறையான பழமை என்ற அதன் பொருட்குறிப்புக் கிணங்கச் சிவமகிமை, திருவருள் மேன்மை, ஆன்மாவின் அடிமைத்திறம், ஞானப்பேறு என்ற உண்மைகளை உணர்த்தும் வகையால் திருவாசகம் முழுமைக்குமே சிறப்புப் பாயிரமாய் அமைந்து விடுகின்றது. 'நமசிவாய வா அழ்க'

என்ற அதன்முதற்றொடரே ஆன்ம–சிவ உறவின் அந்தரங்கம் முழுவதும் அடங்கிய மஹாமந்திர குளிகையாய் வாய்த்திருக்கும் நிலை மனங்கொளத்தகும். ஐந்தெழுத்தை வாழ்த்தியதாகக் கொள்ளுமளவில் அமையாது அதன் தாற்பரியம் பின்னை என் எனில், நகரத்தாற் குறிக்கப்படும் திரோதானமாய் நீங்காது நின்று லௌகிகப் பேறளித்தும் மீள வகரத்தாற் குறிக்கப்படும் பராசத்தியாய் நீங்காது நின்று ஆத்மிகப் பேறளித்தும் உய்யக் கொள்ளும் முறையால் சிவன் தானாக ஆன்மாவுடன் அத்துவிதமாய் நின்றருளுந் தொடர்ச்சியை அனுபவிக்கும் மெய்யநுபவம் நீங்காதிருக்க என்பதே அதன் யதார்த்த விளக்கமாகும். பஞ்சாக்கரம் வாழ்க என்பது அதன் சொற்பொருளாக, இதுவே அதன் அநுபூதிய பொருளாதலை அறிதல் நலம்.

இச் சிவபுராணத்தைத் தொடர்ந்து வரும அகவற்பதிகங்கள் மூன்றும் எங்குமாயும் எல்லாமாயுந் தூலாமாயுஞ் சூக்குமமாயும் அன்பூற்றாயும் அரள் மேகமாயும் அனுபவச் சுரங்கமாயும் நின்றருளுஞ் சிவனது சர்வாதி பத்தியத்தன்மையைக் காணும் அனுபவத்தை எடுத்துரைப்பனவாகின்றன. தொடர்ந்து வரும் பதிகங்கள், அதிசயப் பத்து ஈறாக உள்ளவை திருவருள் தமக்குப் பல்வேறு வகையிலும் பரிபாக சத்தியாய் நின்றுதவுதலும், பிரபஞ்ச வைராக்கியம் வருவித்தலும், அதுவே ஒரு காலைக்கொரு கால் பேறு, இழப்பு; நினைப்பு, மறப்புக்களை நிகழ்த்தி வருவதிலும் அத்திருவருளே மீளக்குருவாய் எழுந்தருளி மாயா விஜயம், ஆன்மசுத்தி, திரோதான சுத்தி, ஆனம்பூரணம் முத்தி வேட்கையாகிய நிலைகளை ஏற்படுத்தலும் பற்றிய அநுபவ வித்தியாசங்களாம். ஆன்ம அனுபூதிக் காரணிகளாகிய குரு, அன்பு என்ற இரண்டம்சங்களும் இப்பகுதியில் நல்விளக்கம் பெறுகின்றன.

சிவகுருவே ஆன்மீகப் பேற்றின் வெள்ளியும் சுத்தான்மாக்களின் பிராண யாத்திரையில் திசை காட்டியும் ... சிவனே அவர், அவரே சிவன். அவரே ஆளுகைக்குட்பட்ட பக்குபவர்க்கு அவரே எனலாம்.

**"எனக்குள்ளே நீயிருக்கும் எழிலைத்தான் கட்டியெழுப்பி**
**உனக்குள்ளே நானிருக்கும் உண்மையிலே மாட்டி"**

என்பது நற்சிந்தனை அநுபூதி. மணிவாசகக்குரு, 'சிந்தையே கோயில் கொண்ட பெருமான்" ஆயினார்.

**"தந்ததுன் தன்னைக்கொண்டதென் தன்னை"**

என்னுமாறு ஏற்பட்டிருக்கின்றது. அவர்களின் பரஸ்பரக் கலப்பு நிலை. அவ்வகைக் குரு சீஷனை விட்டு நீங்காது அவனுள்ளதிலேயே இருப்பவர் எனினும், வோளவேளைகளில் குரு தன்னைப் பிரிந்து விட்டதை சீஷன் உணர்தலும் அது பற்றித் தவித்த குயில் என்ற கூவுசாதனத்தின் மூலம் மீளச் செய்ய முயல்தலும், ஒரேயொரு உணர்வு நிலையில் அவரை மீள் பிடித்துவிட்டதாக்க களித்தலும் போன்ற அம்சங்கள் மணிவாசகர் அனுபூதி விலாசத்தில் பட்டுப்பட்டொளிருங் காட்சி மனோரமானது.

**"விடையவனே விட்டிடுதி கண்டாய்"**

**"கழலிணையவை பிரிந்துங் கையனேனின்னுஞ் செத்தலேனந்தே**

**"சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூடிய**

**"பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறு ஒளிக்குந் சோரனைக் கண்டனம்"**

**"இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**

**எங்கெழுந் தருளுவ தினியே"**

என்ற திருவாசகப் பகுதிகள் நோக்கத்தில்.

இது சம்பந்தப்பட்ட மட்டில், என் நீங்காதிருப்பவர் விட்டுப் பிரிந்தார் என்பதன் அர்த்தம் என்ன? அவர் தாம் வேண்டும் சீஷனின் உணாவெல்லைக்கப்பால் தம்மை ஒதுக்கிக் கொள்வதென்றே சொல்லவாமன்றி அவர் விலகிப் போயினார் என்பதற்கில்லை. இது ஒருவகையில் அவர் திருவிளையாடல் எனலும் ஆம். இந்தச் சூட்சுமம் துலாம் பரமாகுமாறு நற்சிந்தனை யநுபூதியில் சிவயோக சுவாமிகள் தமது புதிய கவிதைப் பாணியிற் சுளுவாகப் பொறித்து வைத்திருக்கும் நயம் வெகு அலாதியானது.

**"வேடிக்கை செய்கிறானே – பரமபிதா**

**வேடிக்கை செய்கிறானே**

**வேடிக்கை செய்கிறான் கூட இருக்கிறான்**

**வேறா யிருப்பத போற் பாசாங்கு பண்ணுகிறான்"**

இங்ஙனம் சீஷர் விஷயத்திற்கு குரு பாசங்கு பண்ணுதலும், சீஷர் உணர்வை மிகுவித்து அவரை வளர்த்தெடுக்குங் கருணையேயாம். எல்லாம் நன்மைக்கே!

இக்குருவரவும் அதன் பிரபாவமும் பற்றித் திருவாசக அனுபூதி தரும் விளக்கம் மிக அபாரமானது.

**"நானார் என் உள்ளமார் ஞானங்களார் என்னை ஆரறிவார்**

**வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்"**

**"............................................**

**............................................**

**தான் வந்து நாயேனைத் தாய் போல் தலையளித்திட்டு**

**ஊன் வந்து உரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து**

**தேன்வந் தமுதின் தெளிவின் ஒளிவந்த**

**வான்வந்த வார்கழலே பாடுதுங்காண்**

**அம்மானாய்.**

என்பன போன்ற திருவாசகப் பகுதிகள் அநேகம், குருவாராத வரைக்கும் நான், என்னுள்ளம், ஞானம் என்பவற்றுக்கு அர்த்தமே இல்லை. அம்மடிலன்றி நானொருவன் இருந்ததற்கே அத்தாட்சி இல்லையாம். மேலும் ஆன்மீக உள்ளொளி விளக்கம் என்பதொன்று முயற்கொம்பாயிருக்கும் என்ற தெளிவு இவ்வநுபூதி வாசகங்களால் ஏற்படுகின்றது.

இன்னும், இங்ஙனம் சர்வமுக்கியத்துவம் வாய்ந்த குருவாக்குப் பொய்த்து விடுமோ என்பது பற்றி மணிவாசகர்க்கெழுந்த கிலேசக்குறிகளும் திருவாசக அநுபூதியில் ஆத்மரஞ்சகமானவை.

**"பெரியோன் ஒருவன் கண்டுகொள் என்னுன்**
**பொன்னடி யிணை காட்டிப்**
**பிரியேன் என்றென் றருளிய அருளும்**
**பொய்யோ எங்கள் பெருமானே"**

என்ற கிலேசக்குரல் அவற்றுளொன்று பொய்யோ! என்கையில் அது எப்படிப் பொய்யாக முடியும்? என்ற ஏக்கந் தொனிப்பதை உணர உளஞ்சிலிர்க்கும் இனி, இதற்குச் சமதையான ஒரு வாசகம் நற்சிந்தனைய நுபூதியில் இடம் பெற்றிருத்தல் கண்டு மகிழத்தகும்.

**"அந்த வாக்கும் பொய்த்துப் போமோ**
**ஆசன் நல்லூர் வீதியி லருளிய – அந்த"**

இங்ஙனம் திருவாசக அனுபூதியை நினைவூட்டும் அநுபூதிவாசகங்கள் பலவற்றைக் கொண்டிருக்கும் நற்சிந்தனை யநுபூதி நம்மவர்க்குப் பெரும் பேறாதல் கருதத்தகும்.

இனி, மணிவாசகர் அனுபூதியின் செவிலியாக நின்றுதவும் அயரா அன்பின் ஆழ நீளங்களுங் கருத்திற் கொள்ள வேண்டியவையாம். இந்த அன்பும் குருதந்த பரிசு மணிவாசகர்அனுபூதியில் இந்த அன்பின் பரப்பு எல்லையிறந்தது. பிறர் மதிப்பீட்டில், 'அன்பே அன்பே என்று அன்பால் அழுதரற்றி அன்பே அன்பாக அறிவழியும்' அன்பு அவர் அன்பு. ஆனால், அவர் மதிப்பீட்டில் அதன்நிலை அதிமட்டம். கண்ணப்பர் அன்புடன் தமதன்பை ஒப்பியலாய்வு பண்ணுகிறார் மணிவாசகர். தமது அன்பு கண்ணப்பர் அன்பு நிலைக்கு ஏணிவைத் தேறினாலும் எட்டாதென்கிறது அவர் மதிப்பீடு. 'அன்பின் உயர்மடடத்துக்குக் கண்ணப்பர் ஒருவர் வாய்த்து விட்டார். பரவாயில்லை! அடிமட்ட அளவுக்கும் ஒருவன் இருக்கட்டுமேன்' என்ற குறிப்பினால் தான், சிவன் தன்னையும் ஆட்கொண்டிருக்கிறார் எனத்துணிந்தே கூறுகின்றார் மணிவாசகர்.

அம்மட்டிலுமன்றி, தன் உள்ளம் ஒரு முரட்டுக்கற்பாறையென்றும், சிவபெருமான் எவ்வளவோ பிரயத்தனத்தின் பேரில் தான், 'கல்லைப் பிசைந்து கனியாக்குஞ்' சாதனையாகத் தன்னைக் கனிவித்ததாகவுங் குறிப்பிடுகிறார். முன்னொருகால், சிவபெருமான் மேருமலையை வில்லாக வளைத்ததும், தன்னை வளைக்கலாமோ எனக் காண்பதற்குச் சிவன் செய்த ஒரு ஒத்திகையாகும் எனவுந் தெரிவிக்கின்றார்.

"வரைப்பால் நெடுஞ்சிலை யாண்டென்னை யாட்கொண்டவன்"

– திருக்கோவையார் –

அன்றியும் தமதன்பு போதாக்குறையானது, பற்றாப் பணயமானது என்பதை ஆதாரங் காட்டி நிறுவுகின்றார்.

"வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்
பள்ளந்தாழ் உறுபுனவல் கீழ் மேலாகப் பதைத்துருகும் அவர் நிற்க
என்னை யாண்டாய்க்கு
உள்ளம்தான் நின்றுச்சி அளவும் நெஞ்சாய் உருகாதால்
உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம் கண்இணையும்
மரமாம் தீ வினையி னேற்கே"

உச்சிநின்றுள்ளங்கால் வரை தமக்கு நெஞ்சாயிருந்துருகியிருந்தால், உடல் முழுவதுங் கண்ணாயிருந்து ஆனந்த பாஷ்பம் பொழிந்திருந்தால் மட்டுமே அன்புடையனென்று தன்னை நிறுவமுடியும். அதற்கு நேரெதில் விழுக்காடாக, உடலின் ஏக தேசத்தில் மட்டுமுள்ள சின்னஞ் சிறுநெஞ்சமே கல்லாய்க் கிடக்கிறது முகத்தின் ஒரு பகுதியிலுள்ள கண்ணே நீர்ப்பசையின்றி மரத்துப் போயிருக்கிறது. இந்நிலையில், நானுமா அன்புடையவன்? என்பது அவர்நிலை, சரியான நிரூபணம்! இதை நோக்குகையில், மணிவாசகர் உண்மையாகவே தான் சொன்னாரா? என்றது நம்மவர் ஆசங்கை நிலை.

அவர் ஏன் பொய் சொல்ல வேண்டும்? உண்மையையே தான் பேசியிருப்பார் என்பதற்குள்ளேதான் கிடக்கிறது அனுபூதியிரகசியம். எங்ஙனம்? தன்பெருமை தனக்குத் தெரியாமையே சான்றோன் இலக்கணம் அதேபோல் தன்னளவு தனக்குத் தெரியாமையே மெய்யன்பின் இலக்கணம். அதற்கு மட்டுத்திட்டமோ, கொள்ளமளவோ இல்லை. பெருக்கப் பெருக்கப் பெருக்கிக் கொண்டிருப்பதே மெய்யன்பின் லட்சணம். அது அவர் கண்டு காட்டும் அநுபூதி விலாசங்களிலொன்று இந்த அன்புக்கு முன்னிலையாய் நிற்கும் சிவத்தின் எல்லையற்ற வியாபகமும், மட்டற்ற கருணையுமே இத்தகைய அன்பு விருத்திக்கு உத்தரவாகளாம். பூரணசந்திரன் முன்னிலையிற் கட எல்லையிறந்து பெருகும். அப்பெருக்கிற்கு சந்திரனே உத்தரவாதி; என உதாரண வேண்டுமானாற் காணலாம்.

முன்கண்டவாறு, திருவாசக அனுபூதியில் மைய நிலையாய்த் திகழும் புணர்ச்சிப்பத்தை தொடர்ந்து மேல்வரும் ஆன்மாநுபல வினைகள் வாழாப் பத்து முதலாக அச்சோப்பத் ஈறாக விரைவிக் கிடக்கின்றன. அத்துவித புணர்ப்பாகிய அனுபூதி கிடைத்ததுவே இனி "உடலில் வாழேன்" என்ற குரல் எழுகின்றது. "வருகவென்றருள் புரிவாயே "அதெந்துவே (தென்ன) என்றருளாயோ என்ற வேண்டுதல்கள் மலிகின்றன. சிவயோக அநுபூதியில் நடராசதரிசனம் ஒரு முக்கிய

கட்டமாகப் பேசப்பெறும். புறத்தின் தில்லையில் நிகழும் நடராஜ தரிசனத்துக்கு சரிசமனாக அகத்திலே ஆன்மீக கோளத்தில் சிரசுப் பகுதியிலே சிவயோகிகளுக்கு வெளிக்குஞ் சிதாகாயத்திலே நிகழ்வது அந்த மணிவாசகருக்கு அது நிகழ்ந்த தன்னல கண்டபத்திலே வருகிறது. அக்காட்சியில் பிரத்தியேகத் தன்மையை, பதிகக் குறிப்பாகிய அகத்தியச் சூத்திரம், 'சுட்டறு சுட்ட கண்டபத்து' என விமர்சித்திருத்தல் காணலாம். இச் 'சுட்டறு சுட்டு' அனுபூதிக்காகயின் விசேட அம்சமாகும். இவ்வகையிலால் நடராசதரிசனமும் குருதரிசனத்தை தரிசித்துக் கொண்டே நடந்திருத்தல் குறிப்பிடத்தகும். இப்பத்துக்கு முன்னையது திருக்கழுக்குன்று பதிகம். அது பேசுவது முழவதுங் தரிசனக்காட்சி பற்றியே, குருவின் இன்றியமையாமையே இங்கும் மேலிட்டு நிற்பதைக் காணலாம்.

அத்துவித அனுபவம் பெற்றோர், 'அறியாமை அறிவகற்றி' அறிவினுள்ளே அதனைக் குறியாதே குறித்து அந்தக் கரணங்களோடுங் கூடாதே வாடாதே குறைந்திருக்கற்பாலர்' என்பது சிவஞானசிவசித்தியார் கூறும் இலக்கணம். அவ்வகையில் மணிவாசகர் பெற்ற அனுபூதிப்பேறு ... வருங் குழைத்த பத்திற் காணப்படுகிற இனி, சிவானந்தத்துக்கு உயிருண்ணி என்ற சுவாரஸ்யமான ஒரு பெயர். சம்பந்தப்பட்ட உயிரின் செயற்படு தன்மையை விழுங்கி ஏப்பமிட்டு நிற்குஞ் சிவானந்த மேலீட்டு நிலை அநுபூதியின் பத்தின் அசல் என்பர். இந்த அனுபவம் மணிவாசகர் பெற்ற நிலை உயிருண்ணிப் பத்திற் பேசப்படுகிறது. அவ்வகையில் மேல் மேல் நிகழும் அனுபூதி நிலைகள் தொடர்கின்றன. அவற்றுள், சென்னியில் திருவடிகள் மலரப்பெறும் அநுபூதியும் (சென்னிப்பத்து) சிவலோக யாத்திரை அக்களிப்பு அநுபூதியும் (யாத்திரைப்பத்து), மாயப் படைக்கெதிர் போர் தொடுக்கும். அனுபூதியும் (திருப்படையெமுச்சி) மகத்தானவை. மேல்வரும் திருப்படை யாட்சியில் மனிதவாழ் விலட்சியம் வீறுபெறக் காணும் அனுபவஞ் சுவையானது. தன்னெத்த மெய்யன்பர்கள்பாற் கருணை முகிழ்ந்து மணிவாசகர் யாத்திரைப்பத்தில் விடுக்கும் அறைகூவல் ஒன்றும் இத்தொடர் பிற கவனிக்கத்தகும்.

**"பெருமான் பேரானந்தத்துப் பிரியாதிருக்கப் பெற்றீர்காள்**
**அருமால் உற்றுப்பின்னை நீர் அம்மா அழுங்கி அரற்றாதே**
**திருமா மணிசேர் திருக்கதவம் திறந்த போதே சிவபுரத்துத்**
**திருமால் அறியாத் திருப்புயங்கன் திருத்தாள் சென்று சேர்வோமே".**

அசட்டையாய்ச் சுரனைக் கேட்டாய் இருந்து விட்டுப் பிறகு மட்டும், "வீடெங்கெ நாமெங்கே" என முணுமுணுக்க இடம் வையாதீர்கள். இது நல்ல தருணம். எல்லோருமாய்ப் போய்விடுவோம். வேளைக்கே வந்து விடுங்கள் என்கிறது இவ்வநுபூதி வாசகம்; என்னே கருணை!

**"கள்ளத் தலைவர் துயர் கருதித் தங்கருணை**
**வெள்ளத்தலைவர் மிக"**

என்பது திருவருட்பயன் தரும் சீவன்முத்தரிலக்கணம். இது அதற்குத் திருவாசகந்தரும் சிவாநுபூதி இலக்கியம்.

இவ்வகையில் தொடரும் திருவாசக அனுபூதியின் முடிவு அச்சோப் பதிகமாக மலர்ந்திருக்கின்றது.

**"அத்தன் எனக்கருளியவா றார்பெறுவா ரச்சோவே"**

என்றது அப்பதிகத் தொனி. அகத்தியச் சூத்திரம்,

**"அநுபவம் வந்த வழியறியாமை"** என இதற்குக் குறிப்புரைத்திருக்கின்றது. சிவாநுபூதிக்கு முடிவென ஒன்றில்லை என்பதே இதன் தாற்பரியமாகும். சிவமஹிமைக்கும் முடிவில்லை. சிவாநுபூதிக்கும் முடிவில்லை.

திருவாசகமே கண்ணாகக்கொண்டு நாமறியக் கூடுஞ் சிவாநுபூதியிரகசியம் ஒன்றை இனிக் கவனித்து இக்கட்டுரை நிறைவுறுதல் தகும். மணிவாசகர்க்குப் புலப்பாடான சிவாநுபூதி அவர் அகக்காரங்களை மட்டுந் தொட்டெழுந்ததாக இல்லை அகிலமளாவிய அளவில், அவர் காட்சியிற்பட்ட அனைத்தையுந் தொட்டு அது பிரதிபலித்திருப்பதாகவே திருவாசகம் காட்டுகின்றது. மார்கழி நீராடல், அம்மானை ஆட்டம். தெள்ளேணங்கொட்டல், கூவுங்குயில், பாடுங்கிளி, முயலும் வண்டு என்றிங்ஙனம் அனைத்தினூடும் அவர்க்குச் சிவாநுபூதி தன் சுயரூபத்தைக் காட்டியிருப்பதாகவே தெரிகிறது. நீராடப் போகும் மகளிர் பேச்சு, அம்மானை, தெள்ளேண ஆட்டக்கலகலப்பு, குயில்தருங் 'குக்கூ', கிளி மழலை, வண்டு செய்யும் ரீங்காரம் என்பன அவர் செவிகளிற் சிவப்பிரபாவப் பிரசங்கங்களாகவே புலப்பட்டிருக்கின்றன. அது அவர்க்கு வாய்த்திருந்த காட்சி விசேடம்; 'சீவன் முத்தர் எங்குஞ் சிவமே கண்டிருப்பர்; என்றிருக்குஞ் சீவன் முத்தர் இலக்கண விசேடம், நீராடு மகளிர் பாடியதாக அவர் திருவெம்பாவை பாடினார். அம்மனையாடுவார் உரையாடலாக அவர் திருவம்மானை பாடினார் என்பதன் தாற்பரியமிதுவே. அப்பாடல்களின் கரு சரமானியமாக நரம் கருதக்கூடுங் கற்பனையன்று சிவாநுபவக் காட்சியே அவற்றின் கருவாம். கற்பனையாற் பாடவல்லார், பிறர் பாடுந் திருவெம்பாவையோ, திருவெம்மானையோ திருமுறைத் தோத்திரமாக ஏற்கப்படாததன் இரகசியம் இதிலேயே தங்கியிருக்கின்றது.

திருவாசகம் பிரதிபலிக்கும் அனுபூதி உண்மையும் உயர்தரம். அதனைச் சொல்லுஞ் சாதனமாயமைந்த தமிழும் உயர்தரம். அதனைச் சொல்லச் சொல்லத் தமிழ் குழைந்திருக்குங்குழைவும், கனிந்திருக்கும் கனிவும், வேறெங்கும் பெறற்கரியவை இது கிடைக்கப்பெற்றது. தமிழ் செய்த தவம். இவற்றை உணர்ந்து போற்றுதல் தமிழர் தலைக்கடனாகும்.

# பன்றித்தலைச்சி

நீ பணித்த செய்கையினைச் செய்வேன் – நாளும்
நின்னுயிரையே என்னுரையாய் உய்வேன்;
நீ நடத்தும் பாதையிலே நடப்பேன் – என்றும்
நின்னருளால் எத்துயருங் கடப்பேன்
நானெனவொன் றில்லையெனக் கொண்டேன் எங்கும்
நானலநீ நானலநீ கண்டேன்;
ஆன இன்ப மாக்கடலே தாயே – ஞான
அன்புருவே என்முன்வரு வாயே

–சுவாமி இராமகிருஷ்ணர் பிரார்த்தனை–

ஈழவள நாட்டின்கண் உள்ள பழம்பெரும் பதிகளுள் புதுமை மிக்க மட்டுவில் பன்றித்தலைச்சியம்மன் தலமும் ஒன்றாகும். ஈழவளநாட்டிலுள்ள கதிர்காமம், நல்லூர், நயினாதீவு, வல்லிபுரக்கோயில், சந்நிதி போன்ற அருள்பாலிக்கும் அற்புதக் கோயில்களில் இதுவும் ஒன்று. அகில இலங்கை மக்களும் அன்புடன் வழிபடும் ஒரு பழம் பெரும் புதுமைமிக்க தலமாகும். இங்கே சைவர், பௌத்தர், கிறீஸ்தவர் மகமதியர் வந்து வழிபாடு செய்வதைக் கண்ணாற் காணலாம். அன்னையார்க்கும் சொந்தந்தானே. எல்லாரும் அவள் மக்கள் தாமே. அனைவருக்கும் அருள் பாலிக்கும் இந்த அம்மனைப் பன்றித்தலைச்சியம்மன் என அழைப்பர். இன்றும் ஒரு குடிலில் இருந்து கொண்டு அருள் பாலிக்கும் இந்தப் பன்றித்தலைச்சியம்மனை அறியாதார் யாழ்ப்பாணத்திலில்லை.

பன்றித்தலைச்சியென்னும் பெயர் ஏற்பட்டதைப் பற்றி பல கதைகள் வழங்கி வருகின்றன. பன்றித்தலைதரு தெய்வம் என்றும் பன்றித்தலையையுடைய தெய்வம் என்றும் கொள்ள இடமுண்டு. பன்றித்தலைதரு தெய்வமென்பதை பழங்கதைகள் நிரூபிக்கின்றன. பண்டைக்காலத்தில் ஒரு பறைக்குலப் பக்தன் இக்கோயிலுக்குக் கிழக்கே உள்ள வடலிக் கூடலில் ஒரு மாட்டைக் கொன்று இறைச்சியை எடுத்துக் கொண்டு தலையையும் தோலையும் அங்கே புதைத்தான் என்றும் அந்த மாட்டின் சொந்தக்காரன் அதை அறிந்து ஆளைக் கையும் மெய்யுமாகப் பிடித்தான் என்றும் உடனே பறைக்குலப் பக்தன் "ஆச்சி அபயம்!" என்று அலற மாட்டுத்தலை பன்றித் தலையாக மாறியதென்றுங் கூறுவர். இக்கதையை சிறிது விளக்கி சிலர் பின்வருமாறும் கூறுவர். பண்டித்தலம் (பண்டு + இத்தலம்) காடடர்ந்த பகுதியாக இருந்ததென்றும் அதையடுத்துப் பன்றிகள் இருந்தனவென்றும் மாடுகள் இப்பிரதேசத்தில் வந்து மேய்வது உண்டென்றும் இத்தலம் சோலைக்காடாக இருந்ததென்றும் சொல்வர். அக்காலத்தில் எந்தவிதமான உருவமும் இருக்கவில்லை என்றும் ஒரு பீடம் மாத்திரம் இருந்ததென்றும் அதற்கு அங்கி அணிந்து விசேட காலங்களில் வழிபட்டு வந்தார்கள் என்றும் சொல்லக் கேட்டுமிருக்கிறோம். அக்காலத்தில் ஒரு பறைக்குலப் பக்தன் இக்கோயிலை முறைப்படி வணங்கி வந்தானம்.

ஒரு நாள் அவன் பன்றி வேட்டையாடும் போது அவன் விட்ட அம்பு ஒரு மாட்டின் மேல் பாய்ந்து மாட்டினைக் கொன்றுவிட்டது. மாட்டுக்காரன் ஒரு பெரிய நடப்புக்காரன். அவன் தன்னை மாட்டிவிடுவான் என்று பயந்த பக்தன் கண்ணீர் சொரிந்தான். மாட்டுக்காரனோ பெரிய நடப்புக்காரன் ஆயிற்றே. என்ன செய்வான் ஏழைப்பக்தன் ஆச்சி இன்றோடு இக்கொலைத் தொழிலை விட்டுவிடுகிறேன். என்னை நீ காத்தருள் என்று சரண் அடைந்தான். மாட்டுக்காரன் ஆட்களுடன் வந்து விட்டான். பக்தன் நடுங்கினான் ஆட்கொள்ளும் காலம் வந்து விட்டபடியால் அன்னை மாட்டுத் தலையைப் பன்றித்தலையாக்கி விட்டாள். பக்தன் பன்றித்தலைச்சி ஆச்சி என்றான். அன்று தொடங்கி பன்றித்தலைச்சி என்று வழங்கி வருகிறது என்பர். அன்னை பன்றித் தலையைத் தந்தபடியால் இப்பெயரைப் பெற்றனள் என்பர்.

பன்றித்தலைச்சி என்பதை பன்றித்தலையை உடைய தெய்வம் என்றும் கூறுதற்குரிய சான்றுகளும் உள. ஆனைமுகன் என்பது ஆனைமுகத்தையுடைய பிள்ளையாரைக் குறிப்பது போல பன்றித்தலைச்சி என்பது பன்றித்தலையையுடைய தெய்வத்தைக் குறிக்கும். பழைய நூல்களில் வராஹி என்று குறிப்பது பன்றித்தலையையுடைய தெய்வம் என்பதை சேர். ஜோன். உட்ராப்ஃப் என்னும் ஆங்கிலேயர் தனது "தந்திரராச தந்திர" என்னும் நூலின் ஒஓமைம் அத்தியாயத்தில் கூறி இருக்கிறார்.

முதலில் இந்த வெள்ளையர் யார் என்பதைப் பற்றியறிய வேண்டுமல்லவா? சென்ற நூற்றாண்டில் கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றும் போது அந்த நீதிமன்றத்தில் சில வக்கீல்கள் நெற்றியில் குங்குமப் பொட்டுடன் வருவதைக் கண்ட நீதிபதி அதை எதற்காக அணிகிறீர்கள் எனக் கேட்டார். 'கோரியதைத் தரும் மகாதுர்க்கையின் பிரசாதம் இதுவென்று' பதில் சொன்னார்கள். அவர் அதன் உண்மையை அறிய விரும்பித் துர்க்கையைத் தானும் வழிபட்டு வந்தார். உடனே அவர் கோரியதெல்லாம் கிடைத்தது. அன்றுமுதல் அவர் இந்து சாஸ்திரங்களை அதன் மூலமொழியில் படிக்க விரும்பி வடமொழியைக் கற்றார். பல நூல்களை ஆராய்ந்து பின்பு துர்க்கையைப் பற்றிய தந்திர சாஸ்திரங்களில் அதிக ஈடுபாடு கொண்டார். அவர் தந்திர சாஸ்திரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து பதிப்பித்தார். அதில் தந்திர ராசதந்திரமென்பதும் ஒரு நூல், அதிற்றான் அவர் பன்றித்தலைச்சி வழிபாட்டைப் பற்றிக் கூறியிருக்கிறார். அது பின்வருமாறு ஆகும். (She has the of a boar (Kolasya) and her body which from her throat downward is that of a women is of the colour of molten gold. Her hair is of a burning tawny colour. She has three eyes and eight arms. She is seated on a lion, Her five names are Varahi, Pancami, Visvanisaya, Bhadrakaumudi and Vartali, she shonld be meditated unpon along with her parivaras.) ஆகவே பன்றித் தலையையுடைய ஒரு அம்மன் பழைய வடமொழி நூல்களில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அதை வராஹி என்றும் பல புலவர்கள் எடுத்தாண்டுள்ளனர். அபிராமி அந்தாதியில் தேவியின் நாமங்களைக் கூறும்போது அபிராமிப்பட்டர்,

**நாயகி நான்முகி நாராயணிகை நளினபஞ்ச**

**சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு**

**வாயகி மாலினி வராஹி சூலினி மாதங்கிஎன்**

**றாயகி வாதி யுடையாள் சரணமரணமக்கே.**

என்றும்,

இராஜேஸ்வரி அட்டகத்தில் தேவியின் நாமங்களைக் கூறிக்கொண்டு போகும் போது

**அம்பா சூலதனு குசாங்குசதரீ அர்த்தேந்து பிரம்பதாரி**

**வராஹி மதுகைட ப்பிரசமநீ வாணி ரமசேவிதா**

**மல்லாத் யாசூரமுக தைத்யதமநீ மகேஸ்வரி அம்பிகா**

**சித்ரூபி பரதேவதா பகவதி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி**

என்றும்,

வருவதைக் காணலாம். ஆகவே பன்றித்தலைச்சி என்பது ஒரு பழம் பெரும் தெய்வம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஆகவே பன்றித் தலையைத் தந்த தெய்வமெனினும் பன்றித் தலையையுடைய தெய்வமெனினும் இரண்டுக்கும் பொருந்தப் பன்றித்தலைச்சி அம்மன் ஒரு சிறு குடிலில் இருந்து கொண்டு பெரிய அற்புதங்களைச் செய்து வருவதை நாம் கண்ணாரக் காண்கிறோம். மாட்டுத் தலையைப் பன்றித் தலையாக்கிய அற்பதம் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் நடந்திருக்க வேண்டுமென்று கூறுகின்றனர் சிலர். மாட்டைக் கொன்று தின்னும் ஒரு சாதி ஒரு மாட்டைக் கொன்றதற்காக ஒருவனை குற்றவாளியென்று கருதமாட்டார்கள். ஆகவே இது அவாகள் காலத்திற்கு முன்னரே நடந்திருக்க வேண்டும். மாட்டுக் கொலை பெரும் பாதகமாகக் கருதப்பட்ட சைவமன்னர் ஆட்சிக்காலத்திலேயே நடந்திருக்க வேண்டுமென்று எந்தக் குழந்தையும் ஒப்புக்கொள்ளும். சுவாமி ஞானப்பிரகாசர் ஒரு மாட்டை இறைச்சிக்காகக் கொடுக்கப் பயந்தே சிதம்பரம் ஓடினார். ஆகவே அவர் காலத்திற்கும் முற்பட்டதாக இருக்க வேண்டும் அக்காலத்தில் மாட்டைக் கொல்வது ஒரு மகாபாதகமான செயலாகவிருந்தது. அது ஒரு தப்ப முடியாத குற்றமானபடியாற்றான் பறைக்குலப்பத்தன் பயந்து அழுதிருக்க வேண்டும். அதனாற்றான் அன்னை இரங்கி மாட்டுத் தலையைப் பன்றித் தலையாக்கித் தன் பெயரைப் பன்றித்தலைச்சி எனக் காட்டியிருக்க வேண்டும். இன்றும் இக்கோயில் இருக்கும் நிலங்களும் அதைஅடுத்துள்ள காணிகளும் பன்றித்தலைச்சி வளவு என்றே அழைக்கப்படுகின்றன. இந்தப் பன்றித்தலைச்சியம்மன் கோயிலை சின்னப்பா பூசாரியாரின் மூதாதைகள் பரிபாலித்து வந்தனர். அதற்கு வேண்டிய பணிவிடைகளை சுத்தபோசனம் அருந்தும் கல்வயல் மக்கள் செய்து வந்தனர். திங்கள் தோறும் சிறப்பாகப் பூசைகள் நடந்து வந்தன. பன்றித்தலைச்சியம்மன் கோயிலுக்கு வந்து பட்டினியோடு போகிறவர் எவருமில்லை. நீர்ச்சோறும் புக்கையும் மோதகமும் எல்லாருக்கும் கிடைக்கும். இக்கோயிலுக்கு ஏராளமான நெற்காணிகளும் வளவுக்காணிகளும் உண்டு. இந்த வரும்படியை எல்லாம் சின்னப்பாப் பூசாரியாரும் அவர் மூதாதையரும் அவித்துக் கொடுத்தும் கோயிற் பூசையை ஒழுங்காகச் செய்தும் மகிழ்ந்து வாழ்ந்து வந்தனர். இன்று

அவருடைய மக்கள் இருவரும் அவரது சகோதரன் மகன் ஒருவரும் ஆக மூன்றுபோர் ஆண்டுக்கொரு முறை கோயில் நிர்வாகத்தை நடத்தி வருகின்றனர். இக்கோயிலில் பங்குனித்திங்கள், சித்திரை வருடப்பிறப்பு, வைகாசி விசாகம், ஆவணிச் சதுர்த்தி, புரட்டாதி நவராத்திரி, மார்கழித்திருவெம்பாவை (கொடியேற்றம் அப்போதுதான்) என்பன விசேடமாக நடத்தப்படுகின்றன. பங்குனித்திங்களிற்றான் பக்தகோடிகள் வைகறை தொடங்கி வந்த வண்ணமாக இருப்பார்கள். வருபவர்கள் எல்லாம் பொங்கலுக்கு வேண்டிய அடுக்குகளுடன் வந்து பொங்கிப்படைத்துப் பின் சாப்பிட்டு அன்னையின் அருள்பெற்றுச் செல்வர். அம்மாளாச்சி தீர்த்தமாக நின்றும் அனைத்துயிரையும் காக்கும் சக்தி புலனாகும். ஒருவாளி தீர்த்தமாவது தன் தலையில் வாராத பக்தர் இல்லை எனலாம்.

அன்னையின் பொங்கலையும் அதற்கேற்ற அயல் தோட்டங்களிலுள்ள கத்தரிக்காய்க் கறியையும் விரும்பியுண்ணாத மனிதரில்லை. அன்று முழுநாளும் பூசையும் அபிஷேகமும் கலகலப்பாகக் கோயிலடியில் விளங்கும். பத்துமைலுக்கப்பால் நின்று பார்த்தாலும் பக்தர் செய்யும் (பொங்கல்) யாகப் புகை முகில்களுடன் கலப்பதைக் கண்ணாரக் காணலாம். தேவர்கள் தெய்வலோகத்தில் இருந்து இறங்கி அன்னையை வழிபட வந்து விட்டதாகவே அன்றைய காட்சியிருக்கும். தாயிடம் வரும் பிள்ளை என்ன ஆவலுடன் ஓடி வருமோ அது போல் அகிலாண்ட ஈஸ்வரியிடம் எல்லாத்திக்கிலுமிருந்து குழந்தைகள் ஆடியும் பாடியும் பிரதட்சணம் செய்தும் வந்து சேரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். சிவயோகசுருவும் அவர்களின் குருநாதராகிய செல்லப்பாச் சுவாமிகளும் இப்பூவுலகினில் நடமாடிய காலத்தில் வருடந்தோறும் பங்குனி மாதம் முதலாந் திங்களில் இத்தேவியின் தலத்துக்கு யாத்திரை செய்து பொங்கி வழிபாடாற்றி வந்தனர். சீவன் முத்தர்களாகிய இவர்களே ஆலய வழிபாடாற்றிய தலமன்றோ இது! இதன் மகிமைதானென்னே!

1958ஆம் ஆண்டு சிங்களவர் தமிழருடன் கலகம் செய்த போது எங்கள் குருநாதன் இங்கே சிறந்ததொரு அபிடேகம் செய்யும்படி கட்டளையிட்டார். அது அவ்வண்ணம் நடந்தது. கலகமும் ஒழிந்தது. பங்குனித்திங்கள் தோறும் சிலம்பு கூறல் என்னும் பாடல் பறைக்குலப் பக்தர்களால் படிக்கப்பட்டு வருகிறது. அதில் சிலப்பதிகாரக் கதை கூறப்பட்ட போதும் கண்ணகியின் பிறப்பு விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. மதுரை மீனாட்சியின் கண்ணிலிருந்து பறந்த பொறிதான் கண்ணகையானதென்பது அவ்வேடுகளின் சாரமாகும். தேவியைக் கண்ணகை என்று வைத்துப்பல பக்தர்கள் பாடியுமிருக்கிறார்கள். பண்டிதமணி கணபதிப்பிள்ளையவர்கள் பாடல் ஒன்றும் உண்டு.

இன்று இத்தலத்தில் இருப்பது சிவகாமி அம்மன் திருவுருவாகும். ஆகவே சிவகாமியாயும், பன்றித்தலைச்சியாயும், கண்ணகியாயும் அம்மன் இருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள். எவர் எவர் எவ்விதம் எண்ணி வழிபடுகின்றனரோ அவர் அவருக்கு அவ்விதம் அருள் செய்து கொண்டிருக்கும் ஆதி

சக்தியாவள் எங்கள் அன்னை. கொடிய தொற்று நோய்களும் கலகங்களும் அன்னை பெயரைச் சொல்லவே அகன்றுவிடும். கண்ணோய்காரர் கொடுக்கும் கண்மடல்கள் அனந்தம். அன்னை ஏழைகளின் தெய்வம். எந்த ஊழையையும் கைவிடாள். இங்கே நீர்ச்சோறு கொடுக்கும் வேளைகள் பல. பொங்குகிறவர்கள் புக்கையை அங்கேயே பெரும்பாலும் கொடுத்துச் செல்வர். இக்கோயிலடியில் குழப்பம் செய்தவர் எவரும் மறுமுறை கோயிலடிக்கு வருவதில்லை. தீராத நோய்களை எத்தனையோ பேருக்குத் தீர்த்து வருகிறாள் எங்கள் அன்னை. நீர்வேலி மக்கள் பங்குனி மாதத்தில் வசந்தன் கவிபாடி வசந்தன் அடிப்பதுமுண்டு.

கார்த்திகைச் சோமவார விரதமும் பங்குனித் திங்கள் விரதமும் பிடியாத குழந்தைகள் கூட மட்டுவில் சரசாலைப் பகுதியில் காணமுடியாது. பெரும்பாலும் இப்பகுதி மக்கள் கோயிலுக்குச் சென்று பொங்கி வந்தே விரதம் முடிப்பர். அம்மன் கோயிலுக்குப் போவதில் குழந்தைகளுக்கு ஒரு தனி ஆர்வம். தாங்கள் வேண்டியதை எல்லாம் அங்கே பெறலாம் என்பது அவர்களது எண்ணம். அதில் ஒரு பேருண்மையும் உண்டுதான். அழுதால் உன்னைப் பெறலாமே என்றார் மணிவாசகரும். இக்கோயிலிலும் தங்கள் துக்கங்களைச் சொல்லி யார் யார் அழுகிறார்களோ அவர்களுக்கு எல்லாம் விமோசனம் கிடைப்பதாகக் காண்கிறோம். அன்னையைச் சரணடைந்து வழிபடும் அன்பருக்கு இன்னல் வரமுடியாது.

**"உமையு முமையொரு பாகனு மேகவுருவில் வந்திங்**
**கெமையுந் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணுதற்குச்**
**சமையங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை**
**யமையு மமையுறு தோளியர் மேல்வைத்த வாசையுமே"**
**ஆத்தாளை யெங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்**
**பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்**
**காத்தாளை யங்குச பாசாங் குசமுங் கரும்பு மங்கைள**
**சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு தீங்கில்லையே.**

**- அபிராமி அந்தாதி -**

**- நன்றி : சிவதொண்டன்-**

# மட்டுவில் பன்றி தலைச்சி அம்மன் திருக்கோவில் சிறப்பு

ஈழ வள நாட்டிலே வடபாகத்தே குடாநாட்டில் தென்மராட்சிப் பகுதியில் மட்டுவில் கிராமத்தில் "பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில்" எனும் புண்ணிய ஸேத்திரம் அமைந்துள்ளது. தொன்று தொட்டு விளங்கும் இந்து சமய வழிபாட்டிலே தாய்த் தெய்வ வழிபாடானது பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்பாள் ஆலயத்திலே சிறப்புற்று விளங்குகின்றது. இவ் ஆலயம் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்ததாகும்.

தற்போது நாம் காணும் இடத்தில் உள்ள ஆலயம் கி.பி 1750 இல் திரு. நாகர் கதிர்காமர் என்பவரால் வைரக்கற்களைக் கொண்டு கட்டப் பெற்றதாகும். மூலஸ்தானத்தின் மேற்குப்புற வைரக்கற்சுவரில் 1750 என ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு அமைந்திருந்த ஆலய அமைப்பிற்கான அடையாளங்களும் காணப்படுகின்றன.

அதாவது பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் கோவில் தற்போது உள்ள இடத்தில் முன்னர் அமைந்திருக்கவில்லை. பழைய கோவில் தற்போதுள்ள கோவிலுக்கு வடக்குப் பக்கமாக இருந்திருக்க வேண்டும். அதற்கான செங்கற்கட்டிட இடிபாடுகள் தற்போதுள்ள ஆலயத்தின் வடக்குப் பக்கத்தில் இன்றும் காணப்படுகின்றன. அத்துடன் பிள்ளையார், கந்தசாமியார் கோவில்களும் மேற்குப்புறத்தே அமைந்திருந்தமைக்கான அடையாளங்களும் காணப்படுகின்றன. இவ் ஆலயத்திற்கு "பன்றித்தலைச்சி" எனும் பெயர் ஏற்பட்டதைப் பற்றிக் கர்ண பரம்பரைக் கதை ஒன்று கூறப்படுகின்றது. பண்டைக்காலத்திலே வள்ளுவ குலத்தைச் சேர்ந்த பக்தனொருவன் ஆலயத்திற்கு கிழக்கே உள்ள வடலிக்கூடலில் மாடு ஒன்றைக் கொன்றுவிட்டான். அச்சம்பவம் ஊர் மக்களுக்குத் தெரிய வந்தது. தன் தவறை உணர்ந்த பக்தன் அம்பாளை வேண்டித் தொழுதான். மறுநாள் ஊர்ப்பெரியவர்கள் முன்னிலையில் மாட்டின் தலை புதைக்கப்பட்ட இடம் தோண்டப்பட்டது. அங்கு பன்றித் தலையே காணப்பட்டது. அனைவரும் அம்பாளின் அற்புதத்தைக் கண்டு பேரானந்தமடைந்தனர். அன்றிலிருந்து அம்பாள் பன்றித்தலைச்சி அம்மன் என்று பக்தர்களால் வணங்கப்பட்டு வருகின்றாள். ஆரம்ப காலங்களில் அன்னையின் ஆலயத்தில் நிர்வாகிகளே பூஜைகளை மேற்கொண்டு வந்தனர். 1900ஆம் ஆண்டிலிருந்து பிராமணக்குருமார் பூஜைகளை ஆற்றுகின்றனர்.

1939ஆம் ஆண்டிற்கு முன்பு திங்கட்கிழமைகளில் அம்பாளுக்கு இரண்டு நேரப்பூஜையும் மற்றைய நாட்களில் அபிசேகமும் விளக்கு வைத்தலும் நடைபெற்று வந்தது. 1939இல் இரண்டு கால நித்திய பூஜை நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் ஆசனத்தில் கும்பம் வைத்து முகம் சாத்தி அம்மனுக்கு பூஜை நடைபெற்று வந்தது. தர்மகர்த்தா திரு.சி.சிவகுரு அவர்கள் 1946ஆம் ஆண்டில் ஐப்பசி மாதம் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் கண்ணகை அம்மன் தாமிரவிக்கிரகம் பிரதிஸ்டை செய்து

மகாகும்பாபிஸேகத்தை செய்வித்தார். அதே வருடமே மார்கழித் திருவெம்பாவை காலத்தில் வருடாந்த மகோற்சவத்தினையும் முதன் முதலாக ஆரம்பித்தார். 1950இல் நான்கு நேர பூஜை இடம்பெற்று 1952இல் இருந்து ஆறுகாலப் பூஜை இடம் பெறுகின்றது. பழமை வாய்ந்த கட்டிடங்கள் என்பதனால் மூலஸ்தானத்தினை புனரமைப்பதற்காகவும் பல்வேறு திருப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் திரு.சின்னப்பா சிவகுரு அவர்கள் 1989இல் பாலஸ்தாபனம் செய்வித்தார். மூலஸ்தானம் புனரமைக்கப்பட்டும் நீராவி மண்டபம் அமைக்கப்பட்டும் ஸ்தூபி வைக்கப்பட்டும் (இதுவரை காலமும் செப்பினால் வேயப்பட்ட குடில் காணப்பட்டமை நோக்குதற்குரியது) பரிவார மூர்த்திகட்கான ஆலயங்கள் அமைக்கப்பட்டும் 1991 இல் மகா கும்பாபிசேகம் இடம்பெற்றது. 1993இல் அம்பாளுக்கு சித்திரத்தேர் அமைக்கும் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டது. 1999இல் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இடம்பெற்றது. இக்காலப்பகுதியிலே வெள்ளைக்கற்களைக் கொண்டு தேர்த்தரிப்பிடம் அமைக்கப்பட்டது. 2008 இல் இராஜ கோபுரத்திற்கான அத்திபாரம் இடப்பட்டு வெள்ளைக் கற்களைக் கொண்டு இராஜகோபுர கீழ்த்தளம் அமைக்கப்பட்டு 2012 இல் திரிதள இராஜகோபுர கும்பாபிசேகம் இடம்பெற்றது. 2012இன் நடுப்பகுதியில் மணிமண்டப திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு 2013இல் ஒரு பகுதி வேலைகள் நிறைவுற்றுள்ளது. மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்திலே பங்குனித்திங்கள் உற்சவம் மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்று வருகின்றது. "பால்குண மாதம்" என்று கூறப்படும் பங்குனி மாதத்தில் சாக்தவழிபாட்டின் சிறப்பையும் முறைகளையும் எடுத்த கூறும் சாக்த தந்திரங்கள் கண்ணகா பரமேஸ்வரிக்குரிய தியான சுலோகங்களையும், பூஜை முறைகளையும், பிரதிஸ்டை முறைகளையும் மிக சிறப்பாக எடுத்து கூறுகின்றன. மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாளுக்குரிய மிக 'சிறப்பான பங்குனித் திங்கள் பொங்கல் நிகழ்வுகளும் பூசைக் கிரமங்களும் இவற்றுடன் தொடர்புபடுவதை உற்று நோக்கியறியலாம்.

மட்டுவிலில் கோவில் கொண்ட அம்மனை வேண்டித் தீவின் பல பாகங்களிலுமிருந்து மக்கள் தமது நேர்த்திக் கடன்களை செய்வதற்காகவும் தரிசிப்பதற்காகவும் பங்குனித் திங்கள் உற்சவ காலத்தில் ஒன்று கூடுவர். அம்பாளின் ஆலயத்திலே உள்ள பழமை வாய்ந்த தீர்த்த கேணியிலே நீராடி புனித நீரினை எடுத்து பொங்கல் செய்து ஆலய முன்றலில் அம்பாளை நினைத்து தாமே நிவேதித்து வணங்கும் சிறப்பு காணப்படுகின்றது.

அடியவர்கள் பல பகுதிகளிலுமிருந்தும் காவடி எடுத்து அம்பாளின் சந்நிதியில் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றுவர். மூர்த்திப் பெருமையும், பொங்கல் தலமாகவும், தீர்த்த விசேடமும் ஒருங்கே அமையப் பெற்ற மட்டுவில் பதி உறைகின்ற கண்ணகை அம்பாளை அடியவர்கள் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் தொழுது அனுக்கிரகங்களை பெற வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.

# மகளிர் இல்லப் பிள்ளைகளின் தந்தை போல விளங்கிய மருத்துவர் செல்லப்பா சபாநடேசன்

தெல்லிப்பழையில் 102வயது வரை வாழ்ந்து செல்லப்பா தம்பதியினரின் தலைமகனாவார் சபாநடேசன். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் கல்வியைப் பெற்றுக்கொண்டு கொழும்பு மருத்துவக்கல்லூரியில் பயிற்சி பெற்று உதவி மருத்துவ உத்தியோகத்தராகவும் (AMO) பின்னர் பதிவு வைத்திய உத்தியோகத்தராகவும் (RMO) அரச சேவையில் இணைந்து இலங்கையின் பல பாகங்களிலும் கடமையாற்றினார். இலங்கையின் பின்தங்கிய கிராமங்களில் மத்திய மருந்தகங்களில் தனி ஒரு வைத்தியராகக் கடமையாற்றும் காலங்களில் மூவின மக்களினதும் நன்மதிப்பையும் கைராசியான மருத்துவர் என்ற பெருமையுடன் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் மீள் நியமனம் பெற்று யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலை, ஏழாலை மருத்துவமனை ஆகிய இடங்களில் தனது சேவையைத் தொடர்ந்தார். இல்லற வாழ்வின் இணைந்து புதல்வனொருவரையும் புதல்வியொருவனையும் பிள்ளைகளாகப் பெற்றார். இவரது துணைவியார் இளவயதிலே நோயுற்றுக் காலமான போதிலும் மறு திருமணம் செய்யாது பிள்ளைகளுக்குத் தாயுமாகி தந்தையுமாகி தனது கடமைகளை நிறைவேற்றினார்.

ஓய்வு பெற்ற பின்னர் துர்க்காதேவி ஆலயத்தின் தெற்குத் திசையில் வாழ்ந்த இவரை எங்கள் தேவஸ்தானம் மகளிர் இல்லப் பிள்ளைகளின் வைத்திய சேவைக்காக இணைத்துக் கொண்டது கால நேரம் தவறாது இல்லப் பிள்ளைகளின் உடல் உளநல மேம்பாட்டை மிகவும் கரிசனையாக கவனித்து தேவையான ஆலோசனை களை வழங்கினார். இல்லப்பிள்ளைகள் ஒவ்வொரு வருக்கும் தனியான கோவைகள் பேணப்பட்டு அவர்களது ஆரோக்கிய முன்னேற்றம் குறித்து பதிவு செய்யப்பட்டது. மனிதாபிமானமும் வைத்திய சேவையும் ஒன்றோடொன்று இணைந்துள்ளது. இவ்விரண்டிற்கும் இலக்கணமாக திகழ்ந்தவர் சபாநடேசன் அவர்கள். இவர் பிள்ளை ஒன்றிற்கு சுகயீனம் ஏற்பட்ட போது நடுநிசி வேளையில் இவரை அணுகியபோது உடன் வந்து தானே வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை செய்வித்தார். இந்நிகழ்வு இவரது மனிதாபிமான, வைத்திய சேவைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

நிர்வாக சபையில் உபதலைவராக விளங்கிய இவரது தந்தையின் மறைவிற்குப் பின் நிர்வாக சபை உறுப்பினராக இவரை தேவஸ்தானம் இணைத்துக் கொண்டது. நிர்வாக சபை ஆற்ற வேண்டி கருமங்களில் பங்கெடுத்துக் கொண்டார். பிற்காலத்தில் கொழும்பில் தங்கியிருந்த போது மாதாந்தக் கூட்டங்களுக்கு தவறாது வருகை தந்து கூட்டங்களில் கலந்து கொண்டார்.

இல்லப் பிள்ளைகளின் மிகுந்த பாசம் கொண்டிருந்த இவர் வருடா வருடம் தனது பிறந்தநாளன்று அவர்களுக்கு சிற்றுண்டி வழங்கி மகிழ்ந்தார். இவர் அமரத்துவம் அடையும் வரை துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கும் மகளிர் இல்லத்திற்கும் ஆற்றிய பணிகளை நன்றியுடன் நினைவு கூர்ந்து அமரர் அவர்களின் ஆத்மா துர்க்கை அம்பாளின் திருவடி நிழலை அடைய பிரார்த்திப்போம்.

நிர்வாக சபை சார்பாக

சு. ஏழூர்நாயகம்

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

* **இணுவில் பரராஜ சேகரப் பிள்ளையார் மகோற்சவம்**

சரித்திப் பிரசித்தி பெற்ற இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோவில் மகோற்சவம் எதிர்வரும் 28.05.2016 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பன்னிரு தினங்கள் மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது. மகாவித்துவான் வீரமணி ஐயர், திருமதி சுசிலா தர்மலிங்கம் இயற்றிய பரராஜசேகரம் பிள்ளையார் பாமாலை 02 இறுவெட்டு வெளியீட்டு விழா கொடியேற்ற விழா அன்று நடைபெறவுள்ளது. சிவஸ்ரீ சோ.அரவிந்தக் குருக்கள் பிரதம குருவாக பணியாற்றுவார்.

* **தெல்லிப்பழை கிழக்கு வயலிலுப்பைப்பதி (ஆலடி) ஸ்ரீ வைரவ சுவாமி திருக்கோவில் மகாகும்பாபிஷேகம்**

தெல்லிப்பழை பெருந்தெரு வீதியில் அமைந்துள்ள ஆலடி வைரவப் பெருமானின் நூதனப் பிரதிஷ்டா பஞ்சகுண்ட மகாகும்பாபிஷேகம் 09.06.2016 வியாழக்கிழமை 09.47 – 10.23 சுப வேளையில் நடைபெறவுள்ளது. கும்பாபிஷேக பிரதம குருவாக வேதாகம சிரோன்மணி குகப்பிரியன், சிவஸ்ரீ செந்தில்நாதக்குருக்கள் கடமையாற்றவுள்ளார்.

* **தெல்லிப்பழை கோயிற்புலம் சந்திரமௌலீஸ்வரர் திருக்கோவில் மகோற்சவம்**

09.05.2016 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 22.05.2016 திருக்கல்யாணத்துடன் நிறைவுபெறும்

* **சுன்னாகம் மயிலணி கந்தசாமி கோவில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம்**

பழமைமிக்க இவ்வாலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகிறது.

* **திருகோணமலை அருள்மிகு இரத்தின சிங்கப்பிள்ளையார் கோவில்**

இத்திருக்கோவிலில் இராஜகோபுரத்திருப்பணி வேலைகள் 04.04.2016 ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகிறது. கோபுரத்துக்கான அடிகல்லை வேதாகம மாமணி சிவஸ்ரீ சோ.ரவிச்சந்திரக்குருக்கள் நாட்டினார்.

* **மாவை கொல்லங்கலட்டி கேணிக்கரை வீரகத்தி விநாயகர் பெருந்திருவிழா**

07.05.2016 சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 20.05.2016 அன்று தேர்த் திருவிழாவும் 21.05.2016 தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்றது.

* **14 ஆவது அனைத்துலகத் தமிழ் உரைநடை ஆய்வு மாநாடு**

திருவையாறு தமிழ் ஐயா கல்விக்கழகமும் வவுனியா கோவில் குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரத் திருக்கோவிலும் வவுனியா தேசிய கல்வியியற்

கல்லூரியும் இணைந்து நடாத்தும் தமிழ் உரைநடை ஆய்வு மாநாடு 22.05.2016 பேராசிரியர் கலாநிதி நாகேஸ்வரன் அவர்கள் (சப்பிரகமுவ பல்கலைக்கழகம்) தலைமையில் நடைபெறவுள்ளது.

* **அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைர விழா மலர் வெளியீடு.**

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைரவிழா ஆண்டை முன்னிட்டு நடைபெற்ற இந்து ஆராய்ச்சி மாநாடு தொடர்பான கட்டுரைகள் அடங்கிய மிகப்பெரிய ஆராய்ச்சி நூல் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் வெளியிடப் படவுள்ளது. மாமன்றத்தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களின் தலைமையில் 28.05.2016 அன்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திலும் 29.05.2016 அகில இலங்கை இந்து மாமன்ற கொழும்புத் தலைமை அலுவலகத்திலும் விழா நடைபெறவுள்ளது. குறிப்பாக பேரூர் ஆதீன இளைய குரு முதல்வர் ஸ்ரீ லஸ்ரீ மருதாசல அடிகளால் மேற்படி விழாவில் கலந்து கொள்ளவுள்ளார்.

* **கிளிநொச்சி சிவபூமி பாடசாலை திறப்பு விழா**

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் மனவளர்ச்சி குறைந்த சிறுவர்களுக்காக சிவபூமி அறக்கட்டளை அமைப்பினால் புதிய பாடசாலை கட்டப்பட்டு 26.05.2016 அன்று கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் திறந்து வைக்கப்பெற்றது. சுவாமி இராமதாசர் அறக்கட்டளையின் பேருதவியில் இப்பாடசாலையின் மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை

24-05-2016





அருள்மிகு
வற்றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலயம்

Print Master. T.P. 021-205 3322